
கல்கி
KALKI
4-8-1957
30 நயா பைசா

வியர்வை நாற்றங்களுக்கும் சாதாரண சரும நோய் களுக்கும் விஞ்ஞானம் தரும் புத்தம்புதிய பதில் . . .

ஆக்டமர்

இந்தியாவிலேயே ஓர் அழகுசாதன சோப்பில் இப்போது உள்ளது!

நீராடும் ஒவ்வொரு முறையும் சருமத்துக்குப் பராமரிப்பு! ஆக்டமர் அடங்கியுள்ள காரணத்தால்தான் ப்ரீஸ் டாய்லெட் சோப் அத்தகைய பராமரிப்பை உங்களுக்கு அளிக்கிறது. மான்ஸான்டோ கம்பெனியின் 'ஆக்டமர்' என்பது அதி நூதனமாக நிரூபணமாகியுள்ள ஓர் சருமக் கிருமிநாசினி—வியர்வை நாற்றம், முகப்பரு போன்ற பற்பல சாதாரண சரும நோய்களுக்குக் காரணமான, கண்ணுக்குப் புலப்படாத கிருமிகளையும் ஒழிக்கவல்லது.
அமெரிக்க மெடிகல் அஸோஸியேஷனால் அதிகார பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது 'ஆக்டமர்'

சுகந்தமணமுள்ள ப்ரீஸ் டாய்லெட் சோப்பை நீங்கள் உபயோகித்துப் பார்ப்பதற்கு இதுவே உகந்த தருணம். தவறாமலும் இடையறாமலும் 3 வீக்குகள் மட்டும் உபயோகித்தாலே, கிருமிகளினின்று கிட்டத்தட்ட விடுதலை பெற்ற சருமம் உங்களுடையதாகிவிடும். வியர்வை நாற்றங்களினின்றும் சாதாரண சரும நோய்களினின்றும் அற்புதமான பாதுகாப்பு என்றால் அதுதான்!



தனிச் சிறப்பு வாய்ந்த அழகுசாதனசோப் இதுவே. இதுவே ப்ரீஸ் சோப்!

BZ. 4-50 TM லண்டனிலுள்ள [illegible] கம்பெனி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரித்தது.

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 17 } இதழ் 1 }

தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

ஹேவிளம்பி ஆடி 20

மகிழ்ச்சி அளிக்கும் நற்செய்தி

மொழி உரிமைக்கு வழியில்லை! பிரஜா உரிமை பறி போய்விட்டது! அரசியல் வாழ்வு அந்தகாரம் சூழ்ந்ததாக இருக்கிறது!

இத்தகைய சோகமான கூக்குரல்கள்தான் சென்ற பல மாதங்களாக இலங்கையிலிருந்து கேட்ட வண்ணமாக இருந்தன.

சிற்சில சமயங்களில் இலங்கை இந்தியர்களின் நிலை மிகவும் நெருக்கடியான கட்டத்தை அடைந்து, எல்லோருக்கும் கவலையைக் கொடுத்தது உண்டு.

இலங்கை இந்தியர்களுக்குக் கதிமோட்சம் ஏற்படுமா என்று எல்லோரும் ஏங்கி வரும் இச் சமயத்தில், சென்ற வாரம் இலங்கையிலிருந்து கிடைத்துள்ள நற்செய்தி சகலருக்கும் மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கிறது.

இலங்கை இந்தியத் தலைவர்களுக்கும் இலங்கைப் பிரதமர் ஸ்ரீ பண்டாரநாயகாவுக்கும் சமரச உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது என்பதே அச் செய்தியாகும்.

இரு சாராரும் பல மணி நேரம் விவாதித்து, பிரச்னைகளை அலசி ஆராய்ந்த பின்பே உடன்பாடு ஏற்படுவது சாத்தியமாகி யிருக்கிறது.

இலங்கைத் தமிழர்கள் அடங்கிய பெடரல் கட்சித் தலைவர்கள் தங்களுடைய சமயோசிதமான நடவடிக்கைகளால், தாங்கள் அரசியல் நிபுணர்கள் என்பதை நிரூபணம் செய்திருக்கிறார்கள்.

தங்களுடைய கொள்கை தர்ம நியாயத்தை அடிப்படையாகக் கொண்டதேயன்றி, வீண் பிடிவாதத்தினால் உருவானதல்ல என்பதை எல்லோரும் அறிந்து கொள்ளும்படி நடந்து கொண்டிருக்கிறார்கள்.

பெடரல் கட்சியினர், இலங்கைப் பிரதமரிடம் இலங்கை இந்தியர் பிரச்னை சம்பந்தமாகத் தங்களுடைய கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தனர்.

1. பெடரல் சர்க்காருக்கு உட்பட்டு, தமிழர் வாழும் பகுதிகளுக்குச் சுயாட்சி அளிக்க வேண்டும். 2. இந்திய வம்சாவளியினருக்குப் பிரஜா உரிமை கொடுக்க வேண்டும். 3. சிங்கள பாஷைக்குச் சமமாகத் தமிழையும் அரசாங்க பாஷையாக அங்கீகரிக்க வேண்டும். 4. வாழையடி வாழையாகத் தமிழர் வாழும் பகுதிகளில் சிங்களவர்கள் ஏராளமாக வந்து குடியேறுவதைத் தடுக்க வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளுக்கு இலங்கை சர்க்கார் இணங்காவிடில், ஆகஸ்டு மாதம் சட்ட மறுப்பு இயக்கம் ஆரம்பித்து, சத்தியாக்கிரகம் செய்யப் போவதாகப் பெடரல் கட்சியினர் அறிவித்திருந்தனர்.

பெடரல் கட்சியினருக்கும் பிரதமருக்கும் நடந்த பேச்சு வார்த்தைகளின் பலனாக ஏற்பட்டுள்ள உடன்பாட்டின்படி சில முடிவுகள் ஏற்பட்டுள்ளன.

பெடரல் சர்க்கார் அமைப்பதற்கோ, தமிழர்கள் பெரும்பாலோராக உள்ள பகுதிகளுக்குச் சுயாட்சி வழங்குவதற்கோ தாங்கள் இணங்க முடியாது என்று பிரதமர் பண்டாரநாயகா சந்தேகத்துக்கு இடமின்றி அறிவித்து விட்டார்.

சிங்களம்தான் ஆட்சி மொழியாக இருக்கும் என்றும், சிங்களத்துக்குச் சமமாகத் தமிழை ஆட்சி மொழியாக அங்கீகரிக்க முடியாது என்றும் தெளிவாகக் கூறிவிட்டார்.

எனவே, பெடரல் கட்சியினர் சமர்ப்பித்த கோரிக்கைகளில் முக்கியமான இரண்டை இலங்கைப் பிரதமர் ஏற்றுக் கொள்ளவில்லை.

வல்லரசுகளின் பீதி



"புலிமீது சவாரி செய்பவர் இறங்கப் பயப்படுவார்கள்" என்று ஒரு பழமொழி உண்டு. இன்று அணுகுண்டு உற்பத்தி செய்யும் வல்லரசுகளின் நிலையும் அவ்விதமே இருக்கிறது.

எனினும், ஓரளவாவது தமிழ் மொழிக்கு உரிய ஸ்தானம் அளிக்க ஸ்ரீ பண்டாரநாயகா முன் வந்தது தமிழ் மக்களுக்குச் சிறிது ஆறுதல் அளிக்கும் விஷயமாகும்.

தமிழ், இலங்கையில் உள்ள சிறுபான்மையோரின் மொழியாக அங்கீகரிக்கப்படும். இலங்கையில் தமிழ் மொழி பேசப்படும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழி நிர்வாக மொழியாக இருக்கும். இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கு, தமிழில் சர்க்காருக்கு எழுதவும், சர்க்காரிடமிருந்து தமிழிலேயே விடைகள் பெறவும் உரிமை உண்டு. ஆரம்பக் கல்வியிலிருந்து உயர்தரக் கல்லூரிப் படிப்பு வரையில் தமிழிலேயே கல்வி பெற உரிமை அளிக்கப்படும். சர்க்கார் உத்தியோகத்துக்கான சகல பரீட்சைகளிலும் தமிழிலேயே எழுதலாம். தமிழ்ப் பகுதிகளில் உள்ள ஸ்தல ஸ்தாபனங்கள் தங்கள் நடவடிக்கைகளைத் தமிழிலே நடத்தவும், மத்திய சர்க்காருடன் தமிழிலேயே கடிதப் போக்குவரத்து நடத்தவும் பூரண உரிமை வழங்கப்படும்.

இவைதான், இலங்கைப் பிரதமர் தமிழ் மக்களுக்கும் தமிழ் மொழிக்கும் அளிக்க இசைந்துள்ள சலுகைகளாகும்.

பெடரல் சர்க்கார் அமைப்புக்கு ஸ்ரீ பண்டாரநாயகா இணங்காவிடினும், தமிழ்ப் பகுதிகளுக்கு ஓரளவு பிராந்திய சுயாட்சி அளிக்க இசைந்திருப்பதாகத் தெரிகிறது.

இரு சாராரும் பரஸ்பரம் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் இருந்ததால்தான் உடன்பாடு ஏற்படுவது சாத்தியமாயிற்று.

சிங்களத்துக்குச் சமமான அந்தஸ்து தமிழ் மொழிக்கு அளிக்காதது, இலங்கைத் தமிழர்களுக்குத் திருப்தியைக் கொடுக்காது என்பது உண்மையே.

எனினும், சத்தியாக்கிரகம் போன்ற கடுமையான முறைகளைக் கைக்கொள்ளாமல் இந்த உரிமைகள் கிடைத்திருப்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது.

அதே சமயம், தமிழ் மொழியின் முக்கியத்தை இவ்வளவு தூரம் அங்கீகரித்துள்ள இலங்கைப் பிரதமர், இருபத்தைந்து லட்சம் மக்கள் பேசும் தமிழ்மொழிக்குச் சம அந்தஸ்து அளிப்பதால், இலங்கைக்கு எவ்விதத் தீங்கும் நேர்ந்துவிடாது என்ற உண்மையை உணர்ந்து கொள்வது கஷ்டமல்ல.

* * *

இந்தியர் பிரஜா உரிமைப் பிரச்னையை விரைவில் பரிசீலனை செய்வதாகவும் இலங்கைப் பிரதமர் கூறியுள்ளார்.

இப்போது ஏற்பட்டுள்ள உடன்பாட்டை, ஜூலை மாதம் 28-ந் தேதி மட்டக்களப்பில்

ஆபத்தான விளையாட்டு



அமெரிக்கா போர்த்தளவாடங்கள் கொடுத்ததன் விளைவாகப் பாகிஸ்தான் அண்டை நாடுகளுக்குப் பெரும் ஆபத்தாக இருந்து வருகிறது.

கூடிய பெடரல் கட்சியின் வருடாந்திர மகா நாடு ஏக மனதாக அங்கீகரித்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

பெடரல் கட்சி-பண்டார நாயகா ஒப்பந்தமானது ஒரு பெரிய முன்னேற்றமாகும் என்று ஸ்ரீ தொண்டமான், ஸ்ரீ அஜீஸ் போன்ற தலைவர்களும் பாராட்டி, அந்த உடன்பாட்டுக்குத் தங்களுடைய சம்மதத்தையும் தெரிவித்திருக்கிறார்கள்.

புதிய உடன்பாட்டின் மூலம் அளிக்கப்பட்டுள்ள சலுகைகளுக்குத் தீவிர சிங்களவாதிகள் முட்டுக்கட்டை போடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது, ஸ்ரீ பண்டார நாயகா சர்க்காரின் முழுமுதற் கடமை என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

மேற்படி சலுகைகளைக் காலதாமதமின்றிச் சட்டபூர்வமாக அமுலுக்குக் கொண்டு வருவதே, இடையூறுகள் எதுவும் ஏற்படாமல் தடுப்பதற்கான வழியாகும்.

ஒரு புறத்தில் சத்தியாக்கிரகத்துக்கும் மற்றொரு புறம் அடக்குமுறைகளுக்கும் இடம் கொடாமல், இரு சாராரும் சமரசமான ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டதற்காக, இலங்கை இந்தியத் தலைவர்களையும் இலங்கைப் பிரதமரையும் மிகவும் பாராட்டுகிறோம்.

நடுநிசியும் நல்லவேளையும்!

ஆகஸ்டு மாதத்தை இந்திய மக்கள் என்றென்றும் மறக்க முடியாது. பாரத மக்களின் அடிமை இருள் அகன்று சுதந்திர ஒளி தோன்றிய ஆகஸ்டு மாதம் பதினைந்தாம் தேதியை இந்த வருஷத்தில் மற்ற எந்த வருஷத்தையும் காட்டிலும் அதிக விசேஷமாகக் கொண்டாடத் தீர்மானித்திருக்கிறார்கள். ஏனெனில் அந்தச் சுபதினத்தன்று பாரதநாடு சுதந்திரம் பெற்றுச் சரியாகப் பத்து ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. அத்துடன், பாரத அன்னையின் விடுதலைக்காக இந்தியத் தலைவர்களும் மக்களும் வீரப் போர் புரிந்து உயிர்த் தியாகம் செய்த 1857-ம் வருஷத்திய சுதந்திரப் போர் நிகழ்ந்து சரியாக நூறு ஆண்டுகள் ஆகின்றன. எனவே, இந்த ஆண்டு சுதந்திர விழா இரட்டிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததல்லவா? எல்லோரும் சிறப்பாகக் கொண்டாட வேண்

டிய இந்தப் புனித மாதத்தை, தமது தந்தி. தபால் இலாக்கா ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்குத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்! அவர்களுடைய தற்போதையத் திட்டத்தின்படி அந்த வேலை நிறுத்தம் இம் மாதம் 8-ம் தேதி நடுநிசியில் சுபயோக சுப வேளையில் ஆரம்பமாகுமாம்.

அவ்வேலை நிறுத்தத்தைத் தவிர்ப்பதற்காக, பாரதப் பிரதமர் ஜவாஹர்லால் நேருவும் இந்திய சர்க்கார் தொழில் மந்திரி ஸ்ரீ ஜி. எல் நந்தாவும் எவ்வளவோ முயற்சி செய்தும் பயன்படவில்லை. தந்தி, தபால் ஊழியர் பெடரேஷன் பிரதிநிதிகளுடன் நேருஜி ஒரு மணி நேரத்துக்குமேல் கலந்து பேசி, அவர்களது மனத்தை மாற்ற முயன்றார். தபால், தந்தி ஊழியர்களின்சம்பளம் முதலிய விவரங்களை ஒரு கமிஷனின் பரிசீலனைக்கு விடவும் நேருஜி இசைந்தார். ஆனால் உடனே கிராக்கிப்படியை உயர்த்துவது பற்றியும், கிராக்கிப்படியை அடிப்படைச் சம்பளத்துடன் இணைப்பது பற்றியும் தாம் எதுவும் சொல்வதற்கில்லை என்று நேருஜி அறிவித்ததால், சமரசப் பேச்சுகள் முறிந்து விட்டன.

அதனால், தாங்கள் முதலில் போட்டுள்ள திட்டப்படி ஆகஸ்டு மாதம் 8-ம் தேதி வேலை நிறுத்தத்தைத் தொடங்கப் போவதாக பெடரேஷன் நிர்வாகிகள் அறிவித்துள்ளனர்.

* * *

வேலை நிறுத்தம் செய்வோர் தங்கள் சொந்த நலனைப் போல் பொதுமக்களின் நலனையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று சமீபத்தில் குறிப்பிட்டிருந்தோம். தற்போது இந்தியாவெங்கும் தபால், தந்தி ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வதால் பொதுமக்களுக்கு எவ்வளவு அசௌகரியம் ஏற்படும் என்பதை மேற்படி ஊழியர்கள் எண்ணிப் பார்க்க வேண்டியது அவசியமாகும். அதனால் ஐந்தாண்டுத்திட்டத்துக்கும் ஆக்க வேலைகளுக்குங்கூடக் குந்தகம் ஏற்படும், இதுபோன்ற வேலை நிறுத்தங்களால் நாட்டின் பொருளாதார நிலைகூடப் பாதிக்கப்படும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

தபால், தந்தி ஊழியர்களின் கோரிக்கைகள் நியாயமற்றவை என்று நாம் கூறவில்லை. விலைவாசிகள் நாளுக்கு நாள் உயர்ந்து வரும் இந்த நாளில் அவர்கள் கிராக்கிப்படியை உயர்த்த வேண்டும் என்று கோருவது அநியாயமானது என்று யாரும் கூறமாட்டார்கள். ஆனால் அது போன்ற அவர்களுடைய குறைகளைக் கமிஷனின் பரிசீலனைக்கு விடுவதென்ற யோசனைக்கு இசைய அவர்கள் ஏன் மறுக்க வேண்டும் என்பதுதான் கேள்வியாகும். பாரதப் பிரதம மந்திரி தாமாக வலுவில் பெடரேஷன் பிரதிநிதிகளை அழைத்து அவர்களைச் சமாதானப் படுத்த முயன்றிருப்பதிலிருந்து அவ்விஷயத்தில் நேருஜிக்கு உள்ள அக்கறையைச் சகலரும் தெரிந்து கொள்ளலாம்.

இறுதியாக மேற்படி ஊழியர்கள் தங்கள் கோரிக்கைகளைப் பாரபட்சமற்ற ஒரு கமிஷனின் பரிசீலனைக்கு விட இணங்கியிருக்கலாம். அந்த ஒரு நியாயமான வழி பாக்கியிருக்கும் போது. தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்பதுபோல் தபால், தந்தி ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தே தீருவோம் என்று கூற முன்வந்திருப்பது வருந்தத் தக்கதாகும். எனினும், இன்னும் காலம் கடந்துவிடவில்லை. வேலை நிறுத்தத்தால் ஏற்படக் கூடிய நிச்சயமற்ற பலனில் அவர்கள் அதிக நம்பிக்கை வைக்காமல், நிச்சயமான பலனைக் கொடுக்கக் கூடிய சமரச முயற்சிகளில் ஒத்துழைக்க வேண்டும் என்பதே நமது கோரிக்கையாகும். வேலை நிறுத்த யோசனையை அவர்கள் விட்டு விடுவார்கள் என்றே எதிர்பார்க்கிறோம்.

டாக்டர் நாயுடு மறைந்தார்

ஒரு காலத்தில் 'தென்னாட்டுத் திலகர்' என்று புகழ் பெற்றுத் தமிழ் நாடெங்கும் வீர முழக்கம் செய்த டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு சென்ற வாரம் திடீரென்று காலமாகிவிட்டார். இச்செய்தி கேட்ட தமிழ் நாட்டு மக்கள் மிகுந்த துக்கத்தில் ஆழ்ந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. எழுபது வயதான டாக்டர் நாயுடு தம்முடைய வாழ்க்கையில் நாற்பதாண்டுகள் அரசியலில் ஈடுபட்டுத் தேசத் தொண்டுபுரிந்தார். சிறைவாசம் என்றால் மக்கள் நடுங்கிய காலத்தில், அதாவது 1918-ம் வருஷம் அவர் தேசப் பணி புரிந்த குற்றத்துக்காகப் பதினெட்டு மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். அவர் சார்பிலே ராஜாஜி வாதாடியதும், அதன் பயனாக டாக்டர் நாயுடு விடுதலை பெற்றதும் தமிழ்மக்கள் அறிந்ததாகும். அதன் பின்னர் மற்றும் பல தடவைகள் அவர் அரசியல் 'குற்றம்' புரிந்ததன் காரணமாகச் சிறை செல்லவும் சொத்துக்களை இழக்கவும் நேர்ந்தது உண்டு.



''தமிழ் நாடு'' பத்திரிகையின் மூலம் டாக்டர் நாயுடு செய்த தொண்டுகளையும் தமிழ் மக்கள் மறக்க முடியாது. ஹிந்து மதத்தில் மிகுந்த பற்றும் தெய்வ நம்பிக்கையும் கொண்டவர் டாக்டர் நாயுடு. அவர் தமிழ் பேச்சு நடையை இளக்கும் வழிகாட்டி மொழிச் சேவையும் செய்தார். எழுபது ஆண்டுகள் வாழ்ந்து தம்முடைய தொண்டுகள் பயன் பெற்று வளர்ந்ததைப் பார்த்த பின்னர் மறையும் பாக்கியம் பெற்றார். என்றாலும், அவரது பிரிவால் துக்கத்தில் ஆழ்ந்துள்ள அவரது குடும்பத்துக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகுக.

அன்பார்ந்த நேயர்களுக்கு

இந்தக் "கல்கி" இதழின் அட்டையில் நேயர்கள் ஒரு அரிய காட்சியைக் கண்டிருப்பார்கள். கொழுந்துவிட்டு எரியும் தீயிலிருந்து தன்னுடைய உயிரையும் திரணமாக மதித்துத் தன் சகோதரனையும் அவன் குடும்பத்தையும் காப்பாற்றிய ஒரு பிரம்மசாரியின் தீரத்தைத்தான் அட்டைச் சித்திரமாக வெளியிட்டிருக்கிறோம். மேற்படி சம்பவம் நமது தலைவர் ராஜாஜி அவர்கள் தமிழ்ப்படுத்திக் கொடுத்து இந்த இதழில் வெளியாகி இருக்கும் 'நெருப்பு' என்னும் சிறுகதையில் வருகிறது. ராஜாஜி அவர்கள் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் தொண்டாற்றுவதே தம்முடைய லட்சியமாகக் கொண்டிருக்கிறார் என்பதற்கு "நெருப்பு" என்ற இந்தக் கதையே அத்தாட்சி. ஒரு மனிதரின் வாழ்வில் ஏற்பட்டிருக்கும் இன்னல்களை எடுத்துக்கூறும் இந்தக் கதையை, வேறு யாரும் இவ்வளவு அநுதாபத்துடனும் கலைப் பண்புடனும் தமிழ்ப்படுத்தியிருக்க முடியாது. இடைவிடாத எத்தனையோ வேலைகளுக்கு மத்தியில் ராஜாஜி அவர்கள் இந்தக் கதையைப் படித்து எப்படித் தமிழ்ப் படுத்த முடிந்தது என்பது ஆச்சரியம் உண்டாக்கும் விஷயந்தான்.

ராஜாஜி அவர்கள் இதுபோன்று ஒவ்வொரு வாரமும் அருமையான சிறுகதைகளும் கட்டுரைகளும் எழுதி இன்னும் பல்லாண்டு பல்லாண்டு தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் அளித்து வரப் பிரார்த்திக்கிறோம். அவர் விரும்பும் அன்பும் சமாதானமும் உலகில் வளரட்டும்; அணுகுண்டும் ஜலஜகுண்டும் அடியோடு அழியட்டும்; மக்கள் மத்தியில் பக்தி செழித்துப் பெருகட்டும்; நாட்டின் சுதந்திரம் நல்ல முறையில் வளரட்டும்; நானிலம் எல்லாம் மகிழட்டும்!

*** *** ***

நமது தேசத்தின் சுதந்திர யுத்தம் ஆரம்பித்து நூறு ஆண்டுகள் முடிவடைகின்றன. அந்த நூறாவது ஆண்டு விழாவைத் தேசமெங்கும் கொண்டாடப் போகிறோம். அதைப் போலவே ஒரு பத்திரிகை தன்னுடைய பதினாறாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதும் பொருத்தமாயிருக்கும். ஒரு தேசம் நூறு ஆண்டுகளில் அநுபவிக்கக்கூடிய இன்னல்களையும் இடையூறுகளையும் ஒரு பத்திரிகை தன்னுடைய பதினாறு வயதுக்குள்ளாகவே அநுபவித்துக் கரையேற வேண்டியதாகிறது.

அடிமை இந்தியாவில் யுத்த காலத்தில் குழப்பம் நிறைந்த சமயத்தில் பிறந்த உங்கள் கல்கி பத்திரிகை, எவ்வளவோ இன்னல்களையும் இடையூறுகளையும் தாண்டி இன்று பதினேழாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. இந்தியாவின் அடிமைத்தனம் அகன்று சுதந்திரம் பெற உங்கள் பத்திரிகை ஆற்றிய தொண்டுகள் நீங்கள் அறிந்ததே. இவையெல்லாம் ஆண்டவனின் பெருங் கருணையினாலும் தமிழ் மக்களின் எல்லையற்ற அன்பினாலும் அபிமானத்தினாலுமே சாத்தியமாயிற்று. 1941-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் தேதி வெளியான கல்கியின் முதல் இதழிலிருந்து இன்றுவரை இடைவிடாது ஆதரித்து வந்திருக்கும் எண்ணற்ற நேயர்களுக்கு நமது நன்றியைச் சமர்ப்பிக்கிறோம்.

தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் எல்லாத் துறைகளிலும் தொண்டு செய்வதே கல்கியின் லட்சியம். அந்த லட்சியத்திலிருந்து எள்ளளவும் நழுவாமல் கடைப்பிடித்து வருவதற்குத் தமிழ்த் தெய்வமான முருகன் துணைபுரிவார் என்று நம்புகிறோம்.

*** *** ***

ஆகஸ்ட் 18உ. கல்கி இதழ் இந்திய சுதந்திர நூற்றாண்டு மலராக வெளியாகிறது. எனவே தமிழ் நாட்டில் இந்த நூற்றாண்டு சுதந்திரவிழா தனிக்குதூகலத்துடன் விளங்கப் போகிறது. ராஜாஜி அவர்கள் 1857 என்ற தலைப்பில் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றி அருமையான கட்டுரை ஒன்று எழுதியிருக்கிறார். இதைத் தவிரக் கவிதைகள், கதைகள், கட்டுரைகள், சித்திரப் படங்கள் ஆகிய எல்லா அம்சங்களிலும் இந்தச் சுதந்திர நூற்றாண்டு மலர் இணையற்றுத் திகழும்.

கல்கியின் பதினேழாவது ஆண்டு ஆரம்பமாகும் இந்தச் சந்தர்ப்பத்தில், வரும் சுதந்திர நூற்றாண்டு மலரில் தமிழ் நாட்டின் சிறந்த நாவலாசிரியர் திரு அகிலன் எழுதும் பாவை விளக்கு என்னும் புதிய சமூகத் தொடர்கதையும் ஆரம்பமாகிறது. நான்கு பெண்மணிகளின் பாதுகாப்பில் வளர்ந்த லட்சியவாதியின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் அருமையான காதல் ஓவியம் பாவை விளக்கு. இந்த அருமையான தொடர்கதையை நேயர்கள் ஆகஸ்டு 18-ந் தேதி கல்கி இதழிலிருந்து தொடர்ந்து படித்து மகிழலாம்.

*** *** ***

தேசம் சுதந்திரம் பெற்று பத்தாண்டுகள் ஆகிவிட்டன. இந்தப் பத்தாண்டு காலத்தில் நாட்டின் சுதந்திரம் நல்ல முறையில் காப்பாற்றப்பட்டு வருகிறதா? நாட்டில் முன்னேற்றத்துக்கான காரியங்கள் நடைபெற்று வருகின்றனவா? ஒவ்வொரு ராஜ்யமும் எவ்வளவு சாதனைகளைப் புரிந்திருக்கின்றன? இவற்றையெல்லாம் நேயர்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா? அதற்காக நமது நிருபர் திரு கொடுமுடி ராஜகோபாலன் அவர்கள் பாரத நாட்டின் பல ராஜ்யங்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார். அவர் பார்த்து வந்த ராஜ்யங்களுக்கு நமது நேயர்களையும் அழைத்துச் செல்லப் போகிறார். ஆகஸ்ட் 25-ந் தேதி கல்கி இதழில் "குமரி முதல் இமயம் வரை" என்னும் தலைப்பில் அவர் எழுதியுள்ள முதல் கட்டுரை வெளியாகிறது. பின்னர் தொடர்ந்து வெளியாகும். முதலில் கேரள நாட்டிலிருந்து அவருடைய யாத்திரை தொடங்குகிறது. நேயர்கள் தொடர்ந்து படித்து நமது அண்டை ராஜ்யங்களில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளைத் தெரிந்து கொள்ளக் கோருகிறோம். இவைகளைப் படிப்பதன்மூலம் தேசம் சுதந்திரத்துக்குப் பின் அடைந்து வரும் முன்னேற்றத்தையும் தெரிந்துகொண்டு மகிழலாம்.

வணக்கம். —ஆசிரியர்

உண்மைக்கு ஒரு மனிதர்

"உண்மையைத்தான் எழுதுவேன்; உண்மையை எழுதத்தான் எழுதுவேன். என்னால் உண்மையை எழுதாமல் இருக்க முடியவே முடியாது. எனக்கு அறுபது வயது என்று சொல்வது அவ்வளவு உண்மையல்ல. எனக்கு அறுபத்தோரு வயதாகிறது. எனக்கு உடம்பில் தெம்பிருக்கிறது; உள்ளத்தில் உணர்ச்சி இருக்கிறது. என்னால் சும்மா இருக்க முடியாது" என்று பிடிவாதம் பிடித்து அப்படி உண்மையை எழுதுவதற்காக ஒரு பத்திரிகையை ஆரம்பித்து நடத்தும் தன்னல மற்ற எழுத்தாளர் ஸ்ரீ காஸா சுப்பாராவ்.

உண்மையை எழுதும் சுதந்திரத்துக்காகவே 'ஸ்வராஜ்யா' என்னும் பத்திரிகையை ஆரம்பித்து நஷ்டம் ஏற்பட்டபோதிலும் பொருட்படுத்தாமல் தொடர்ந்து நடத்தி வரும் தீரர் ஸ்ரீ காஸா சுப்பாராவ். அந்தப் பத்திரிகையின் முதல் ஆண்டு விழாவும், ஸ்ரீ காஸா சுப்பாராவ் அவர்களின் அறுபத்தோராம் ஆண்டு மணி விழாவும், சென்ற மாதம் 21ந்தேதி சென்னை தாசப்பிரகாச மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்த விழாவுக்கு ஒவ்வொரு துறையிலும் பிரபலமாயுள்ள பிரமுகர்கள் பலரும் உற்சாகத்துடன் வந்திருந்தனர். இந்தக் காட்சி சென்னை நகரமே திரண்டு வந்திருக்கிறதோ என்று எண்ணும்படி இருந்தது.

கல்வி மந்திரி, உயர் நீதிமன்றத்து நீதிபதிகள், படாதிபதிகள், தொழில் அதிபர்கள், பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், தொழிலாளர்கள் எல்லாரும் திரண்டு வந்திருந்தனர்.

எல்லா விழாவிலும் விழாவின் நாயகர் முன்னால் வந்திருப்பார். பிரமுகர்கள் பின்னால் வருவார்கள். ஆனால் காஸாவின் மணி விழாவில் பிரமுகர்கள் எல்லாரும் ஒரு மணி நேரத்துக்கு முன்னாலேயே வந்து விட்டார்கள். ஸ்ரீ காஸா அவர்கள் சற்றுத் தாமதமாகத் தான் வந்தார். அவர் தாசப் பிரகாச மண்டபத்தில் நுழையும்போது மண்டபத்திலகூடியிருந்த பிரமுகர்கள் உற்சாகமாகக் கரகோஷம் செய்து அவரை வரவேற்றதைப் பார்த்தால் "உண்மைக்கு ஒரு மனிதர் காஸா சுப்பாராவ்! உண்மைக்கு ஒரு மனிதர் காஸா சுப்பாராவ்!" என்று எல்லாரும் ஆமோதிப்பதுபோல் இருந்தது.



திரு காஸா சுப்பாராவ்

ஸ்ரீ காஸா சுப்பாராவ் வெறும் பிரசார தேசபக்தரோ, பேனா முனையில் வீரத்தைக் காட்டுபவரோ, தம் தேச பக்தியைப் பணம் பண்ணுபவரோ அல்ல. தேசத்தின் விடுதலைக்காக நடைபெற்ற பற்பல இயக்கங்களில் ஈடுபட்டுச் சிறை சென்ற உண்மைத்தியாகி.

நமது நாட்டுக்குள் ஆங்கில பாஷையை வெகு லாகவத்துடன் கையாளக்கூடிய அற்புதமான எழுத்தாளர் ஸ்ரீ காஸா சுப்பாராவ். அவருடைய எழுத்தில் வழவழா கொழ கொழா சமாசாரமே இருக்காது. அவருடைய நடை ஆணித்தரமான நடை; காரசாரமான நடை; பண்பும் படிப்பும் நிறைந்த அறிஞர்களைப் பிரமிக்க வைக்கும் மிக உயர்ந்த நடை. அன்று ஸ்ரீ காஸாவின் மணிவிழாவுக்கு வந்தவர்களில் பலர் ஸ்ரீ காஸாவின் பேனா முனைத் தாக்குதல்களுக்கு உள்ளானவர்கள்தான். ஆனாலும் அவர் எழுத்தின் வேகமும், அதில் உள்ள இலக்கியத் தன்மையும் அவர்களை மயக்கி விட்டிருக்கின்றன. தாங்கள் ஸ்ரீ காஸாவினால் தாக்கப்பட்டவர்கள் என்பதைக்கூட மறந்து ஸ்ரீ காஸாவிடம் அன்பும் பிரியமும் மதிப்பும் மரியாதையும் கொள்ளும்படி செய்து விட்டிருக்கின்றன.

அவருடைய 'ஸ்வராஜ்யா' பத்திரிகையைப் புரட்டிப் பார்த்தோமானால் அதில் வெளியாகியிருக்கும் ஒவ்வொரு விஷயமும் உயிர்த் துடிப்புடன் விளங்குவதைப் பார்க்கலாம். அன்று பேசி மறுநாள் மறந்து விடக்கூடிய சாதாரண சம்பவங்கள்கூட அவர் எழுத்தில் உயிர்பெற்று இலக்கிய மணத்துடன் விளங்குவதைக் காணலாம். மற்றப் பத்திரிகைகளில் வெளியாகும் விஷயங்களை மேலெழுந்த வாரியாகப் பார்த்து விட்டுத் தள்ளி விடுவதுபோல அவர் பத்திரிகையில் வெளியாகி இருக்கும்விஷயங்களைத் தள்ளிவிட முடியாது. நிதானமாகப் படித்து ரஸித்து அனுபவிக்க வேண்டியவை.

'இத்தகைய ஆற்றல் பெற்ற எழுத்தாளருக்கு, உண்மையை உள்ளபடி எழுதும் பத்திரிகையாளருக்கு ஒரு பத்திரிகை இல்லை என்றால் அதைவிட நமது தேசத்துக்கு நஷ்டம் வேறு ஒன்றும் கிடையாது. தேசத்தின் அதிர்ஷ்டம் தான் ஸ்ரீ காஸா சுப்பாராவ் "ஸ்வராஜ்யா" பத்திரிகை ஆரம்பித்து நடத்தி வருவது என்று கூறலாம்.

'ஸ்வராஜ்யா' பத்திரிகை முதல் ஆண்டு விழாவைக் கொண்டாடியது போலவே இரண்டாவது ஆண்டு விழா, மூன்றாவது ஆண்டு விழா என்று பல மணி விழாக்களைக் கொண்டாடிக் கொண்டேயிருக்கவேண்டும். இதன் ஆசிரியர் திரு காஸா சுப்பாராவ் அவர்கள் என்றும் இளமையோடு இருந்து தாம் கண்ட உண்மைகளை உள்ளபடி எழுதிவரப் பிரார்த்திக்கிறோம்.


இணையற்ற
எழிலுக்கு...
Remy
ரெமி
ஸ்னோ • பவுடர்

17-வது அகில இந்திய காதி, கைத்தறி, சுதேசி, கைத்தொழில் & சேலம் நகராட்சி உயர்நிலைப்பள்ளி நூற்றாண்டு விழா

சிறப்புப் பொருட்காட்சி, 1957, சேலம்

(சேலம் நகரசபையால் நடத்தப்படுவது)

இசை, நடன, நாடக நிகழ்ச்சிகள் - கலை அரங்கில் தினசரி மாலை 6-30 மணிக்கு

○●○

1957 ஆகஸ்ட்	விவரம்	நிகழ்ச்சி
4 ஞாயிறு	ஸ்ரீ. சித்தூர் சுப்ரமணிய பிள்ளை & மதுரை சோமு ... (10 பக்க வாத்தியங்களுடன்)	பாட்டு
5 திங்கள்	குமாரி வல்லபாய்	பாட்டு
6 செவ்வாய்	குமாரி பத்மினி பிரியதர்சினி	நடனம்
7 புதன்	டான்ஸ் டைரக்டர்கள் சம்பத்குமார் & சின்னிலால் அவர்களின் சினிமாபாணி கோஷ்டி நடனம் ... (பிரபல சினிமா நடிகை குமாரி சீதா மற்றும் சினிமா நடன கோஷ்டியைச் சேர்ந்த 6 பெண்களும் 3 ஆண்களும்)	நடனம்
8 வியாழன்	கந்தர்வகான ரத்ன ஸ்ரீ எம். கே. தியாகராஜ பாகவதர் & பார்ட்டி	... ஹரிதாஸ் நாடகம்
9 வெள்ளி	கலைவாணர் ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணன் & பார்ட்டி	... மணமகள் நாடகம்
10 சனி	குமாரி ராஜாமணி & பார்ட்டி ... 'பாசவலை' சினிமா புகழ் 'லொள் லொள்'	நடனம்
11 ஞாயிறு	ஸ்ரீ எஸ். எஸ். ராஜேந்திரன் & பார்ட்டி ...	மணிமகுடம் நாடகம்
12 திங்கள்	ஷை ...	புதுவெள்ளம் நாடகம்
13 செவ்வாய்	சினிமா புகழ் குமாரி ஈ. வி. சரோஜா	நடனம்
14 புதன்	ஸ்ரீ டி. ஆர். மகாலிங்கம் & பார்ட்டி ... (திருச்சி லோகநாதன் - நாரதர் ஜீ. டி. தாராபாய் - வள்ளி)	...வள்ளித் திருமணம் நாடகம்
15 வியாழன்	ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள்	பாட்டு
16 வெள்ளி	தென்னிந்திய கிராமீய நடனக் கலைவிழா ... ... (கரகம், காவடி, கிக்கட்டி, வாத்யம் பொம்மலாட்டம், பொய்க்கால் குதிரை தெருக்கூத்து, வில்லுப் பாட்டு)	நடன விழா
17 சனி	நேஷனல் தியேட்டர்ஸ் ... ... (சினிமா புகழ் எஸ். மனோகர், எம். எஸ். திரௌபதி நடிப்பது)	இலங்கேஸ்வரன் நாடகம்
18 ஞாயிறு	ஷை	ஷை
19 திங்கள்	ஷை	ஷை
20 செவ்வாய்	ஷை	ஷை
21 புதன்	சினிமா பின்னணி பாடகர் ஸ்ரீ டி. எம். சவுந்திரராஜன்...	பாட்டு
22 வியாழன்	ஸ்ரீ எம். ஜி. ராமச்சந்திரன் & பார்ட்டி	நாடகம்
23 வெள்ளி	சேவா ஸ்டேஜ் சர்வீஸ் (எஸ். வி. சகஸ்ரநாமம் பிரமீளா நடிப்பது)	... பிரசிடெண்ட் பஞ்சாட்சரம் நாடகம்
24 சனி	ஷை	ஷை
25 ஞாயிறு	ஷை	மல்லியம் மங்களம் நாடகம்
26 திங்கள்	ஷை	ஷை
27 செவ்வாய்	பேரூர் சுப்ரமணிய தீக்ஷிதர்	...ஹார்மோனியம்
28-8-57 முதல் 1-9-57 வரை	சிவாஜி நாடக மன்றம் ... (பிரபல சினிமா புகழ் சிவாஜி கணேசன் நடிப்பது)	... வீரகட்டபொம்மன் நாடகம் (5 நாட்கள்)

சேலம், 28-7-57

பொருட்காட்சிக் கமிட்டியார்

மாதர்குல திலகங்கள்



வான் புகழ் வள்ளுவரின் இல் வாழ்வை நல்வாழ்வாக்கிய புனிதவதி அவர் மனைவி வாசுகியம்மையாராவாள். அன்னை கஸ்தூரிபாய் உலகம் போற்றும் உத்தமரான மகான் காந்திக்கு, வலது கரமாகஇருந்து தம் வாழ்நாளைக் கழித்தார்.

மேற்கூறிய மாதர்குல திலகங்களின் வரிசையில் வைத்துப் போற்ற வேண்டியவர் திருமதி லோகசுந்தரி ராமன். உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி ஸர் சி. வி. ராமனின் மனைவியார்.

இந்த அம்மையார் இராமநாத புரத்துக்கு அருகில் உள்ள கீழ்க்கரை என்ற சிற்றூரில் கடற்கரை சுங்க இலாகாவில் வேலை பார்த்த கிருஷ்ணசாமி ஐயருக்கு ஒன்பதாவது புதல்வியாகப் பிறந்தார். மூன்று வயது முதலே வீட்டு வேலைகள் செய்வதில் ஈடுபடலானார். பெண்களைப் பள்ளிக்கே அனுப்பாத காலத்தில் இம்மங்கையின் பெற்றோர் லோகசுந்தரியை ஆறாம் வகுப்புவரை படிக்க வைத்தனர். பதின்மூன்றும் வயதில் லோகசுந்தரிக்குத் திருமணம் நடைபெற்றது.

திருமதி லோகசுந்தரி ராமன், பள்ளிப் படிப்பு என்று இல்லாவிட்டாலும், பல பாஷைகளைப் படிக்கவும், பேசவும் அந்தந்த மொழிகளில் பிரசங்கம் செய்யும் தன்மையும் பூரணமாகப் பெற்றுள்ளார். தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, வங்காளி, உருது, ஆங்கிலம் ஆகிய பல மொழிகளில் வல்லுநராக இருக்கிறார். தம் கணவர் சென்ற இடங்களுக்கெல்லாம் தாமும் சென்று அம்மொழிகளைப் பயின்று அம்மொழி பேசும் மக்களிடம் அளவளாவிச் சேவை செய்து அநுபவம் பெற்றவர். இம்மாதரசி தம் கணவருடன் லண்டன், ஸ்வீடன், ஜெர்மனி, பிரான்ஸ் முதலிய ஐரோப்பிய நாடுகளுக்குப் பிரயாணம் செய்திருக்கிறார்.

இக்கற்புக்கரசி தம் கணவருக்குத் தொண்டு செய்வதுடன் அல்லாமல் பிற மக்களிடமும் அன்புகொண்டு சேவை செய்து வருகிறார். நோயாளிகளை மருத்துவச் சாலைக்குக் கொண்டு செல்லுதல், ஏழை மாணவர்களைப் பள்ளிகளில் சேர்த்தல், வேலை இல்லாதவர்களுக்கு வேலை வாங்கிக் கொடுத்தல் ஆகிய இவ்வுதவிகளை அன்புடன் செய்து வருகிறார். இதோடு ஏழைக் குழந்தைகளின் நல்வாழ்வுக்கான ஓர் நிர்வாகக் குழுவின் தலைவியாக இருந்து கிராமங்களிலுள்ள சிறு குழந்தைகள் பள்ளிகளுக்கு வேண்டிய உதவி நிதி கொடுக்கிறார்.

கணவர் உடல்நலக் குறைவாக இருக்குங்கால் அவருடைய காரியாலயக் கணக்கு, கடிதங்கள், விஞ்ஞானக் கூடத்தை வெளிநாடுகளிலிருந்து காண வரும் விஞ்ஞானிகளுக்குக் காண்பித்தல், அவர்களுக்கெல்லாம் விருந்துகள் அளித்து உபசரணைகள் செய்தல் ஆகிய பல பணிகளையும் முகமலர்ச்சியோடு செய்து வருகிறார் திருமதி லோகசுந்தரி ராமன்.

ஸர் சி. வி. ராமன் அவர்கள் விஞ்ஞான உலகிலேயே ஓர் யோகி என்று உரைக்கலாம். நம் நாட்டில் பல மகான்கள், யோகிகள், ஞானிகள் தோன்றியிருக்கின்றனர். அவர்கள் எல்லோரும் தேகம் அழியக்கூடியது என்று மோட்சத்தை நாடுகின்றனர். அவர்கள் ஆத்ம ஞானத்தைப் பெற்று வீடு இன்பத்தைப் பெற வழி வகுக்கின்றனர். பிறரும் பின்தொடரும்படி யோக மார்க்கங்களைப் பயிற்றுகின்றனர். ஆனால் விஞ்ஞான மேதை ராமனோ உலகம் அறிந்த உத்தம புருஷர். அவர் உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் விஞ்ஞான ஆராய்ச்சியிலேயே அர்ப்பணம் செய்துவிட்டார். அவருக்குத் தம் வீட்டைப் பற்றியோ, உறவினரைப் பற்றியோ நினைவே இருக்காது. அவர் சிந்தனை எல்லாம் ஆராய்ச்சியில்தான் மூழ்கியிருக்கும்.

இவர் ஆராய்ச்சியையும், விஞ்ஞான மேதையையும் இடைவிடா முயற்சியையும் நாம் பார்க்கும்போது யோகிகளும், மகான்களும் இப்படித்தான் தவநிலையில் இருப்பர் என்று எண்ணத் தோன்றுகிறது. இந்த இடைவிடா ஆராய்ச்சி செய்வதற்கு அவர் நோய் நொடி அற்று இருக்கவேண்டுமல்லவா?

'' தற்காத்துத் தற்கொண்டாற் பேணித்தகை சான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் ''

என்ற தெய்வத் தமிழ்மறையின் வாக்குப்படி ஒரு லட்சிய மனைவியாக, பதிக்கேற்ற பத்தினியாக வாழும் திருமதி லோகசுந்தரிராமன் விழுமிய புகழ் எய்திப் பல்லாண்டு இனிது வாழ வேண்டும்.


அகிலன்
புதிய சமூகத் தொடர் கதை
கல்கி
ஆகஸ்ட்
18

எழுதும்



* இந்தத் தொடர்கதையில் தேவகி, செங்கமலம், கௌரி, உமா என்னும் நான்கு கதாநாயகிகள் வருகிறார்கள். இவர்களில் யார் முக்கிய கதாநாயகி, யார் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது என்று சொல்வது எளிய காரியமல்ல. நேயர்கள் தங்கள் உசிதம்போல் நிர்மானித்துக் கொள்ள வேண்டியது தான். கதையில் வரும் ஒரு நிகழ்ச்சி இந்தப் பக்கங்களில் சித்திரமாக அமைந்திருக்கிறது. கதாநாயகனான தணிகாசலத்தின் மடியிலே தேவகி பேனாவைச் செருகுகிறாள். அப்படியே அவன் இதயத்தில் தன் அன்பையும் செருகி விடுகிறாள். அது தணிகாசலத்தின் உள்ளத்தில் புயல் அடித்து அலை எழுந்து கொந்தளிப்பை உண்டாக்குகிறது. இப்போது இவ்வளவுதான். மற்ற விவரங்கள் பின்னால்............*



பாவை விளக்கு

இதழில் ஆரம்பமாகிறது

நெருப்பு

★★★ [இந்தக் கதை ஒரு அமெரிக்கப் பத்திரிகையில் வெளியானது. அதைப் படித்தபோது, யுதிஷ்டிரனுக்கு மார்க்கண்டேயர் சொன்ன பிரம்மச்சாரியின் கதை என் நினைவுக்கு வந்தது. இந்தக் கதை அமெரிக்க யூதர்களில் சிறந்த கதையாசிரியர் ஐஸாக் பஷாவிஸ் ஸிங்கர் எழுதியது. அவரிடமும் 'காமெண்டெரி' என்ற மாதப் பத்திரிகாசிரியரிடமும் சம்மதம் பெற்றுத் தமிழ்ப்படுத்தி யிருக்கிறேன்.]

ஒரு கதை சொல்லுகிறேன், கேளுங்கள். ஏதோ புராணம் படித்துச் சொல்லவில்லை. எனக்கே நேர்ந்த கதை. இத்தனை வருஷங்கள் இதை நான் யாருக்கும் சொன்னதில்லை. மூடி வைத்திருந்தேன். இப்போது அந்திம காலம் நெருங்கி விட்டது; இந்தப் பிச்சைக்கார விடுதியிலிருந்து நேரே மயானம் செல்லும் காலம் வந்து விட்டது; சொல்லுகிறேன், எல்லாருக்கும் தெரிய வேண்டியது.

இங்கே வாரந்தோறும் உபதேசம் செய்ய வரும் சாமியாரிடம் விஷயத்தைச் சொல்லலாம் என்று பல தடவை எண்ணினேன். ஆனால் என் அண்ணனுடைய மக்களும் பேரன்மார்களும் நொந்து கொள்வார்களே என்றுஎண்ணி யாருக்கும் சொல்லாமல் இருந்தேன்.

ராஜாஜி

எங்கள் ஊர் யானுே என்கிற கிராமம். தரித்திர ராஜ்யம் என்று அந்தப் பிரதேசத்துக்கு எல்லோரும் பெயரிட்டிருந்தார்கள். அர்த்தபுஷ்டியான பெயர்.

என் அருமைத் தகப்பனுருக்கு ஏழு குழந்தைகள் பிறந்தன. ஆனால் அவர்களில் ஐந்து பேர் இறந்து போய் இருவர்தான் மிஞ்சினார்கள். கட்டுக்குட்டாக வளர்வார்கள். திடீரென்று சுரம் வந்து ஒருவர் பின் ஒருவராக இறந்து போவார்கள். இப்படி மூன்று பையன்களும் இரண்டு பெண்களும் இறந்து விட்டார்கள். கடைசிக் குழந்தை சைம்ஜோனு இறந்ததும் என் தாயார் (ஆண்டவன் அவளுக்கு அருள்வாளுக; என் பாவத்தை நீக்க எனக்காகவும் ஆண்டவனிடம் பரிந்து பேசுவாளாக) துயரம் பொறுக்காமல் காற்றில் மெழுகுவத்தி அணைந்து போவதுபோல் உயிர் நீத்து விட்டான். உடம்புக்கு ஒன்றுமில்லை. சாப்பாடு பிடிக்கவில்லை. சும்மா படுத்துக் கிடந்தாள். பக்கத்து வீட்டு ஜனங்கள் வந்து கேட்பார்கள்: "பெய்லரிங்கே! என்ன உனக்கு உடம்பில்?" என்பார்கள். "ஒன்றுமில்லை, நான் போகிறேன். அவ்வளவுதான்" என்று பதில் சொல்லுவான். வைத்தியர் வந்து ரத்தக் கொதிப்பு என்று ரத்தம் வடித்தெடுத்தார். திருஷ்டி தோஷம் என்று மந்திரமும் போட்டார்கள். கோமயம் தெளித்தார்கள். ஏதும் பயன்பட வில்லை. இளைத்து வதங்கி வெறும் எலும்புக் கூடானுள். முடிவில் சரணுகதி மந்திரம் சொல்லி விட்டு என்னைப் பக்கத்தில் அழைத்து எனக்குச் சொன்னுள்: "உன் அண்ணன் லிப் நன்ருகப் பிழைத்துக் கொள்வான். அவனைப் பற்றிக் கவலையில்லை. உன்னைப் பற்றித்தான் துக்கம், லீபஸ், நான் என்ன செய்வேன்!" என்று சொல்லி விட்டு உயிர் நீத்தாள்.

அப்பாவுக்கு ஏனோ என்னைப் பிடிக்கவில்லை. லிப் என்னைவிட உயரம், அவன் எங்களுடைய தாய் வழி வாசி. படிப்பது அதிகமில்லை. ஆயினும் துடி. பள்ளிக்கூடத்தில் அவனுக்கு நல்ல பெயர். நான் படிப்பில் எவ்வளவோ கவனம் செலுத்துவேன். பயனில்லை. சொல்லித் தருவதெல்லாம் ஒரு காதில் விழுந்து மற்றொரு காது வழியாகப் போய் விடும். வேதப் புஸ்தகத்தில் கொஞ்சம் தேர்ச்சி பெற்றேன். அவ்வளவுதான்; என் படிப்புநிறுத்தப்பட்டது.

தகப்பனுருக்கு அண்ணன் லிப் என்ருல் மிகப் பிரியம். அவன் ஏதாவது தவறு செய்தால் அப்பா அந்தப் பக்கமே திரும்பிப் பார்க்க மாட்டார். அவன் பிசகு அவர் கண்ணில் படவே படாது-நான் 'துஷ்டன்!' இப்படிச் சொல்லலாகாது. என்னை அடி அடி என்று அடித்துக் கொல்லுவார். கதறி யழுவேன். இறந்து போன பாட்டியின் உருவம் என் கண் முன் வரும். என் நினைவு தெரிந்த வரையில் இப்படித்தான்

நடந்தது. ஒரு சிறு பிழை செய்தேனா, உடனே இடுப்பு வாரை எடுத்து நீட்டி விடுவார். உடம்பெல்லாம் கன்னிப் போய் ரத்தம் கட்டுகிற வரையில் அடிப்பார். ஏன் அங்கே போனாய்? ஏன் இங்கே வந்தாய்?—இதுவே எப்போதும் என் பாடு! பிரார்த்தனை மடத்தில் ஜப காலத்தில் மற்றப் பிள்ளைகளெல்லாம் இங்குமங்கும் திரிந்து விளையாடிக் கொண்டிருப்பார்கள். எனக்கு மட்டும் கடுமையான காவல். ஒரு மந்திரத்துக்கு இல்லாமல் போனேனோ, நல்ல பூசை விழும்!



வீட்டில் எல்லாச் சாக்கிரி வேலையும் நான்தான் செய்ய வேண்டும். மாவு அரைப்பது நான்தான். தண்ணீர் கொண்டு வர வேண்டியதும் நானே! விறகு வெட்டுவதும் நான்தான். நாள் முழுவதும் உழைப்பேன். அடுப்பு மூட்ட வேண்டியது நான். கொட்டகையைப் பெருக்கிச் சுத்தம் செய்வதும் நானே. தாயார் உயிருடன் இருந்த வரையில் என்னை ஒருவாறு காத்துவந்தாள். பிறகு மாற்றாந் தாய் வந்துவிட்டாள். நான் சக்களத்தி மகனாகி விட்டேன். இது என் உள்ளத்தைச் சுடாமல் இருக்கவில்லை. என்ன செய்வது? இயற்கைதானே?


அண்ணனும் எனக்கு எஜமானனாகி விட்டான். 'இதைச் செய். அதைச் செய்' என்று அவனும் உத்தரவிடுவான். லிப்புக்கு நண்பர்கள் சேர்ந்தார்கள். அவர்களோடு சென்று குடிக்கவும் குடிப்பான். மதுபானக் கடையிலேயே எப்பொழுதும் காலம் கழிப்பான்.

எங்கள் ஊரில் ஒரு அழகிய பெண் இருந்தாள். அவளுடைய பெயர் ஹேலா. அவளுடைய தகப்பனாருக்கு ஒரு தானிய மண்டி. நல்ல ஸ்திதியில் இருந்தான். நல்ல மருமகனைத் தேடிக் கொண்டிருந்தான். அவன் ஏற்பாடுகள் எப்படியாயினும் என் அண்ணன் தன் ஏற்பாடுகளைச் சரியாகச் செய்தான். வலை சாமர்த்தியமாகப் போட்டான். ஊரில் விவாகத் தரகு செய்பவர்களைப் பணம் கொடுத்து வசமாக்கிக் கொண்டான். அந்தப் பெண்ணைக் கேட்க வரும் மற்றவர்களை வராமல் செய்துவிட்டான். பெண்ணின் குலத்தைப் பற்றி அவதூறுகள் பரப்பினான். என் அண்ணனுடைய நண்பர்களும் இந்தச் சூழ்ச்சியில் உதவி செய்தார்கள். அவர்களுக்குப் பிராந்தியும் கசகசா மிட்டாயும் கிடைத்தால் போதும், எது வேண்டுமானாலும் செய்வார்கள். பணத்தைப் பற்றி என் அண்ணனுக்கு ஒரு கஷ்டமும் இல்லை. அப்பாவின் பெட்டியைத் திறப்பான். எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு எடுத்துக்கொள்வான். கேள்வி கேட்பார் இல்லை. ஹேலாவின் தகப்பனார் ஒப்புக் கொண்டார். என் அண்ணன் லிப்புக்கு அந்தப் பெண் நிச்சயமாகி விட்டது.

ஊர் எல்லாம் கூடி நிச்சயதார்த்த விழா நடந்தது. மருமகன் ஏதும் தருவது வழக்கமில்லையாயினும், லிப் சொன்னபடி எங்கள் தகப்பனார் இருநூறு பொன் கொடுத்தார். நிறையத் துணிமணிகளுக்கும் ஏற்பாடாயிற்று. விவாகத்தின் போது இரண்டு வாத்திய கோஷ்டிகள் இரண்டு ஊர்களிலிருந்து வந்து வாசித்தார்கள். எல்லாம் பிரமாதமாக நடந்தது.

இவ்வாறு அண்ணன் பெரிய முதலாளி வீட்டு மாப்பிள்ளை ஆகிவிட்டான்.





தம்பியின் கதை வேறு. புதுக் கால் சட்டை இல்லை. வாங்கித் தருகிறேன் என்று அப்பா சொல்லி வந்தார். ஆனால் தள்ளிப் போட்டுத் தள்ளிப் போட்டு, கடைசியில் தைக்க அவகாசமில்லாமல், கிழிந்த உடுப்புகளோடுதான் அந்தக் கல்யாண விழாவில் நின்றேன். சிறு பெண்கள் என்னைப் பார்த்துச் சிரித்துப் பரிகாசம் செய்தார்கள். இது என் ஜாதகம்.

* * *

என் கூடப் பிறந்த ஐந்து பேர்களோடு நானும் ஆறுவதாகச் செத்துப் போவேன் என்று நினைத்தேன். ஆனால் அதிர்ஷ்டம் எனக்கு ஏது? லிப்புக்குக் கல்யாணமாகி அவன் வாழ்க்கை பாக்கியமாகவே நடந்தது. அவனுடைய அதிர்ஷ்டம் விறு விறு என்று ஏறிற்று. தானிய வியாபாரம் லாபகரமாக நடந்தது. யானேவுக்கு அருகில் ஒரு சிற்றாறு. அந்த ஆற்றின் நீர் வேகத்தைக்கொண்டு மாவு அரைக்கும் யந்திரம் ஒன்று ஓடிற்று. ரெப் இஸ்ராயில் தேவிது என்பவருக்குச் சொந்தம். மிகவும் நல்லவர். அவருக்கு அண்ணன் பேரில் பிரியம் ஏற்பட்டது. மலிவான விலைக்குத் தன் ஆலையை அவனுக்கு விற்று விட்டார். விற்று விட்டு எருசேலத்துக்குப் போய் விடலாமென்றோ அல்லது ஹங்கேரியில் குடியேறிவிடலாமென்றோ எண்ணினார் என்று கேள்விப்பட்டேன். எது காரணமாயினும் சரி, ஆலையை என் அண்ணனுக்கு விற்றதும் அவர் இறந்துவிட்டார்.


ஹேவெலாவுக்குப் பல குழந்தைகள் பிறந்தன. ஒன்றைவிட ஒன்று அழகு. ஊரெல்லாம் அந்தக் குழந்தைகளைப் பார்க்க வரும்.

எங்கள் தகப்பனாரின் வியாபாரம் க்ஷீணம் அடைந்தது. அண்ணன் கலியாணத்துக்கு அவர் செய்த சீர்ச் செலவே அதற்குக் காரணம். அந்தப் பாரம் தாங்கவில்லை. வியாபாரமும் நொடித்து. அவரும் நோய்ப்பட்டுப் பலவீனம் அடைந்தார். அந்த நிலையில் லிப் உதவி செய்தான் என்று எண்ணு

வீர்களா? இல்லை. தகப்பனார் நிலைமை என்ன என்று அவன் விசாரிக்கவே இல்லை. தகப்பனார் அந்தக் கோபத்தை என் மேல் காட்டினார்.

ஏன் இப்படிச் செய்தாரோ எனக்குத் தெரியாது. தான் பெற்ற மகன் பேரில் ஒரு தந்தைக்கு இப்படித் துவேஷம் உண்டாகும் என்பதுதான் ஒரு ஆச்சரியம். நான் ஏதேனும் சொன்னேனே, அது அவருக்குப் பெருந் தவறாகப் படும். கோபம் உண்டாகும். நான் எவ்வளவு உழைத்தாலும் சரி, அவருக்குத் திருப்தியில்லை.

தந்தையின் உடல் நிலை மிகவும் மோசமாயிற்று. இனி அதிக நாள் இருக்க மாட்டார் என்று எல்லாரும் சொன்னார்கள். நான்தான் அவரைக் கவனித்து வந்தேன். அண்ணன் லிப் தன்னுடைய வியாபாரத்தையும் பணம் சேர்ப்பதையுமே கவனித்து வந்தான். தகப்பனாருடைய சிசுருஷை முழுதும் என் பங்கு. ஜலமலம் கழிக்கும் பாத்திரம் நான்தான் எடுத்துக் கழுவினேன். அவரைத் தேய்த்துத் துடைத்துத் தலைமயிர் சீவிச் சுத்தமாகப் பார்த்துக் கொண்டதும் நான்தான். வயிறு கெட்டுப் போய் விட்டது. சாப்பிட்டது செரிக்காது. அப்படியே வாந்தி செய்து விடுவார். காலும் வலுவிழந்து விட்டது. வரவர சுவாதீனமில்லாமல் போய் விட்டது. நடக்க முடியவில்லை. எது வேண்டியதாயினும் நானே எடுத்துக் கொடுக்க வேண்டும். இவ்வளவு செய்யும் போதும் என்னைக் கண்டால் அவருக்குப் பிடிக்கவில்லை. கண்களில் அருவருப்பு. என் உள்ளம் மிகவும் வேதனைப்பட்டது. எங்கேயாகிலும் ஓடிப் போகலாம் என்று எண்ணு







வேன். ஆனால் பெற்ற தந்தையை எப்படி இந்த நிலையில் விட்டு விட்டுப் போவது? முடியவில்லை. பேசாமல் எல்லாம் பொறுத்து வந்தேன். செல்லச் செல்ல என் வாழ்க்கை நரகம் போலாயிற்று. நோய் தலைக்கு ஏறி, வாய்க்கு வந்தபடி என்னைத் திட்ட ஆரம்பித்தார். சாபமும் திட்டும் பொறுக்க முடியவில்லை.

வாரத்துக்கு இரண்டு முறை அண்ணன் லீப் வருவான். முகத்தில் சிரிப்புடன் வருவான். ''அப்பா! எப்படியிருக்கிறீர்? வாசியில்லையா?'' என்பான். தந்தையார் முகமும் அவனைக் கண்டதும் மலரும். கண்களில் மகிழ்ச்சி உதயமாகும். ஈசா! எனக்குக் கோபம் இல்லை. என் தந்தை இப்படி நடந்து கொண்டார். ஆயினும் ஆண்டவனே! அவரை மன்னிப்பாயாக! ஒருவனுக்குத் தான் செய்யும் குற்றம் தெரியாது. தெரிந்தால் செய்ய மாட்டான் அல்லவா?

உயிர் நீப்பதற்கு இரண்டு வாரம் ஆயிற்று. அவர் பட்ட வேதனையை நான் சொல்ல இயலாது. அந்த வேதனையில் கண் திறந்து என்னைப் பார்த்ததும் அவருக்குக் கோபம் ஏறும்.

உயிர் நீத்தார். சமக்கிரியைகள் முடிந்தன. தலையணைக்குக் கீழே வைத்திருந்த அவரு





சென்னை
சித்ரா
பிரபாத்
சரஸ்வதி
ராக்ஸி
மற்றும்.....
தென்னாடெங்கும்
இப்பொழுது
நடைபெறுகிறது
N.S. திரவியம் அளிக்கும்
விஜயா பிலிம்ஸ்
யார் பையன்?
டைரக்ஷன்...
T.R. ரகுநாத்
வசனம்...
ஸ்ரீதர்
தயாரிப்பு · T.A. துரைராஜன் B.A., B.COM.
ஸ்டுடியோ · வாஹினி
RIGHTS CONTROLLED BY....
S.S. சுந்தரம், மதுரை.

டைய மரணப் பத்திரத்தை எடுத்தார்கள். எனக்கு ஒரு தம்பிடி எழுதி வைக்க வில்லை. எல்லாம் லிப்புக்கு எழுதி வைத்திருந்தார். வீடு, மாவு, எந்திரம், வீட்டில் இருந்த எல்லாச் சாமான்களும்-துணி தும்பு தட்டு தவலை எல்லாம் - என் அண்ணனுக்கு.

ஊரார் எல்லாம் இப்படியும் உண்டா என்று வியந்தார்கள். அநியாயம், உயில் செல்லாது என்றார்கள். சாஸ்திர விரோதம் என்றார்கள். வீட்டையாவது எனக்குக் கொடுக்கவேண்டும் என்று சத்தியஸ்தம் செய்தார்கள். அண்ணன் சிரித்தான். உடனே வீட்டை விற்று விட்டு, வீட்டிலிருந்த சாமான்களை யெல்லாம் தன் வீட்டுக்குக் கொண்டு போய் விட்டான். தகப்பனார் படுத்த கட்டிலையும் எடுத்துப் போய் விட்டான். அவருடைய தலையணைமட்டும் நின்றது என் பங்குக்கு.



நான் சொல்லுவது முற்றிலும் உண்மை. ஒரு பொய் கிடையாது. நம்பினால் நம்புங்கள். ஆண்டவன் என்னை ரக்ஷிப்பானாக. அவன் அருளுக்கு என் தகுதி குறைவற்றிருப்பதாக.

ஒரு தச்சப் பட்டரையில் வேலை செய்து வந்தேன். கூலி சாப்பாட்டுக்குப் போதாது. ஒரு கூரைக் கொட்டகையில் படுப்பேன். லிப் தனக்கு ஒரு தம்பி இருக்கிறான் என்பதையே மறந்து விட்டான். இறந்து போன தந்தைக்குச் சாந்தி மந்திரம் சொல்லுவித்தது யாரென்று எண்ணுவீர்கள்? ஏதேனும் ஒரு சாக்கு ஏற்படும், லிப்புக்கு வரமுடியாது. ஊருக்குள் ஜனங்களுக்கு அருகில் நான் இருக்கிறேன் அல்லவா? அது ஒரு காரணம். அல்லது அவனுடைய ஆலையில் ஜபத்துக்குக் கூடுபவர்கள், போதிய ஆட்கள் இல்லை. சனிக்கிழமை அவனுக்கு 'அசௌகரியம்'! வெகுதூரத்திலிருந்து நேரத்துக்குள் வர முடியாது! இப்படியெல்லாம் சாக்குகள் ஏற்படும். இவ்வாறு அவன் என்னிடம் நடந்து கொண்டதைப் பற்றி முதலில் ஊரில் எல்லாரும் குற்றம் கண்டார்கள். பிறகு, '' தம்பியிடம் அண்ணன் இப்படி நடந்து கொள்வதற்கு ஏதோ காரணம் இருந்தே தான் தீர வேண்டும், அவனுக்குத் தெரியும். நாம் என்ன கண்டோம்?'' என்று சும்மா விட்டு விட்டார்கள். ஒருவன் பட்டுக் கீழே விழுந்தால் எல்லாரும் அவன் மேல் நடந்து மிதிப்பார்கள். இது உலக இயல்பு.

வாலிபப் பருவம் தாண்டினேன். யாரும் எனக்குப் பெண் தருவார் இல்லை. யாரேனும் விவாகத் தரகர்கள் வந்தாலும் என்னைவிட மட்டமான இடத்தைச் சொல்லி வந்தார்கள். இப்படி நாட்கள் சென்றன. ஏன் மறைக்க வேண்டும்? செருப்பு தைக்கும் குடும்பத்தில் ஒரு பெண்ணை விரும்பினேன். அவள் குப்பைத்தொட்டியில் அழுக்கைப் போடும் போது கண்டேன். ஆனால் அவளை வேறொருவனுக்கு நிச்சயம் செய்து விட்டார்கள். இக்கற்ற பாவியாகிய என்னை யார் விரும்புவார்கள்? இதை எண்ணி எண்ணித்து யரம் அடைந்தேன். இரவில் தூக்கம் வரவில்லை. படுக்கையில் புரண்டு புரண்டு அலைந்தேன். ஏன் என் வாழ்க்கை இப்படியாயிற்று? தந்தைக்கு நான் என்ன குற்றம் செய்தேன்? வாரந்தோறும் சாந்தி மந்திரம் சொல்லுவிப்பதை நிறுத்தி விடலாம் என்று எண்ணினேன். ஆனால் வருஷம் முடிவதற்கு இன்னும் சில நாட்கள் இருக்கையில், ஏன் நிறுத்தி விட வேண்டும் என்று யோசித்தேன்.

தவிர இறந்து மறைந்து போனவர் பேரில் பழி தீர்ப்பதா?

பிறகு நடந்ததைச் சொல்லுகிறேன்- கேளுங்கள் :

வெள்ளிக்கிழமை ராத்திரி. வழக்கம் போல் என் கொட்டகையில் உளிச் சீவல் குப்பை மேல் படுத்திருந்தேன். அந்தக் காலத்தில் உழைப்பு அதிகம். ராத்திரி வெளிச்சத்துக்கு வைத்துக் கொள்ளும் மெழுகுவத்திக்காகக் கூலியில் குறைத்துக் கொள்வார்கள். குளிக்கக்கூட அவகாசமில்லை. வெள்ளிக் கிழமைகளில் மத்தியானச் சாப்பாடு கிடையாது. இரவுச் சாப்பாட்டுக்கு நன்ருகப் பசிப்பதற்காக இந்த ஏற்பாடு. ஆனல் என் எஜமானனுடைய மனைவி மற்றவர்களுக்குப் படைப்பது போல எனக்குப் படைக்க மாட்டாள். கொஞ்சம் குறைத்தே போடுவாள். எல்லாருக்கும் மீன் நல்ல துண்டாகப் போடுவாள். வால்தான் என்னுடைய பங்கு. வாயில் அடைத்துக் கொள்ளும். விழுங்க முடியாது. என் பங்குக் குழம்பு ஒரே தண்ணீராக இருக்கும். கோழிக்கறியில் கால்கள் தான் என் பங்கு. தசை நார்தான் நான் மென்று தின்ன வேண்டியது. கஷ்டப்பட்டுக் கடித்து மென்று விழுங்கினலும் அந்த மாமிசம் மூளையைக் கெடுக்கும் என்று சொல்லுவார்கள். அதுவும் என் நினைவுக்குவரும். இனிப்புக் கனி யென்பதன் ருசியை நான் கண்டதில்லை. அது மற்றவர்களுக்குத்தான். இம்மாதிரியான இரவுச் சாப்பாட்டை அன்று முடித்துக் கொண்டு பசியோடு படுத்தேன்.

பனி காலம். கொட்டகையில் நான் படுத்த இடம் மிகக் குளிர். பொறுக்க முடியவில்லை. எலிகளின் உபத்திரவமும் இருந்தது. உளிச்சீவல் குப்பை மேல் கந்தல் துணியைப் போர்த்திக் கொண்டு படுத்திருந்தேன். என் உள்ளத்தில் கோபம் நெருப்பாகக் கிளம்பியது. அண்ணன் லிப்பை முடித்துவிட வேண்டும் என்று அடக்க முடியாத ஒரு எண்ணம் உண்டாயிற்று. அவன் மனைவி ஹவேலாவாவது கொஞ்சம் தயை காண்பித்தாளா? இல்லை. தானும் தன் அழகுப் பதுமைகளாகிய தன் குழந்தைகளுமே அவள் உலகம். வேறு எதையும் அவள் கருத்தில் கொள்ள வில்லை. அவள் உடுத்தும் உடைகளைப் பார்த்தீர்களானல் வியந்து போவீர்கள். பெரிய துரைசானிபோல் உடுப்பாள். ஊர் மண்டபத்தில் ஏதேனும் கல்யாணம் நடந்தால் வருவாள். அப்போது பார்க்க வேண்டுமே அவளுடைய ஆடம்பரத்தை! எங்கே போனலும் என் காதில் விழும் விஷயம், லிப் இதை வாங்கினன், அவன் மனைவி ஹவேலா அதை வாங்கினள் என்ற இதே கதைதான். ஆடையும் ஆபரணங்களும் வாங்கி அலங்காரம் செய்து கொள்வதே அவர்கள் வேலை போல் காணப்பட்டது.

கந்தல் துணி உடுத்து நாயைப் போல் மரச்சீவல் மேல் படுத்து வயிற்றில் பசியின் வாட்டம்! அப்போது அவளுடைய மிருதுவான ஆடைகளும் சுக வாழ்வும் நினைவுக்கு வந்து, கோபம் பொங்கிற்று. இருவரையும் மனதாரச் சபித்தேன். இவர்கள் சாக, இவர்களுக்குத் தீராத தொழு நோய் வருக, என்றெல்லாம் கடவுளை வேண்டிக் கொண்டேன். இன்னும் என்னென்னவோ சாபங்கள் என் உள்ளத்திலிருந்து கிளம்பின. இதன் மத்தியில் தூங்கிப் போனேன்.

சீக்கிரமே விழித்துக் கொண்டேன். நடுநிசி, பழி தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று நிச்சயித்தேன். ஒரு பிசாசு என் தலை மயிரைப் பிடித்து, "நட. லீபஸ், போ, பழி தீர்த்துக் கொள். விடாதே, இதுவே நாள். தாமதிக்காதே!" என்று என் காதில் கத்தின மாதிரி இருந்தது. எழுந்து இருட்டில் ஒரு சாக்குப் பை நிறையச் சீவல் நிரப்பினேன். சனிக்கிழமையன்று இம்மாதிரியான எண்ணங்களும் காரியங்களும் கூடாது என்பது சாஸ்திரம். எல்லாம் மறந்து விட்டேன். ஒரு பேய்தான் என்னைப் பிடித்துக்கொண்டு விட்டது.

எழுந்து கால் சட்டை போட்டுக் கொண்டு அந்தச் சாக்கு மூட்டையையும் நெருப்புக் குச்சியையும் எடுத்துக் கொண்டு ரகசியமாக வெளியே கிளம்பினேன். என் அண்ணனுடைய வீடு, ஆலை, தானியக் கிடங்கு எல்லாம் நெருப்புக்கு இரையாக்கி விட வேண்டும் என்று தீர்மானித்து விட்டேன்.

இருட்டு மை போல் இருந்தது. நடையும் வெகு தூரம். வீடுகளை விட்டு ஒதுங்கித் தனிமையான பாதையில் சென்றேன். சேற்றிலும் கழனியிலும் புல் காட்டிலும் பாதை கண்டு கொண்டு சென்றேன். எல்லாம் தீர்ந்தது. இனி இந்த உலகத்திலும் நான் சண்டாளன், மறு உலகத்திலும் எனக்கு இடமில்லை என்பதை உணர்ந்தேன். தாயின் உருவம், கல்லறையில் கிடக்கும் பெற்றவளின் உருவம் என் முன் வந்து நின்றது. ஐயோ, அவள் இதைப் பார்த்து என்ன சொல்லுவாள் என்றும் எண்ணத்தான் செய்தேன். ஆனல் என்ன பண்ணுவேன்! பைத்தியம் பிடித்துவிட்டது. அதை நிறுத்த முடியவில்லை. தலைக்கு மேல் கோபம்! அந்தக் கோபத்தில் பற்கள் நாக்கைக் கடித்துக் கத்தரித்து எறிகின்றன. அறிவுமில்லை, வலியுமில்லை.


அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது
சொத்தையும் மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள் அவை
COLGATE
COLGATE
DENTAL CREAM
மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்!
கால்கேட் டூத் பிரஷ்


நீண்ட, அடர்ந்த
ஒளிக்கூந்தலுக்கு
இளமையின் ஒளியும் அற்புத ஜ்வலிப்பும்
பெற கூந்தலுக்கு கால்கேட் பெர்பியூம்டு
காஸ்டர் ஹேர் ஆயிலை தடவுங்கள். கூந்
லின் இயற்கை அழகை அது எடுத்துக் காட்டி
எல்லோரையும் பிரமிக்கச் செய்யும்.
எக்கானமி சைஸை
வாங்கி பணத்தை
மிச்சப் படுத்துக.
கால்கேட்
பெர்ப்பியூம்டு காஸ்டர்
ஹேர் ஆயில்



எவ்வளவு தூரம் நடந்தேன் என்பதை அறியாமல் நடந்தேன். கத்தியால் வெட்டுவதுபோல் பனிக்காற்று அடித்தது. கால்கள் பனிச் சேற்றில் முழுங் கால் வரை அழுந்தின. ஒரு குழியில் விழுந்து ஏறி இன்னொரு குழியில் விழுவேன்.

இப்படிச் செல்லும்போது வழியில் ஒரு சேரியில் நாய் குரைத்தது. நாயின் சமாசாரம் உங்களுக்குத் தெரியுமே! ஒன்று குரைத்ததும் உடனே எல்லாம் ஒன்று சேர்ந்துபயங்கரமாகத்துரத்திக்கொண்டு வந்தன. என் காரியம் முடிந்தது என்று எண்ணினேன். பிய்த்துக் கொன்றுவிடும் என்றே எதிர்பார்த்தேன். என்ன ஆச்சரியம்! சேரியில் யாரும் எழுந்து பார்க்கவில்லை. கள்ளன் யாரோ வந்து திருடப் பார்க்கிறான் என்று எழுந்து வந்திருந்தால் என்பாடு என்ன? அங்கேயே என்னை முடித்து விட்டிருப்பார்கள். தெய்வாதீனம், தப்பினேன், யாரும் வரவில்லை. அங்கேயே சாக்கு மூட்டையைப் போட்டு விட்டுத் திரும்பி ஓட்டம் பிடிக்கலாம் என்று கூட எண்ணினேன். போய்க் கொட்டகையில் மறுபடியும் படுத்துக் கொள்ளலாம் அல்லது எங்கேயாவது ஓடிப் போகலாம் என்று எண்ணினேன். ஆனால் பிசாசு என்னை விடவில்லை. "இதுவே சமயம்! விட்டு விடாதே!" என்று தூண்டிற்று. மரச் சிவல் மூட்டை ஒரு பாரமல்ல. மிக இலேசுதான். ஆனால் எந்தச் சிறிய பாரமும் வெகு தூரம் எடுத்துக் கொண்டு நடந்தால் பாரம் போல ஆகிறது. உடம்பு எல்லாம் வியர்வை சொட்ட ஆரம்பித்தது. மெள்ள நடந்தேன். அப்போது ஒரு அற்புதம் நிகழ்ந்தது!

அதென்ன, வானில் செக்கச் செவேலென்று! பொழுது விடியும் வெளிச்சமா? அல்ல; பனிகால இரவு இவ்வளவு சீக்கிரம் விடியாது. என் அண்ணனுடைய மாவரைக்கும் ஆலைக்கு வெகு சமீபம் வந்துவிட்டேன். வேகமாக நடந்தேன், ஓடினேன், ஆலை தக தகவென்று எரிவதைப் பார்த்தேன்! இதுவென்ன வியப்பு! தீ வைத்துக் கொளுத்தி விட நான் வந்தேன். எனக்கு முன்னமே ஆலை தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கிறது!

என் தலை கிறு கிறு என்று சுற்றிற்று. நடக்க முடியவில்லை. ஸ்தம்பித்து நின்றேன். பைத்தியமே பிடித்து விட்டது போல் ஒரு உணர்ச்சி. புத்தி சுவாதீனம் இழந்தேன் என்பது உண்மை. சாக்கு மூட்டையைக் கீழே எறிந்து விட்டுக் கூச்சலிட்டேன். "தீ! தீ! வாருங்கள்!" என்று கத்தினேன். ஆலையண்டை போகாமல் அண்ணன் குடியிருந்த வீட்டண்டைஓடினேன். அவனும் அவன் மனைவியும் குழந்தைகளும் வீட்டுக்குள் இருப்பதையும், வீடு தீப்பற்றிக் கொண்டு எரிவதையும் எண்ணி, 'அடுத்த நிமிஷம் எல்லாரும் சாம்பலாய்ப் போவார்களே, ஐயோ' என்று பதறி உள்ளே நுழைந்தேன்.

வீட்டினுள் ஒரே புகைமயம். தூண்கள் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தன. அறைகள் எல்லாம் ரொட்டி அடுப்பு போல் பொறுக்க முடியாத உஷ்ணம். படுக்கை யறைக்கு ஓடினேன். ஜன்னல் கதவை உடைத்து அண்ணனைப் பிடித்து ஜன்னல் வழியாக வெளியே பனிச் சேற்றில் எறிந்தேன். அப்படியே அவன் மனைவி குழந்தைகள் எல்லாரையும் ஒருவர்பின் ஒருவராகப் பிடித்து இழுத்து எடுத்து வெளியே தூக்கிப் போட்டேன். புகையும் வெப்பமும் சேர்ந்து மூச்சு முட்டித் தத்தளித்தேன். எப்படியோ சமாளித்துக் கொண்டு எல்லாரையும் தப்புவித்தேன். அடுத்த நிமிஷம் கூரை தொப்பென்று விழுந்தது. வீடு தரை மட்டம் ஆயிற்று.

நான் போட்ட கூச்சல் கேட்டுப் பக்கத்தில் குடியிருந்த குடியானவர்கள் ஓடி வந்தார்கள். அண்ணனையும் அண்ணன் மனைவி குழந்தைகளையும் மூர்ச்சை தெளியச் செய்தார்கள். வீடு நிர்மூலமாயிற்று. ஆலையை எப்படியோ தீயணைத்து மீட்டினார்கள். என் சிவல் மூட்டை தென்பட்டது. அதையெடுத்து நெருப்பில்போட்டு விட்டேன். அண்ணனும் மற்றவர்களும் பக்கத்தில் குடியானவர்கள் வீட்டில் போய் அயர்ந்தார்கள். விடிந்தது.

"இது எப்படி நிகழ்ந்தது? நீ ஏன் இங்கே வந்தாய்? எப்படி வந்தாய்?" என்று கேட்டான் அண்ணன். அண்ணியோ, ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து என் கண்களைக் கீறிப் பிய்த்துவிட வந்தாள். "இவன்தான்! இவன்தான் தீ வைத்தது!" என்று கூச்சலிட்டாள். வந்து கூடின குடியானக் கூட்டமும் இந்த எண்ணத்தோடுதான் கேள்வி கேட்க ஆரம்பித்தார்கள். "நீ ஏன் வந்தாய்? எப்படி வந்தாய்? உண்மையைச் சொல்!" என்று சொல்லி என்னை அடித்துக்கொன்றார்கள். செத்தே போயிருப்பேன். என் அண்ணன் தடுத்தான். "நண்பர்களே! போதும் அடித்

தது. தண்டனை ஆண்டவன் உரிமை. அவன் பார்த்துக் கொள்வான். விட்டு விடுங்கள்!'' என்று சொல்லி என் முகத்தில் ''தூ'' என்று காறி உமிழ்ந்தான்.

எப்படியோ திரும்பி என் இருப்பிடம் சேர்ந்தேன். நடக்க முடியவில்லை. கால்களை இழுத்து இழுத்து மெதுவாக அடிபட்ட நாய்போல் கைகளும் கால்களுமாகத் தெற்றி நடந்து போய்ச் சேர்ந்தேன். பனிச் சேற்றில் எரியும் காயங்களைத் தணித்துச் சமாளித்துக் கொண்டு என் இருப்பிடம் போய்ச் சேர்ந்தேன்.

அங்கேயும் என்னை ஜனங்கள் விடவில்லை. ''நீ எங்கே போயிருந்தாய்? உன் அண்ணன் வீடு நெருப்புப் பற்றியது உனக்கு எப்படித் தெரிந்தது?'' என்று கேட்கலானார்கள். என் பேரில் எல்லாரும் சந்தேகப் பட்டார்கள். என் அண்ணனும் சந்தேகப்படுகிறான் என்கிற செய்தியும் ஊரெல்லாம் பரவி விட்டது.

என் முதலாளியும் வந்து பார்த்தான். ''சாக்குப் பை எங்கே?'' என்று விசாரித்தான். ''ஓகோ! இவன்தான் போய் அண்ணன் வீட்டுக்குத் தீ வைத்தான்!'' என்று யானையெல்லாம் பேச்சு. ''அதிலும் நல்ல சனிக்கிழமை இப்படிச் செய்தானேபாவி!'' என்றார்கள். என்னுடைய துரதிருஷ்டம் உச்ச நிலையை அடைந்துவிட்டது. போலீசார் வந்து பிடித்துச் சிறைச்சாலைக்குக்கொண்டு போய் அடைத்து விடுவார்கள், அல்லது ஊர் மன்றில் தொழு மரத்தில் பூட்டி வைப்பார்கள் என்று யாருக்கும் சிக்காமல் மறைந்தோடித் தப்ப நிச்சயித்தேன். ஒரு பார வண்டிக்காரன் என்மேல் இரக்கம் கொண்டு, அந்தச் சனிக்கிழமை இரவில் தன் வண்டியில் ஏற்றிக்கொண்டு தாமோஸ்க்கு நகரத்துக்குக் கடத்தி விட்டான். பார வண்டியில் பீப்பாய்களுக்கிடையில் என்னைத் திணித்து யாருக்கும் தெரியாது கொண்டு போனான்.



தாமோஸ்க்கு நகரத்துக்கு இந்தத் தீப் பற்றிய சமாசாரம் வந்ததும் அங்கிருந்து லுப்பின் நகரத்துக்கு ஓடிப் போனேன். அங்கே தக்க வேலை செய்து பிழைக்கப் பார்த்தேன். விவாகமும் செய்து கொண்டேன். குழந்தைகள் பிறக்கவில்லை. தொழிலில் நன்றாக உழைத்தேன். ஆனால் அதிருஷ்டம் இல்லை. தரித்திரமே என் கதியாக இருந்தது.

என் அண்ணன் லிப் லட்சாதிபதியானான். யானையில் பாதிக்கு அவன் சொந்தக்காரன் ஆனான். அவனிடமிருந்து எனக்கு ஒருவரி கூடத் தபால் வரவில்லை. அவன் குழந்தைகளுக்கு எல்லாம் பெரிய பெரிய வீடுகளில் பணக்காரக் குடும்பங்களில் கலியாணமாகிக் கௌரவமாக வாழ்ந்தார்கள். அவன் இப்போது உயிருடனில்லை. சொத்தும் பதவியும் கௌரவமும் தாங்கி இறந்தான்.

இது என் கதை. இது வரையில் யாரிடமும் சொன்னதில்லை. சொன்னால் யார் நம்புவார்கள்? நான் யானைக்காரன் என்பதைக்கூட மறைத்து வந்தேன். என் ஊர் ஷெப்ராஷின் என்று சொல்லி வந்தேன். இப்போது காலன் நெருங்கி விட்டான். சாகும் தறுவாயில் பொய் என்னத்துக்கு? உண்மை. முழு உண்மை. பொய் கலவாத உண்மையைச் சொன்னேன். ஒன்று எனக்கு விளங்கவில்லை. அது விளங்கப் போவதுமில்லை. உடல் நீத்துக் கல்லறையில் கிடக்கும் போது தான் தெரியவரும். நான் தீ வைக்கச் சென்ற அந்த இரவில் அதே சமயம் என் அண்ணன் வீடு ஏன் தீப்பற்றிக் கொண்டது? அது தானாக ஒன்று சேர்ந்த சம்பவமா? இல்லை. இப்போது எனக்குத் தோன்றுகிறது. என் அடங்காத கோபமே நெருப்பாகி அந்த வீட்டில் பற்றிக் கொண்டது போலிருக்கிறது. கோபம் தீயே யல்லவா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?''

''கோபத்தால் ஒரு வீடு எப்படி எரிந்து போகும்? இல்லை.''


''உண்மை. ஆனால் 'எரியும் கோபம்' என்று சொல்லுகிறார்களே?''

''அதுவா? அது வெறும்மொழி அணி.''

இருக்கலாம். அன்று தீப்பற்றியெரிவதைப் பார்த்ததும் என் கோபம் எங்கேயோ மறைந்தது. அவர்களை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்றே, எரியும் வீட்டில் குதித்துப் புகுந்தேன். நான் இல்லாதிருந்தால் எல்லாரும் சாம்பலாகிப் போயிருப்பார்கள். இப்போது சாகும் தறுவாய். உண்மை எல்லாருக்கும் தெரிய வேண்டுமென்று சொன்னேன்.

★ இந்தக் கதையில் வரும் ஒரு அற்புதமான காட்சியைத்தான் இந்த இதழ் அட்டைச் சித்திரமாகத் தீட்டியிருக்கிறார் நமது ஓவியக் கலைஞர் மணியம்.


காணத்தவறாதீர்கள்!
பத்மினி R. கணேசன்
பாலையா தங்கவேலு ம.ந.ராஜம்
T.V. குமுதினி ந.S.நாராயணபிள்ளை
பீருமுகமது பேபி ராஜகுமாரி
சிட்டாடல்
மல்லிகா
சென்னை
வெலிங்டன் கிரௌன்
சயானியில் மற்றும்
தென்னாடெங்கும்
ப்ரொடியூஸர் & டைரக்டர்: ஜோஸப் தளியத் ஜு.



நாலைந்து நாட்களுக்கு முன், கலியாண வீடு ஒன்றில், பெண் ஒருத்தி உற்சாகமாகப் பாடினாள் :

எத்தனை கோடி இன்பம் வைத்தாய்
எங்கள் இறைவா, இறைவா, இறைவா !


தன்யாசி ராகத்தின் ஆதங்கத்தில், சொற்கள் கரைந்து, சொல்லையும் இசையையும் கடந்த பெருவெளிக்கு மனத்தை அழைத்துச் சென்றன.

சித்தினை அசித்துடன் இணைத்தாய்
சேரும் ஐம்பூதத்து வியன் உலகு அமைத்தாய்
அத்தனை உலகமும் வண்ணக் களஞ்சியம்
ஆகப்பலப்பல நல் அழகுகள் சமைத்தாய்.

இந்த உலகத்தைப் பற்றித்தான் பாடல் இங்கே பேசுகிறது. பஞ்ச பூதங்களின் சேர்க்கையினால், 'வியன் உலகு' — வியப்பிலே நம்மை ஆழ்த்தும் இந்த உலகம் — தோன்றுகிறது ; வண்ணக் களஞ்சியமாக, ஆயிரம் ஆயிரம் அழகுகள் விளங்குகின்ற அற்புதமாகக் கண் முன்னே விரிகின்றது. இந்த விரிவினைத் தொடர்ந்து சென்றால், அழகுகள் ஒவ்வொன்றையும் அனுபவித்து, ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிக் கொண்டே போனால், அதற்கு முடிவேது? எத்தனை கோடி இன்பங்கள், எத்தனை கோடி அழகுகள் ! கணக்கெடுக்க முடியுமா ? முடியாது. ஆனால், கணக்கெடுத்தால் சித்தையும் அசித்தையும் இணைத்து, இந்த உலகத்தைப் படைத்த இறைவனே கூட்டுத் தொகையாக முடிகிறது. தொகையின் அலகிலாத் தன்மை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. அப்போது கணக்கு எடுப்பதை விட்டு விடுகிறோம் ; 'காலமும் கணக்கும் நீத்த காரணனை' நோக்கி விரைகிறோம்; கணக்கில் அடங்காத ஒன்று நம்முடைய கணக்கில் அடங்கி விடுகிறது ; விடுதலை பெறுகிறோம் அழகுக் கடலாக உலகத்தைப் படைத்த அவனுடைய அருளினால்தானே இதுவும் ஏற்பட்டது? முக்தி என்று குறிப்பிடுகிறோமே, அந்த விடுதலை நிலையும் அவன் தந்ததுதானே !

முக்தி என்று ஒரு நிலை சமைத்தாய்

அந்த நிலையை அடைந்து விட்டால்,—அடைவது இங்கே உள்ள அழகுகளை அடுக்கி, ஏணியாக





அமைத்துக் கொண்டுதான்—அடைந்து விட்டால்,

—அங்கே
முழுதினையும் உணரும் உணர்வு

கிடைத்து விடுகிறது. பிறகு? பிறகென்ன, இறைவனைத் தவிர வேறு பொருள் இல்லை என்ற நிலையும் ஏற்பட்டு விடுகிறது. அந்தப் பொருளில் எப்போதும் ஈடுபட்டு நிற்கும் நினைவும் கிடைத்து விடுகின்றது. அதாவது, பக்தி என்ற நிலை சித்தியாகி விடுகிறது.

இது என்ன, புதிதாக இருக்கிறதே! பக்தி என்பது முக்திக்கு வழி என்றல்லவா கேள்விப் பட்டிருக்கிறோம். முக்தியிலிருந்து பக்தி முளைப்பதாகச் சொல்வது புதிதாக அல்லவா இருக்கிறது! இதை நான் சொல்லவில்லை. மகாகவி





சுப்பிரமணிய பாரதியார் சொல்கிறார். அவர் சொல்வதும் புதிதில்லை. இதை ஆயிரம் வருஷங்களுக்கு முன் நம்மாழ்வார் சொல்லி வைத்தார். முக்தி என்பது விடுதலை. இறைவனைத் தவிர வேறொன்றும் இல்லை என்ற உணர்விலே லயித்து விட்டால், அதாவது பக்தியின் பக்குவத்தைப் பெற்று விட்டால்.... அதற்கு அப்பால் ஒன்று உண்டா? அதை நம்மாழ்வார் சொல்லுகிறார்:

அன்றே அப்போதே வீடு அதுவே வீடு
வீடாமே

வீடு என்பது முக்தி, விடுதலை. அதுவே பக்தி.

இப்படியெல்லாம் பாரதியார் பாடல் பேசுகிறது. அதை அந்தக் கல்யாண வீட்டுப் பெண் பாடினாள்:

முக்தி என்று ஒருநிலை சமைத்தாய்—அங்கு
முழுதினையும் உணரும் உணர்வு அமைத்தாய்
பக்தி என்றொரு நிலை வகுத்தாய்—எங்கள்
பரமா! பரமா! பரமா!

கேட்டுக்கொண்டிருந்த என்னுடைய சிந்தனை எங்கெல்லாமோ சென்று விட்டது. ஆங்கிலப் பாடல் ஒன்றை நினைவு கூர்ந்தது. இந்தப் பாடலும், மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பாட்டைப்போலவே உலகத்தின் அழகிலிருந்து தொடங்குகிறது:

எத்தனையோ எழிலை—
உன்கை
இயற்றிவிட்ட திங்கே!

எழிற் பொருள்கள் ஒன்றிரண்டைக் கவிஞன் எண்ணிப் பார்க்கிறான்;

எத்தனையோ எழிலை—உன்கை
இயற்றிவிட்ட திங்கே

மெத்தென் சிறகினிலே—பச்சை
மின்ன வரும் குருவி.

சிற்றெறும்பு ஊர்ந்துசெல—வழி
தேடி உதைத்திடும் புல்

வித்தும் அணுவளவாய்த்—திரள்
விந்தை மணிக் கல்லும்.

இவ் வழகுப் பொருள்களை எல்லாம் கணக்கெடுத்து, பட்டியல் ஒன்று தயாரித்தால் என்ன? ஓ, செய்யலாம். இதோ, சுனை ஒன்று. அதைச் சுற்றி நாற்புறமும் குன்றுகள். இந்தச் சுனையிலே உள்ள புனலையே மையாக வைத்துக் கொண்டு, உலகத்தில் உள்ள விந்தை அழகுகளுக்கு அட்டவணை எழுதிப் பார்க்கிறான் கவிஞன்:

உந்தன் மலை நடுவே—உலவா
ஊற்றுச் சுனைக் கரையில்

நின்று அதன் நீர் புனலைக்—கரிய
நீல மையாக் கொண்டே

எனக்கும் தெரியாது!

பிரபல விஞ்ஞானியான ஐன்ஸ்டைன் ஒரு சமயம் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். சாப்பாட்டு நேரம் வரவும், வண்டி ஒரு ஸ்டேஷனில் நிற்கவும் சரியாக இருந்தது.

ஐன்ஸ்டைன் தமது பெட்டியிலிருந்து இறங்கிப் பக்கத்தில் இருந்த உணவு வண்டியில் ஏறிக் கொண்டார்.

அவர் உணவு மேஜையில் போய் உட்கார்ந்ததும், பரிமாறுபவன் அவருக்கு எதிரே உணவுப் பட்டியலைக் கொண்டு வந்து வைத்தான். அப்பொழுதுதான் ஐன்ஸ்டைன் தாம் மூக்குக் கண்ணாடி கொண்டு வரவில்லை என்பதை உணர்ந்தார். மூக்குக் கண்ணாடியின்றிப் படிக்க முடியாத அவர் "அடடா! மூக்குக் கண்ணாடியை எடுத்து வர மறந்து விட்டோமே" என்று எண்ணி வருந்தினார். ஆனால் நல்லவேளையாகத் தாம் உட்கார்ந்திருந்த மேஜையிலேயே மற்றுமொருவர் உட்கார்ந்திருக்கவே அவருக்கு ஒரு ஆறுதல் உண்டாயிற்று.

பக்கத்தில் இருந்த அவரிடம் உணவுப் பட்டியலை நீட்டி, "இதைச் சற்றுப் படித்துச் சொல்லுங்களேன்!" என்றார்.

ஐன்ஸ்டைனை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்து விட்டு அவர், "நானும் உங்களைச் சேர்ந்தவன்தான். எனக்கும் படிக்க வராது!" என்றார்.

எந்தன் மனம் போன—படியே
ஏட்டில் எழுதிடுவேன்
உந்தன் அருள் வழியால்—இங்கே
ஓங்கிடும் வித்தை யெலாம்.

[உலவா—அழியாத, வற்றாத]

அட்டவணையை எந்தப் பொருளிலிருந்து தொடங்குவது? மிகப் பெரிய உயிர்களை முதல் வரிசையில் வைக்கலாம். மலையைப் போல், பிரும்மாண்டமாய், கடலிலே புரளும் திமிங்கலத்திலிருந்து தொடங்கலாமா? செய்யலாம். ஆனால் சின்ன உயிர்களுக்கும் அதே சிறப்பு உண்டு. பூவின் மதுவை உண்டு முரல்கிறதே சிறு தேனீ, அது திமிங்கலத்தை விட எந்த வகையிலும் குறைந்தது இல்லை. உயிர் ஊன்றுகின்ற எல்லாப் பொருள்களும் வித்தைப் பொருள்களே: உயிர் இல்லை என்று நாம் கருதுகின்ற அசேதனங்களும் அப்படியே. எள்ளத்தனைப் பொருளையும் விடாமல் ஏட்டில் எழுதியாக வேண்டும். ஆனால், அதற்குள் எத்தனையோ யுகங்கள் கழிந்து விடும். கலையில் பெருகும் நீர் வற்றிவிடும். 'என் எழுதுகோல் சிதறி விடும். என் சித்தமும் தளர்ந்து ஓய்ந்து விடும்' என்கிறான் கவிஞன்:

வெள்ளத்து அலை மேலே—மலைபோல்
விரைந்து புரண்டிடு மீன்;
கள்ளவிழ் பூவின் உள்ளே—சுவை
கண்டு முரல் தேனீ;
உள்ள பொருள் அனைத்தும்—உயிர்
ஊன்றும வியப்பனைத்தும்
எள்ளத்தனைப் பொருளும்—கணக்கில்
ஏற்றுக் குறித்திடு முன்
எத்தனை எத்தனையோ—யுகம்
இழைந்து சென்றிடுமே.
அத்தனை மைப்புனலும்—கலை
வற்றி அழிந்திடுமே.
சித்தம் தளர்ந்து விடும்—எழுது
சித்திரக் கோல் சிதறும்;
மெத்த அயர்ந்தே கை—மேவு
வினையைச் சோர விடும்.

எத்தனையோ சொற்களைத் திரட்டி, உலகின் அழகுக்குப் பட்டியல் தயாரிக்க முற்பட்ட கவிஞன், இப்போது கை சோர்ந்து நிற்கிறான். சொற்கள் எல்லாம் சிதறி ஓடி விட்டன. சொல்லே மறந்துபோய் விடுகிறது. இருந்தாலும், இரண்டே இரண்டு சொற்கள், மறையாமல் நிற்கின்றனவாம்.

என்னென்னவோ சொல்லை—அடுக்கிடன்
ஏற்றம் கணக்கெடுத்தேன்.
மன்னிய சொல் அனைத்தும்—இன்று
மறந்து போச்சுதடா!
என்னினும் எஞ்சி நின்றே—இருசொல்
என்னை அணைத்திடுமே.


இவ்விரண்டு சொற்களும் எவை?

ஒன்று ஒன்றுமில நீ—மற்று
ஒன்று உனையன்றி நான் *

தன்னையும் இறைவனையும் தவிர வேறொன்றும் இல்லை என்ற நிலையை உயிர் அடைகின்றபோது, பக்தியின் சிகரத்தில் அது நிற்கிறது. 'நீ, நீ, நீ. நீயன்றி எனக்கு வேறு பொருள் இல்லை, புகல் இல்லை, இன்பம் இல்லை. இதை நான் உணர்கிறேன். இதையே உணர்கிறேன். இதுவே இன்பம், இதுவே வீடு, இதுவே முக்தி.' இந்த உணர்வைப் பெற்று விட்டால், வேறென்ன வேண்டும்?

---

* Walter De La Mare, வால்தர் தலா மேர் என்ற கவிஞன் இயற்றிய The Scribe 'கணக்கன்' என்ற பாடல்.



அத்தியாயம் 5

பூதுகனுக்கு ஆபத்தா...?

புலிப்பள்ளியாரும் அருண்மொழியாரும் சமாதானமாகப் போய்விட்டது பராந்தகனுக்குத் திருப்தியை அளித்தது.

''அமைச்சர் பெருமான் இருவரும் இப்பொழுதாவது ஒருவரை ஒருவர் உணர்ந்து கொண்டு நட்பு பாராட்டிக் கொள்வதில் மகிழ்ச்சி. பொதுவாக அரசர்களைவிட அமைச்சர்களுக்குத்தான் பெருமை அதிகம். மேலும் அரசர்களின் பெருமையையும் புகழையும் காப்பாற்றுகிறவர்கள் அமைச்சர்கள்தான். அதிலும் தஞ்சை மன்னருக்குப் புலிப்பள்ளியாரும், மதுரை மன்னருக்கு அருண்மொழியாரும் அமைச்சர்களாக அமைந்தது அந்த அரசர்கள் செய்த பெரும் பாக்கியமாகத்தான் இருக்க வேண்டும்'' என்றான் பராந்தகன்.

''அதில் என்ன சந்தேகம்? ஆனால் இப்படிப்பட்ட சிறந்த அமைச்சர்களின் நிர்வாகத்தில் இருக்கும் அரசாங்கத்தில்தான் சில புல்லுருவிகளும் இருக்கிறார்கள். உதாரணமாகத் தஞ்சையில் சேனாதிபதியாக இருந்த கலங்கமாலரையர் எத்தகைய கேவலமான காரியங்களிலெல்லாம் ஈடுபடுகிறார் தெரியுமா? இதனால் விவேகியாகவும் தர்ம நியாயம் தெரிந்தவர்களாகவும் இருக்கும் அமைச்சர்களுக்கு எவ்வளவு சங்கடங்கள் ஏற்படுகின்றன தெரியுமா?'' என்றான் ஆதித்தன்.

''ஆமாம்! அது கொஞ்சம் பரிதாபப்படக்கூடிய விஷயம்தான். அதிலும் மன்னர்கள் அந்தப் புல்லுருவிகளின் வலையில் விழுந்து விடுவதுதான் மிகப் பரிதாபம்....'' என்றான் பராந்தகன்.

''இனிமேல் கலங்கமாலரையரின் சூழ்ச்சிகளெல்லாம் பலிக்காது. தஞ்சை மன்னரின் படைகளெல்லாம் என் மகன் கோளாந்தகன் அதிகாரத்தில் இருக்கின்றன. கலங்கமாலரையர் போர் வீரர்களிடம் மதிப்பிழந்து விட்டார்'' என்றார் புலிப்பள்ளியார்.

''உயிருக்குப் பயந்து துறவறம் பூண்டவருக்கு எப்படி வீரர்களிடம் மதிப்பு இருக்கும். அதிலும் நல்ல வீரரும் இளைஞருமாகிய உங்கள் குமாரன் சேனாதிபதி பதவிக்கு வந்ததும் இயற்கையாகவே போர்வீரர்களின் மனம் மாறிப் போய் இருக்காதா?'' என்றான் பராந்தகன்.

''இருப்பினும் தஞ்சை அரசருக்குக் கலங்கமாலரையர் மீது இருக்கும் நம்பிக்கையும் அபிமானமும் குறைந்ததாகத் தெரியவில்லையே...'' என்றான் ஆதித்தன்.

''துறவுக்கோலம் பூண்ட பின்னும் தஞ்சை மன்னருக்கு அனுகூலமான காரியங்களைச் செய்ய அவர் பலவித சூழ்ச்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார் அல்லவா? அப்படி இருக்கும்போது மன்னருக்கு அபிமானம் எப்படிக் குறையும்?'' என்றான் பராந்தகன்.

இவ்வளவு நேரமும் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த அருண்மொழியார் சிரித்துக் கொண்டே மெதுவான குரலில், ''தஞ்சை மன்னர் கலங்கமாலரையர் தமக்குச் சாதகமான வழியில் பாடுபடுவதாக நினைத்துக் கொண்டிருக்கலாம். உலகமும் நினைக்கலாம் — ஆனால் உண்மை வேறு — பல்லவ மன்னருக்கும் தஞ்சை மன்னருக்கும் விசுவாசமுள்ளவர்போல் நடந்து கொண்டாலும் அவர் பல்லவ மன்னருக்கு எதிராகச் சூழ்ச்சி செய்யும் அவருடைய சகோதரர் சிம்மவர்மருக்கு ஆப்த நண்பர் என்பது உலகத்துக்குத் தெரியாது...இவ்விஷயம் பல்லவ சாம்ராஜ்யத்துக்கு நேர் வைரிகளாக இருக்கும் எங்களுக்குத் தான் நன்கு தெரியும்'' என்றார்.

''கலங்கமாலரையர் பல்லவ சாம்ராஜ்யத்தைக் கவிழ்க்கச் சிம்மவர்மரோடு சேர்ந்து சூழ்ச்சி செய்கிறாரா...?'' என்றார் புலிப்பள்ளியார் பதற்றத்தோடும் கலக்கத்தோடும்.

அருண்மொழியார் சிரித்துக் கொண்டே, ''நியாயமாகப் பார்க்கப்போனால் இந்த அந்தரங்கத்தை உங்களுக்குச் சொல்லக்கூடாது. ஏனென்றால் உங்களுக்கு நான் எதிரி. இருப்பினும் இந்த ரகசியத்தை உங்களிடம் ஏன் சொன்னேனென்றால் நீங்களும் என்னைப் போல் ஒரு அமைச்சர். நீங்கள் கண் விழித்துக் கொள்ள வேண்டும், ஏமாந்தவராகி விடக் கூடாது என்பதற்காகத்தான். தவிர, எங்களுடைய குறிக்கோள் பல்லவ சாம்ராஜ்யத்தைக் குலைக்க வேண்டுமென்பதே. தவிர நந்தி வர்மரை அகற்றி விட்டுச் சிம்ம வர்மரைச் சிம்மாசனம் ஏற்ற



வேண்டுமென்பதல்ல — உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைக்கும் கலங்க மாலரையருக்கும், சகோதரருக்குத் துரோகம் நினைக்கும் சிம்மவர்மருக்கும் நாங்கள் ஒரு நாளும் உதவி செய்ய மாட்டோம்'' என்று கூறினார்.

''ஆமாம்! அவர்களால் ஏற்படும் சாதகங்களைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர அவர்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது. எதிராளிகளைக்கவிழ்க்கநினைத்த

அந்தத் துரோகிகள் நம்மையும்தானே கவிழ்க்க நினைப்பார்கள்!..'' என்றான் பராந்தகன்.

''எனக்குக் கலங்கமாலரையர் மீது எப்பொழுதுமே சந்தேகம் உண்டு. ஆனால் இப்பொழுது தான் உண்மையை உணர்ந்து கொண்டேன். இனிமேல் நான் வெகு ஜாக்கிரதையுடன் நடந்து கொள்வேன்'' என்றார் புலிப்பள்ளியார்.

''ஜாக்கிரதையாக நடந்து கொள்வது ஒரு பெரிய காரியமல்ல. இப்படிப்பட்ட மகா துரோகிகளுக்குச் சரியான தண்டனை அளிக்க வழி செய்ய வேண்டும். இவர்களை யெல்லாம் இப்படியே விட்டு விட்டால் மிகவும் கெடுதல்'' என்றான் பராந்தகன்.

''ஆமாம்! தன்னுடைய அரசருக்கு ஒருவன் பெரிய துரோகம் செய்துகொண்டு வருவதை ஒரு அமைச்சர் அறிந்துகொண்ட பின் வாளாவிருப்பது தகாது'' என்றான் ஆதித்தன்.

''நான் பேசாமலிருந்து விடுவேனோ? அந்தக் கலங்கமாலரையனை என்ன பாடு படுத்துகிறேனென்று பாருங்கள்!'' என்றார் புலிப்பள்ளியார் ஆத்திரத்துடன்.

''பதற்றப் படாதீர்கள். அவசரப்பட்டும் ஆத்திரப்பட்டும் எதையும் செய்துவிடக் கூடாது. இன்று கலங்கமாலரையர் வஞ்சக நெஞ்சம் கொண்டு பலவித சூழ்ச்சிகள் செய்தாலும் அவர் துறவற நிலையிலுள்ளார். துறவறம் எய்திய ஒருவன்மீது கண்டபடி குற்றம் ருசுப்பிக்கப்படாமல் அவன் தண்டிக்கப்படுவானானால் உலகம் நிந்திக்கும். ஒரு புனிதமூர்த்தியின் மெய்வழியில் ஏற்பட்ட ஒரு உன்னத மதத்துக்கும் உலகத்தில் இழுக்கு ஏற்படும்'' என்றார் அருண்மொழியார்.



''கலங்கமாலரையனைப் போன்ற துரோகிகளுக்கெல்லாம் இடமளிக்கும் அம்மதம்

எப்படிப் புனிதம் உடையதாகும்?'' என்றான் பராந்தகன்.

''அப்படிச் சொல்லாதீர்கள். நெல்லோடு கல் கலந்திருப்பதுபோல் எல்லா மதத்திலும் இப்படிச் சிலர் இருக்கிறார்கள். நெல்லைத் தூற்றி விட்டால் பதர்கள் அப்பால் போய் விழுவதுபோல் சத்திய மார்க்கத்தில் பற்றில்லாதவர்கள் அங்கு தரித்து நிற்க முடியாது. அதோடு கெட்டவர்களும் நல்லவர்களோடு சேர்ந்தால் ஒரு வேளை உத்தமர்களாகி விடலாம். நான் சைவ மதத்தைச் சேர்ந்தவன். இருப்பினும் புத்தர் பெருமானிடம் பெரும் பக்தி கொண்டவன். வைஷ்ணவர்கள்சொல்வார்கள், பகவான் யுகத்துக்கு யுகம் பிறந்து தர்மத்தை நிலைநாட்டுகிறார் என்று. மக்கள் மனம் குழம்பி நின்ற காலத்தில் அனேக ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் இப் புண்ணிய பூமியில் ஒரு புனித மூர்த்தி அவதரித்தார். புத்தனென்னும் அந்தப் பேரொளி உள்ளத்தாலும் உருவத்தாலும் மக்களின் மனத்தை வசீகரித்தது—ஆயிரம் ஆண்டுகள் சென்ற பின்பும் அக்கருணை மூர்த்தி திருவுருவம் நம் நெஞ்சில் நடமாடுகிறது. அந்தப் புனித வள்ளலின் ஞான மார்க்க உபதேசங்கள் நம் நெஞ்சில் நிலைத்து நிற்கின்றன. இப்படிப்பட்ட புண்ணியமூர்த்தி இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் இம் மண்ணகத்தே வந்து பிறப்பாரோ? இன்று அந்தப் புனித வள்ளலின் வழியைப் பின்பற்றும் உத்தம சீலர்கள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் எண்ணிப் பார்க்கும் காலத்தில் நாம் அம் மதத்தைக் கௌரவிக்கத்தான் வேண்டியிருக்கிறது. இவ்வளவும் நான் எதற்குச் சொல்கிறேனென்றால் நம்மில் பலர் பல சமயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறோம். அரசியல் சம்பந்தப்பட்ட வரையில் நாம் ஜன்ம வைரிகளாயினும் மதம் சம்பந்தப்பட்ட வரையில் இத்தகைய பகை உணர்ச்சியை வளர்ப்பது அபாயகரமானதாக முடியும். அரசியல் பகை உணர்ச்சி அரசியலில் உள்ளவர்களை மட்டும்தான் பாதிக்கும். ஆனால் மதத்தில் ஏற்படும் பகை உணர்ச்சி மக்கள் எல்லோரையும் பாதிக்கும். இந்நாட்டில் மதமென்பது பலவித வர்ண வேறுபாடுகளோடு இருந்தாலும் அது பிறவியிலிருந்தே மனிதனோடு ஒட்டிய வாழ்க்கைப் பண்பாடாகி விடுகிறது'' என்றார்.

உணர்ச்சி வசத்தோடு அருண்மொழியார் பேசுவதை ஆவலோடு கேட்டுக் கொண்டு வந்த ஆதித்தன், ''தாங்கள் சொல்வதெல்லாம் சரியே. ஆனால் கலங்கமாலரையரைப் போன்ற கயவர்களைத் தண்டிப்பதினால் புத்த மதத்துக்கு என்ன இழிவு ஏற்பட்டு விடப் போகிறது? இதற்காக இவ்வளவு தூரம் நீங்கள் பேச வேண்டிய சிரமம் எதற்கு என்றுதான் புரியவில்லை'' என்றான்.

''தஞ்சை மன்னர் ஜைன சமயத்தைச் சேர்ந்தவர். இன்றுள்ள நிலையில் ஜைன சமயத்தினர்கள்தான் புத்த மதத்தினருக்குப் பூரண வைரிகளாக இருந்து வருகின்றனர். புத்த சமயத்தினர் ஏதேனும் சிறு பிசகு செய்திருந்தால்கூட அதைப் பெரிது பண்ணிக் காட்டுகிறார்கள் சமண மதத்தினர். அப்படி இருக்கக் கலங்கமாலரையரைப் போன்றவர்கள் செய்யும் குற்றத்தை சமயத்தின் பெயரால் போட்டு அச்சமயத்துக்குப் பெரும் இழுக்கைத் தேடுவதையே தங்கள் முக்கிய நோக்கமாகக் கொண்டு விடுவார்களோ என்ற பயம். அதனால்தான் சொல்ல வேண்டியிருந்தது. அதுவும் புத்தர் பெருமானிடமுள்ள பெரும் பக்தியின் காரணமாகவே சொன்னேன்.''


''வாஸ்தவம். நான் கலங்கமாலரையருக்குத் தக்க தண்டனை வாங்கித் தரப் போவது மாத்திரம் நிச்சயம். ஆனால் இதனால் புத்த மதம் இழிவுபடுத்தப்பட மாட்டாது என்பதை மதுரை அமைச்சர் நிச்சயம் நம்பலாம்'' என்றார் புலிப் பள்ளியார்.

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போதே எங்கிருந்தோ யாழ் ஒலியும் சதங்கைச் சத்தமும் கேட்டன. அருண்மொழியார் அந்த இனிய நாதம் எங்கிருந்து வருகிறது என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறவர்போல் ஆதித்தனின் முகத்தைப் பார்த்தார்.

ஆதித்தன் சிரித்துக் கொண்டே, ''இன்று அமைச்சர்களுக்குச் சாதாரண விருந்தோடு மட்டுமல்ல. மாலையில் நல்ல இசையோடு கூடிய நாட்டிய விருந்தொன்றும் காத்திருக்கிறது. பூம்புகாரிலிருந்து வைகைமாலை என்னும் நாட்டியக் கணிகை வந்திருக்கிறாள். அவளோடு அவளுடைய சகோதரியும் சிறந்த இசைக் கணிகையுமான சுதமதி என்பவளும் வந்திருக்கிறாள்'' என்றான்.

''வைகைமாலையா...?'' என்று சிறிது திகைப்படைந்தவர் போல் கேட்டார் புலிப்பள்ளியார்.

வைகைமாலை என்ற பெயரைக் கேட்டதும் புலிப்பள்ளியார் ஏன் அப்படித் திகைப்படைந்தார் என்பதுதான் பராந்தகனுக்குப் புரியவில்லை. அந்தச் சமயத்தில் அதைப்பற்றிக் கிளறிக் கேட்கக் கூடாது என்று விட்டு விட்டான். அன்று மத்தியானம் விருந்துக்குப் பின் பராந்தகன் புலிப்பள்ளியாரைச் சந்தித்த பொழுது, ''இன்று காலை நீங்கள் வைகை



தளதளக்கும் ஈனோ வயிற்றுக் கோளாறுகளிலிருந்து எட்டே விநாடிகளில் நிவாரணமளிக்கிறது!

அஜீர்ணம், நெஞ்செரிச்சல், அல்லது வாயுப் பொருமல் இவைகளில் எதையும் ஈனோ நிவர்த்திக்கிறது!

ஒரு கிளாஸ் தளதளக்கும் ஈனோ ப்ரூட் ஸால்ட் சாப்பிட்டால் எட்டே விநாடிகளில் வயிற்றுக் கோளாறுகள் சீரடைகின்றன. மிதமாக பேதி ஏற்பட விரும்பினால் வெறும் வயிற்றில் சிறிது பெரிய 'டோஸ்' ஈனோ அருந்தினால் போதும். எப்பொழுதும் உங்கள் வீட்டில் ஒரு பாட்டில் ஈனோ வைத்திருங்கள்.

ஈனோ 'ப்ரூட் ஸால்ட்'

அமித அமிலங்களை அடக்கும் தளதளக்கும் பானம்

'ஈனோ' மற்றும் 'ப்ரூட் ஸால்ட்' என்ற வார்த்தைகள் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட டிரேட் மார்க்குகள்

குருப் லாபரட்டரீஸ் (இந்தியா) பிரைவேட் லிட்.



இப்பொழுது மோசடியைத் தடுக்கும் புதிய பாட்டிலில் விற்கப்படுகிறது

(2 சைஸ்களில் கிடைக்கும்)

மாலையின் பெயரைக் கேட்டதும் அப்படி ஏன் திகைப்படைந்தீர்கள்?'' என்று கேட்டான்.

''நான் திகைப்படையவில்லை. எங்கோ எனக்கு அப்படிப்பட்ட பெயரைக் கேட்டதுபோல் இருந்தது. அதனால் யோசித்தேன்....''

''ஓகோ! எங்கே அவள் பெயரைக் கேள்விப்பட்டோம் என்று உங்கள் நினைவுக்கு வந்ததா?''

''அதைத்தான் இன்னும் யோசித்துப் பார்க்கிறேன். நினைவுக்கு வரவில்லை.''

''இதை யோசித்துப் பார்ப்பானேன்? அவள் ஒரு சிறந்த நாட்டியக்காரி. அவள் பெயர் மிகப் பிரசித்தம். அவளுடைய பெயரை ஒரு வழிப்போக்கன் சொல்லிக் கூட நீங்கள் கேள்விப் பட்டிருக்கலாம்'' என்றான் பராந்தகன்.

பராந்தகன் புலிப்பள்ளியாரோடு பேசிக் கொண்டிருக்கும் பொழுது அவ்வழியாக வந்த சுதமதி பராந்தகனுக்கு நமஸ்காரம் செய்து நின்றாள். சுதமதியைப் பார்த்ததும் புலிப்பள்ளியாரின் முகம் சிறிது மாறியது. அவர் ஏதோ அவமானத்தால் அவள் முகத்தைப் பார்க்க விரும்பாதவர்போல் தம் பார்வையை வேறெங்கோ செலுத்தினார்.

புலிப்பள்ளியாரின் முக மாறுதலைக் கண்ட பராந்தகன் மனத்தில் ஏதோ சம்சயம் கொண்டவனாக, சுதமதியைப் பார்த்து, ''சுதமதி! இவர்களை உங்களுக்குத் தெரியுமா? தஞ்சை முத்தரையரின் அமைச்சர். புலிப்பள்ளி கொண்டார்....., என்றான்.

சுதமதி சிறிது அலட்சியமாகச் சிரித்துக் கொண்டே, ''இவர்களை எனக்குத் தெரியும். ஒரு தடவை இவர்களைச் சந்திக்கும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறேன்'' என்றாள்.

பராந்தகன் சிறிது ஆச்சரியமடைந்தவன்போல், ''அப்படியா..ஒரு வேளை வைகைமாலைக்கு இவர்களைத் தெரிந்திருக்காது..'' என்றான் மெதுவாக.

''ஏன் அவளுக்கும் இவரை நன்றாகத் தெரியுமே....''

புலிப்பள்ளியார் அப்பொழுதுதான் ஏதோ ஞாபகத்துக்கு வந்தவர்போல், ''தெரியும், தெரியும். இப்பொழுதுதான் எல்லாம் நினைவுக்கு வருகிறது. அதுவும் நேரில் பார்த்தவுடன்தான் நினைவுக்கு வந்தது....'' என்றார் அசட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டே.

''இருக்கலாம். இருக்கலாம். உங்களைப் போன்ற அமைச்சர்களுக்கு எவ்வளவோ கவலைகள். அதில் இவர்களை யெல்லாம் நினைவில் வைத்துக் கொண்டிருப்பது கடினம்தான்'' என்றான் பராந்தகன்.

அருள் வாக்கு

நமது ஜனங்கள் நகரத்தில் வந்து ஜீவனம் பண்ண ஆரம்பித்தார்கள். நிலத்தை விற்று சர்ட்டிபிகேட்டுகளாக மாற்றிக் கொண்டார்கள். வித்தைக்கு உத்தியோகம் இப்பொழுது கிடைப்பதில்லை. ஜாதிக்குத்தான் கிடைக்கிறது. அதனால் வேலை கிடைக்காதவர்கள் வேறு ஜாதியில் பிறக்க வேண்டும் என்று பரமேசுவரனைப் பிரார்த்தனை செய்தார்கள். இந்த மாதிரி வந்து விட்டதனால் தேசம் தத்தளிக்கிறது. இந்த வழியில் ஆரம்பித்தவர்கள் பிராமணர்கள்தான். அவர்கள் முதலில் நிலங்களை விற்று சர்ட்டிபிகேட்டாகப் பண்ணிக் கொண்டார்கள். பின்பு, 'நாமும் ஏன் அப்படிச் செய்யக் கூடாது?' என்று எல்லோரும் அப்படிப் பண்ணினார்கள். கிராமத்தை விட்டு நகரங்களுக்கு வந்தார்கள். அதனால் என்ன வந்தது? தாரித்திரியந்தான் அதிகமாயிற்று. முதலில் பிராம்மணனுக்கு வேலையில்லை யென்று சொன்னார்கள். அப்புறம் எல்லோருக்குமே இல்லை யென்று ஆகிவிட்டது.

ஸ்ரீ சங்கராச்சாரியார், காமகோடி பீடம்.

''அமைச்சர் அவர்கள் எங்களை மறந்திருந்தால் அது நாங்கள் செய்த பாக்கியம்தான். ஆனால் அமைச்சர் பெருமான் எங்களை மறந்து விட்டது ஆச்சரியம்தான்.''

''அப்படி யென்றால் அமைச்சர் பெருமான் உங்களை மறக்காத அளவுக்கு உங்கள் சந்திப்பின்போது ஏதோ நடந்திருக்கிறது என்று நினைக்கிறேன்'' என்றான் பராந்தகன்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை. சாதாரணமாகத்தான் இவர்களை ஒரு சமயம் சந்திக்க நேர்ந்தது'' என்றார் புலிப்பள்ளியார்.

''சரிதான். எங்கேனும் தேவாலயங்களில் நாட்டியம் நடந்த சமயத்தில் இவரைச் சந்தித்தீர்களோ?'' என்று வினவினான் பராந்தகன்.

''இல்லை. அமைச்சர் அவர்கள் பூம்புகாரில் எங்கள் மாளிகையிலேயே வந்து சந்தித்தார்கள்'' என்றாள் சுதமதி.

''அப்படியா! விசேஷம் தான். அமைச்சர் பெருமான் உங்கள் மாளிகையையே நாடி வந்தார் என்றால் அதில் ஏதோ விசேஷம் இருக்கத்தான் வேண்டும்'' என்றான் பராந்தகன்.

''விசேஷமொன்றுமில்லை. எங்கள் மன்னர் வைகைமாலையின் நாட்டியத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு, தஞ்சை

அரண்மனையில் அவளுடைய நாட்டியத்தைக் கண்டு களிக்க விரும்பினார். அதை ஏற்பாடு செய்வதற்காகவே சென்றேன்'' என்றார்.

''அப்படியா? தகுதிதான். அவருடைய ஆவல் வரவேற்கக் கூடியதுதான். அதற்கு அமைச்சர் அவர்களே பூம்புகாரிலுள்ள வைகைமாலையின் மாளிகையைத் தேடிச் சென்றதும் உசிதம்தான். தஞ்சை மன்னர் எதிரே நாட்டியம் ஆடுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததும் வைகைமாலையின் பாக்கியம்தான்'' என்றான் பராந்தகன்.

''அந்த பாக்கியம் வைகைமாலைக்குக் கிட்டவில்லை'' என்றாள் சுதமதி.

பராந்தகன் ஆச்சரியம் அடைந்தவன் போல் புலிப்பள்ளியாரின் முகத்தைப் பார்த்தான். புலிப்பள்ளியார் சிறிது ஆத்திரம் மிகுந்தவராக, ''ஆமாம். அவளுக்கு அந்த பாக்கியம் கிட்டவில்லைதான். வலுவில் வரும் ஸ்ரீதேவியை உதைத்துத் தள்ளினாற்போல் தஞ்சை அரண்மனையில் நாட்டியம் ஆட அவள் மறுத்து விட்டாள். ஒரு பெரிய அரசாங்கத்தின் அமைச்சனாக விளங்கும் நானே அவர்கள் வீடு தேடிச் சென்று அழைப்பதைச் சிந்தித்துப் பார்க்காமல் அலட்சியம் செய்து விட்டார்கள்'' என்றார் மிகுந்த கோபத்தோடு.

''நாங்கள் அலட்சியம் செய்யவில்லை. நீங்கள் தேடி வந்ததும் உங்களை மிகவும் பய பக்தியோடுதான் உபசரித்தோம். வராத மனிதர் வீடு தேடி வரும்போது அலட்சியமாக இருப்போமா? ஆனால் அமைச்சர் பெருமானின் விருப்பத்துக்கு நாங்கள் இணங்க முடியவில்லை'' என்றாள் சுதமதி.

''எங்கள் மன்னரின் விருப்பத்தை ஏற்றுக் கொள்ளாதது எங்களுக்கு அவமானமில்லையா? எங்களை அலட்சியம் செய்ததாகாதா? வைகைமாலை தஞ்சை அரண்மனைக்கு வர மறுத்ததுகூட மனத்துக்கு வருத்தத்தை அளிக்கவில்லை. ஆனால் அவளுடைய வார்த்தைகள்தான் என் மனத்தை மிகவும் புண்ணாக்கி விட்டன'' என்றார் அவர் துடிப்போடு.

புலிப்பள்ளியாருக்கும் சுதமதிக்கும் ஏற்பட்ட விவாதத்தைக் கேட்டுக் கொண்டிருந்த பராந்தகன் சிறிது பொறுமை இழந்தவனாக, ''வைகைமாலை உங்களை அவமானப் படுத்தும் வண்ணம் எத்தகைய தகாத வார்த்தைகளைக் கூறினாள் என்றுதான் எனக்குப் புரியவில்லை'' என்று கூறினான்.



''அவளுடைய கர்வம் நிறைந்த வார்த்தை என்னை மாத்திரம் அவமானப் படுத்துவதாக இல்லை. தஞ்சை மன்னரையும் ஏன், பல்லவர்கோனையும் அவமானப் படுத்துவதாக இருந்தது...'' என்றார் பதைபதைப்போடு.

''அப்படியா....? அவள் அப்படி என்ன தகாத வார்த்தைகள் கூறினாள் என்பதைத்தான் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்'' என்றான் பராந்தகன்.

''என் நெஞ்சு துடிக்கிறது. அவள் சொல்லிய வார்த்தைகளை மறுபடியும் எடுத்துக் கூறக் கூட என் நா தயங்குகிறது. 'நாங்கள் பரம்பரையாகச் சோழர்களின் சபையில் நாட்டியமாடுவதைத்தான் கௌரவமாகக் கருதிவந்திருக்கிறோம். சோழ சாம்ராஜ்யம் நிலைகுலைந்த பின் கொடும்பாளூர் அரண்மனையிலோ அல்லது தேவாலயங்களிலோ நாட்டியமாடுவதைத்தான் கௌரவமாகக் கருதுகிறோம்' என்றாள். அதோடு மட்டுமல்ல. 'தஞ்சை மன்னரென்ன, பல்லவ மன்னரே பல்லக்கு அனுப்பி வைத்தாலும் போக மாட்டோம்' என்றாள். இதைக் கேட்டு நான் சகித்திருக்க முடியுமா...? அதோடு மட்டு மல்ல; 'உங்கள் மன்னர் என் நாட்டியத்தைப் பார்க்க விரும்பினால் என் மாளிகைக்கு வரச் சொல்லுங்கள். அல்லது எங்கேனும்தேவாலயங்களுக்கு வரச் சொல்லுங்கள்.......' என்றாள். அவளுக்கு எவ்வளவு மமதை? இதைக் கேட்டு நான் எப்படிச் சகித்துக் கொண்டிருக்க முடியும்?'' என்றார் புலிப்பள்ளியார்.

''இது வருத்தப்பட வேண்டிய விஷயம்தான். சுதமதி! அமைச்சருக்குக்கொஞ்சம் முன்கோபம் உண்டு. அதனால் அப்படிச் சொல்லியிருப்பார்கள். அவ்வளவு கோபத்தோடு சென்றவர் அப்புறம் உங்களையே மறந்து விட்டார், பார்த்தீர்களா? இப்படித்தான் தங்கள் மன்னர்மீது இருக்கும் விசுவாசத்தின் காரணமாக அவர்கள் கோபத்தோடு பேசுவது வழக்கம். இதற்காக நீங்கள் பயப்பட வேண்டாம்!'' என்றான் பராந்தகன்.

''என்ன இருந்தாலும் நாங்கள் ஸ்திரீகள்தானே? ஒரு பெரிய அரசாங்கத்தின் பொல்லாப்பு எங்களுக்கு ஏற்பட்டால் பயப்படாமல் எப்படி இருக்க முடியும்?'' என்றாள் சுதமதி.

'' நீங்கள் சாதாரண ஸ்திரீகளா? பெரிய சூழ்ச்சிக்காரர்கள். பல்லவ சாம்ராஜ்யத்தையும் தஞ்சை மன்னரின் ஆட்சியையும் குலைக்க யார் யார் பாடுபடுகிறார்களோ, அவர்களெல்லாம் உங்களுக்குச் சிநேகிதர்கள்'' என்றார் புலிப்பள்ளியார் கோபத்தோடு.

'' அப்படியா....... சாதாரணமாக ஒரு புகழ் பெற்ற நாட்டியக் கணிகைக்குப் பல தரப்பட்டவர்கள் நண்பர்களாக இருக்கலாம். அதற்காக அவர்களைப் பற்றித் தவறான அபிப்பிராயம் கொள்ளலாமா..?'' என்றான் பராந்தகன்.



'' நான் தவறான அபிப்பிராயத்தோடு பேசவில்லை. வைகைமாலை சிலரோடு சேர்ந்து பல்லவ சாம்ராஜ்யத்தையும் தஞ்சை முத்தரையரின் ஆட்சியையும் குலைக்கச் சதி செய்கிறாள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். பூதுகன் என்ற நாஸ்திகவாதிக்கும் வைகைமாலைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது'' என்றார் புலிப்பள்ளியார்.

''பூதுகர் வைகைமாலையின் நாயகர். அவர் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவதைப் பற்றிச் சந்தேகப்பட என்ன இருக்கிறது? ஒரு மனிதர் தம் காதலியைக் காணுவதற்காக அவள் வீட்டுக்கு வருவது கூடப் பிசகா?'' என்று கேட்டாள் சுதமதி.

''பூதுகனைப் போன்றவர்களை, உங்களைப் போன்றவர்களெல்லாம் ஆதரிக்கும் வரையில், அவனைப் போன்ற நாஸ்திகவாதிகளை இந்நாட்டில் விட்டு வைக்கும் வரையில் நம்முடைய தர்மமே சீர்குலைந்து நாசமாகிவிடப் போகிறது...'' என்றார் புலிப்பள்ளியார்.

''நமது தர்மம் என்று எதைச் சொல்லிக் கொள்கிறோமோ, அது குலையாமல் இருப்பதற்கு அதன் காவலர்கள் ஒழுங்காக இருந்தாலே போதும். அதுதான் முக்கியம். எதிராளிகள் அதை அழித்து விடுவார்கள் என்று பயப்படவே வேண்டாம். தவிர, பூதுகரின் தர்மமும் நமது தர்மத்திலிருந்து பிறந்த தர்மம்தான். 'இருக்கிறது' என்ற தத்துவத்திலிருந்துதான் 'இல்லை' என்ற தத்துவம் பிறந்திருக்கிறது. 'இருக்கிறது' என்று சொல்ல ஒருவன் இருக்கிற வரையில் 'இல்லை' என்று சொல்ல ஒருவன் இருப்பான். உலகம் உள்ள வரையில் இந்த வாதப் பிரதிவாதம் இருந்து கொண்டுதானிருக்கும். அப்படி இருந்தால்தான் சிறந்த தர்மங்கள் வளர்ந்து சீர்திருத்தம் அடையும்'' என்றான் பராந்தகன்.

''பூதுகர் நாஸ்திகவாதியாயினும் அவருடைய நடத்தையில் பிசகு சொல்ல முடியாது. அவருடைய செயல்கள் சத்தியத்தையும் நன்னெறியையும் கடைப் பிடிப்பனவாகத்தான் இருக்கும்....'' என்றான் சுதமதி.

''கடவுள் இல்லை என்று சொல்லுவது கூடக் குற்றமாகாது. சத்தியமும் சீலமும் காப்பாற்றப் பட்டால்தான் நமது தர்மம் காப்பாற்றப் பட்டதாகும்'' என்றான் பராந்தகன்.

சுதமதியின் வார்த்தைகளையும் பராந்தகனின் சொற்களையும் கேட்டுக் கொண்டிருந்த புலிப்பள்ளியாரால் தம் மனப் புகைச்சலை அடக்கிக் கொண்டிருக்க முடியவில்லை. ''நீங்கள் பூதுகனுக்குப் பரிந்து பேசுவதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை. அவனுடைய நாஸ்திக தர்மத்தைப் பற்றி நான் பேசவரவில்லை. ஆனால் அவன் இந்நாட்டில் மறுபடியும் சோழ சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்து விடலாம் என்று கனவு காண்கிறான். அதனால்தான் அவனிடம் உங்களுக்குப் பற்றுதல் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அவனை நாங்கள் இபபடியே விட்டு வைத்திருக்க முடியாது. இன்று அவன் காஞ்சியில் கலங்கமாலரையரின் கையில் சிக்கிக் கொண்டிருக்கிறான் என்ற ரகசியம் உங்களுக்குத் தெரியாது. கலங்கமாலரையன் கையில் சிக்கிய யாரும் தப்பி வாழ முடியுமா? இன்று பூதுகன் உயிரோடு இருக்கிறானோ இல்லையோ என்று சந்தேகம்...'' என்றார் ஆத்திரத்தோடும் கர்வத்தோடும்.

புலிப்பள்ளியாரின் வார்த்தையைக் கேட்ட சுதமதி 'ஹா' என்று வீறிட்டுக் கத்தினாள். சுதமதியின் அலறலைக் கேட்டுப் பக்கத்து அறையில் பேசிக் கொண்டிருந்த வைகைமாலையும் அருந்திகைப் பிராட்டியும் பதற்றத்தோடு ஓடி வந்தார்கள். (தொடரும்)



மூன் அத்தியாயம்

'தீனாஸ் ஜூட் கம்பெனி'யின் உதவி ஜெனரல் மானேஜர் என். எஸ். தரன் விசாலமான குளிர்ச்சி இயந்திரம் பொருத்திய ஆபீஸ் அறையில் ஒரு கத்தை செக்குகளில் கையொப்பம் செய்து கொண்டிருந்தான். டெலிபோன் மணி 'கணகண'வென்று ஒலித்தது. கையொப்பம் இடுவதை நிறுத்தி விட்டு 'ஹலோ' என்று ரிஸீவரைக் கையில் எடுத்தான். அவன் மனைவியின் மதுரமான குரல் காதில் விழுந்தது.

"அப்பா, அம்மா, அண்ணா, மன்னி எல்லோரும் வந்து விட்டார்கள். என்றும் போல் கிளப்பிலே சீட்டாடிக் கொண்டு இருந்து விடாதீர்கள். இன்றைக்குச் சனிக்கிழமைதானே. ஒரு மணிக்கு நேரே வீட்டுக்கு வந்து விடுங்கள்."

"தேவியின் ஆக்ஞைப்படியே" என்று குதூகலமாகப் பதிலளித்தான் தரன். அவன் முகம் ஆனந்தத்தால் பிரகாசமாக இருந்தது.

வாழ்க்கையில் அவனுக்கு லக்ஷ்மி கடாட்சம் பரிபூர்ணமாகக் கிடைத்திருந்தது. வயது நாற்பத்தைந்துக்குள் 3500 ரூபாய் சம்பளத்தில் பெரிய உத்தியோகம் வகித்து வந்தான். அவனுக்கேற்ற அழகி. பிரமீளா பி. ஏ., அவனுக்கு வாழ்க்கைத் துணைவியாக ஏற்பட்டிருந்தாள். இரண்டு பேர் அழகையும் தாக்கி அடிக்கும்படியாகப் பிறந்து வளர்ந்திருந்தார்கள், ஆசைக்கு ஒரு மகளும், ஆஸ்திக்கு ஒரு மகனுமாக. மகள் ஜெனம்பா கல்லூரியில் சீனியர் இண்டர் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். மகன் பாபு ஸ்கூல் பைனல் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். பதினாறு வயது மங்கை ஜெனம்பாவுக்குக் கல்யாணம் இன்னும் பத்து நாட்களில் நடக்கவிருந்தது. பெரிய இடத்துச் சம்பந்தம். மாப்பிள்ளை ஐ. ஏ. எஸ். பாஸ் பண்ணியிருந்தான். என்ஜினீயரின் ஒரே மகன். கல்யாண ஏற்பாடுகள் ரொம்பத் தடபுடலாக நடந்து கொண்டிருந்தன. அதற்குத்தான் அவன் மாமனார் முதலியோர் வந்து சேர்ந்திருக்கிறார்கள். கல்கத்தாவிலேயே பல வருஷங்களாக வாழ்க்கை நடத்தியதில் பிரமீளாவுக்கும் தரனுக்கும் நகரத்து வட்டாரங்களில் தனி மதிப்பு இருந்தது. இந்தக்கல்யாணத்தை வெகு ஆவலுடன் எல்லோரும் எதிர்



பார்த்துக் கொண்டிருந்தார்கள். வேலைகளை முடித்துவிட்டு, தரன் தன் காரில் வீட்டை நோக்கிக் கிளம்பினான். அழகிய பங்களா முன் கார் வந்து நின்றது. வாசலில் பெரிய பந்தல் போட்டுக் கொண்டிருந்தார்கள். இறங்கி உள்ளே சென்றான். மாமனார் மைத்துனன் முதலியோரிடம் குசலப்பிரச்னம் செய்து கொண்டே டிபன் சாப்பிட்டான். நகைக் கடையும் வெள்ளிப் பாத்திரக் கடையும் எவர்ஸில்வர் கடையும் புடவைக் கடையும் சேர்ந்தாற்போல் தோற்றமளித்தன ஹாலில். பாட்டியும் தாத்தாவும் பேத்திக்குச் சீர்வரிசைகள் தேர்ந்தெடுத்து வாங்கி வந்தவைகள் அவை. முகத்தில் பெருமிதம் ததும்பப் பிரமீளா தன் கணவனுக்குக் காண்பித்துக் கொண்டே போனாள், ஒவ்வொன்றாக. எல்லாவிதத்திலும் தனக்கு நிறைவைக் கொடுத்திருக்கும் எம்பெருமானை நினைத்துக் கொண்டான் தரன். இவை எல்லாவற்றையும், விரிந்த கண்களுடன் நோக்கிக் கொண்டிருந்தாள் ஒரு பெண்; மௌனம்யாவைவிட மூன்றுவயது அவள்பெரியவளாக இருப்பாள். கிழிந்த மில் புடவை கட்டிக் கொண்டு பேருக்குக்கூட உடம்பில் நகை எதுவும் இல்லாமல் அவள் இருந்தாள்.

"யார் இந்தப் பெண்?" என்று கேட்டான் தரன். அந்தப் பெண் அவன் குரலைக் கேட்டுத் திரும்பினாள். அவள் முகத்தைப் பார்த்தவுடன் தரனின் மனத்தை என்னவோ செய்தது. சுருள் சுருளாக வாரிவிடப் படாமல் தொங்கிக் கொண்டிருந்த நீண்ட கேசமும் அவள் சப்பை மூக்கும் அவனுக்கு யாரையோ ஞாபகப்படுத்தின.

"காய்கறி நறுக்குவது முதலிய சின்னக் காரியங்களுக்குப் பரிசாரகனுக்கு உதவியாக இந்தப் பெண்ணின் பாட்டியை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார் அப்பா. இவள் அவளுடைய பேத்தி. கூடவந்திருக்கிறாள். இவள்பேர் காமாட்சியாம். ரொம்பச் சாதுக்களாம். கல்யாணத்துக்குப் பிற்பாடு



கூட நாம் ஒத்தாசைக்கு இவர்களை வைத்துக் கொள்ளலாம். இவர்கள் மலையாளத்தைச் சேர்ந்தவர்களாம்" என்று சொல்லிக் கொண்டே போனாள் பிரமீளா.

கடைசி வார்த்தையைக் கேட்டவுடன் தரனுடைய முகம் பேயறைந்தாற் போல் ஆயிற்று. வெகு சிரமப்பட்டுச் சமாளித்துக் கொண்டான். நல்ல வேளை! எல்லோருடைய கவனமும் சாமான்களை விமரிசனம் செய்வதில் ஈடுபட்டிருந்தபடியால் அவன் முகமாறுட்டத்தை யாரும் கவனிக்கவில்லை. "சரி! நான் கொஞ்சம் வெளியே போய் வருகிறேன். மாமா தான் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ள வந்து விட்டாரே! இனிமேல் எனக்கு என்ன கவலை?" என்று சொல்லிக் கொண்டே எழுந்தான்.

"அப்பா! இதுவரைக்கும் தான்தான் எல்லாவற்றையும் ஏற்று நடத்தினாற்போல் பேசுகிறார் பார்த்தீர்களா? ஏதேனும் ஒரு சாமான் வாங்குவதிலோ ஏற்பாடுபண்ணுவதிலோ இவர் தலையிட்டாரா, கேளுங்கள், அப்பா!" என்று கொஞ்சினாள் பிரமீளா.

"சகலகலாவல்லி! நீ இருக்கும்போது எனக்கு என்னத்துக்கு இந்தக் கவலை எல்லாம்?" என்று மனைவியை ஆசையுடன் நோக்கிக் கொண்டே வெளியே வேகமாகச் சென்றான் தரன்.

மாமனார் குளிர்ந்த கண்களுடன் மாப்பிள்ளை பெண் குறும்புப் பேச்சுக்களை யெல்லாம் ரசித்துக் கொண்டிருந்தார்.

மறு நாள் தரன் குளித்து விட்டு வரும் போது பின் கட்டில் ஒரு பாட்டியம்மா அரிசி நோம்பிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். அவன் மனத்தில் கொஞ்சநஞ்சம் இருந்த சந்தேகமும் மறைந்தது. முகத்தைச் சுளித்துக் கொண்டு தலை குனிந்தபடியே அவளைத் தாண்டிச் சென்றான்.

எஜமானன் வருவதைப் பார்த்துப் பாட்டியம்மாள் எழுந்து ஒதுங்கி நின்றாள். தன்னைத் தாண்டிச் செல்லும் தரனின் முகத்தை அசைப்பில் பார்த்தபோது அவள் கண்கள் ஆச்சரியத்தினால் விரிந்தன. மறுபடியும் உற்றுப்பார்ப்பதற்கு முன் தரன் வேகமாக உள்ளே சென்று மறைந்து விட்டான்.

அன்று முதல் தரனின் போக்கே தனியாக இருந்தது. உள் பக்கமே வருவதில்லை. குளிப்பது முதல் சாப்பிடுவது வரையில் மாடியிலேயே வைத்துக்கொண்டு விட்டான். 'வேலை அதிகம், உடம்பு வலிக்கிறது. ரொம்ப நடமாட வேண்டாம் என்று டாக்டர் சொல்லியிருக்கிறார்' என்றெல்லாம் ஏதோ காரணங்கள் சொன்னான். அவன் செய்கை பிரமீளாவைக் கலக்கி விட்டது. நிஜமாகவே உடம்புக்கு என்னவோ என்று எல்லோரும் பதறிப் போய் விட்டார்கள்.

கல்யாணத்துக்கு இன்னும் இரண்டு நாட்கள் தான் இருந்தன. வருவோரும் போவோரும் ஒரே அமர்க்களமாக இருந்தது. மறுநாள் சம்பந்திகள் வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் வெகு ஜரூராக நடந்துகொண்டிருந்தன.

மௌனம்யா அறையில் அவள் கல்லூரித் தோழிகள் சுற்றிக்கொண்டு கொம்மாளம் அடித்துக் கொண்டிருந்தார்கள். நான்கு

நாட்களாகவே அவளுக்கு நாலாபக்கங்களிலிருந்தும் பரிசுகள் வந்த வண்ணமாக இருந்தன. அவைகளையெல்லாம் பிரித்து, கொடுத்தவர்கள் பெயர்ச் சீட்டுகளை ஒட்டிக் கொண்டும் இருந்தார்கள். அவளுக்குச் செய்திருக்கும் புது நகைகளையெல்லாம் போட்டுக் காட்டச் சொல்லி அழகு பார்த்துக்கொண்டிருந்தார்கள். வைர நகை வைத்திருந்த வெல்வெட் பெட்டியைத் திறந்த ஸௌம்யா திடுக்கிட்டாள். பெட்டி காலியாக இருந்தது. பீரோ, பெட்டி எல்லாம் தேடிப்பார்த்தார்கள். ஒருவர் முகத்திலும் ஈயாடவில்லை.

எதிர்பாராதவிதமாக அந்தப் பக்கம் வந்த பிரவீணா என்ன சமாசாரம் என்று விசாரித்தாள். ஸௌம்யா கண்களில் நீர் ததும்ப விஷயத்தைச் சொன்னாள். யாருக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை. வீட்டில் எல்லா அறைகளையும் ஒன்று விடாமல் தேடினார்கள். காணவே யில்லை. அங்கு வந்து போய்க் கொண்டிருந்த அமர்க்களத்தில் யார் எடுத்திருப்பார்கள் என்று சந்தேகப்படுவது? கல்யாண ஏற்பாடுகளைப் பற்றி விசாரிப்பதற்காகப் போலீஸ் கமிஷனர் தம்பதிகள் வந்திருந்தார்கள். பந்தலில் இருந்த கமிஷனர் காதில் விஷயம் விழுந்தவுடன் அவர் உள்ளே வந்தார். வேலைக்காரர்கள் எல்லாரையும் சோதனை போடப் போவதாகவும் ஒவ்வொருவராக வரவேண்டுமென்றும் கட்டளையிட்டார். இத்தனை நேரம் பயந்து விதிர்த்துக் கொண்டிருந்த காமாட்சி தன் இடுப்பைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு நழுவப் பார்ப்பதைக் கவனித்து விட்டார் கமிஷனர்.



உடனே அவளைக் கரகரவென்று இழுத்து, "நிஜத்தைச் சொல்லிவிடு. இல்லையேல் இதோ இந்தச் சாட்டையின் ருசி பார்ப்பாய்?" என்று அதட்டினார்.

"எனக்கு ஒன்றுமே தெரியாது. ஐயோ, பாட்டி! என்னை அடிக்கக் கொல்றார், பாரேன்!" என்று கத்தினாள் அந்தப் பெண். அவள் பாட்டி ஓடி வந்தாள். அவள் முகத்தில் கொடூரமான கோபம் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

"எடுத்துக் கொடுத்துவிடு" என்று அதட்டினார் கமிஷனர்.

இடுப்பில் சொருகியிருந்த வைர நகையை நடுங்கிய கைகளுடன் காமாட்சி கமிஷனரிடம் எடுத்துக் கொடுத்தவுடன் எல்லோரும் திடுக்கிட்டார்கள்.

அங்கு வந்த தரனின் முகம் களை இழந்தது. அவனுடைய மனத்திற்குள் போராட்டம் நடக்கிறது என்பதை முகம் பிரதிபலித்தது. நின்ற பாட்டியம்மா தன்னை வெறுப்பு கலந்த கண்களால் உற்று நோக்கிக் கொண்டிருப்பதையும் அவள் தன்னை அடையாளம் கண்டு கொண்டு விட்டாள் என்பதையும் புரிந்து கொண்டு விட்டான் தரன். அவன் மனம் தன் வாழ்க்கையின் முதல் அத்தியாயத்தை— தான் முடிந்துவிட்டது என்று நினைத்த முதல் அத்தியாயத்தை வேகமாகப் புரட்டியது.

அப்பொழுது இருபது வயது இளங்காளை ஸ்ரீதரன். அப்பா அம்மா இல்லாத அனாதை. இண்டர் பாஸ் பண்ணியதும் வேலை தேடி அலைந்தான். கடைசியில் தேவிகுளம் தேயிலை எஸ்டேட்டில் தேயிலை வாங்கும் மொத்த வியாபாரக் கம்பெனியின் பிரதிநிதியாகத் தேவிகுளத்து அருகிலுள்ள மூக்குக் காடுக்கு வந்து சேர்ந்தான். அங்கு சாப்பாடு வசதியான ஹோட்டல் ஒன்றும் கிடையாது. எஸ்டேட் சொந்தக்காரர் பங்களாவில் அவருக்குச் சமையல் செய்து போடும் பொருட்டு 'அவுட் ஹௌஸ்' ஒரு விதவை அம்மாளுக்குக் கொடுக்கப் பட்டிருந்தது. எஜமானர் எப்பொழுதும் அங்கு தங்க மாட்டார். ஆதலால் அந்த அம்மாளுக்கு ரொம்ப வேலை கிடையாது. வேறு நாதி இல்லாதவள். 'அவுட் ஹௌஸி'லேயே தன் மகள் பார்வதியுடன் இருந்தாள். ஸ்ரீதரன் வந்தவுடன் இவர்கள் வீட்டிலேயே பணம் கொடுத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். பார்வதி வயதுப் பெண். ஸ்ரீதரனின் வசீகரமான தோற்றத்தில் தன் மனத்தைப் பறிகொடுத்தாள் அந்தப் பேதை. பார்வதி அழகி அல்ல. செயற்கை அழகு செய்து கொள்ளவும் தெரியாதவள். ஸ்ரீதரன் அவளைப் பொருட்படுத்தவில்லை.

ஒரு நாள் திடீரென்று ஸ்ரீதரனுக்கு ஜுரம் கண்டது. பார்த்துக் கொள்ளுவதற்கு வேறு மனிதர்கள் இல்லாததால் தங்கள் வீட்டிலேயே வந்து தங்கும்படி அந்த அம்மாள் கேட்டுக் கொண்டாள். அந்த ஒரு மாதம் கண் இமை மூடாமல் சிசுருஷை செய்தாள் பார்வதி. உடம்பு குணமானதும் அவ்வம்மாள் தன் பெண்ணுக்கு ஸ்ரீதரனிடம் உள்ள அன்பைச் சொல்லி அவளைக் கல்யாணம் செய்து கொண்டு தன்னுடனேயே இருந்து வரும்படி கேட்டுக் கொண்டாள். அப்பொழுது ஸ்ரீதரன் மனத்தில் இரவும் பகலும் தனக்கு உழைத்த அந்தப் பெண்ணிடம் நன்றி உணர்ச்சி பெருகிக் கொண்டிருந்தது. அவன் கண்களுக்கு அவளுடைய அழகின்மை ரொம்பப் படவில்லை. தேவிகுளம் கோவிலில் கிருஷ்ணன் சந்நிதியில் எஸ்டேட் தொழிலாளிகள் முன்னிலையில் வெகு சுருக்கமாகக் கல்யாணம் நடந்தது. தாம்பத்ய வாழ்க்கை, ஆரம்பித்த இரண்டு மாதங்களுக்குள்ளேயே சப்பென்று போய் விட்டது அவனுக்கு.

தன் கால் பட்ட இடத்தைப் பூஜை பண்ணும் மனைவியை அவனால் நேசிக்க முடியவில்லை. இவளிடம் அவளுக்கு ஆசை அதிகரிக்க அதிகரிக்க அவனுக்கு வெறுப்புத்தான்

ஹிந்த் மூலம் முன்னேற்றங்கள்

சிறந்த ஸைகிளை மிக தேர்ந்தெடுப்பதில் விசேஷ பகுத்தறிவு திறன் உள்ளவர்கள் ஹிந்த் ஸைக்கிள்களையே வாங்குகிறார்கள். கச்சிதமான அமைப்பு, கடின உழைப்பு, மிதமான விலை முதலிய அம்சங்களுடன் திகழும் ஹிந்த் ஸைக்கிள்கள், நீங்கள் கொடுக்கும் சிறந்த பெறுமானம் அளிக்கும் எனப் புகழ் பெற்றுள்ளதில் ஆச்சரியமென்ன!



ASP/HC 118

ஹிந்த் ஸைக்கிள்ஸ் லிமிடெட், 250, வொர்லி, பம்பாய் 18.

மேலோங்கியது. அவளது நாட்டுப்புறத்து மலையாளம் கலந்த பேச்சும் செய்கைகளும் அவனுக்கு அருவருப்பாக இருந்தன.

ஆறு மாதங்கள் சென்றன. சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்த துரை ஒருவர் தேவிகுளத்தில் ஸ்ரீதரனைப் பார்த்தார். அகஸ்மாத்தாக அவனுடைய தோற்றமும் சுறுசுறுப்பும் ஆங்கிலப் பேச்சும் அவருக்கு ரொம்பப் பிடித்துவிட்டன. கல்யாணமாகாதவனுக்கும் தம் கூட மீதி சுற்றுப் பிரயாணத்துக்கு அழைத்துப் போவதாயும் கடைசியில் ஜூட் மில்லில் நல்ல வேலை பண்ணி வைப்பதாயும் சொன்னார். இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடுவானா ஸ்ரீதரன்? கொஞ்சம் நாட்களாவது தன் மனைவியைப் பார்க்காமல் இருக்கலாமே என்று உடனே ஒப்புக் கொண்டான்.

தான் உத்தியோக விஷயமாக வெளியூர் போகப் போவதாக மட்டும் சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டான். அவன் மனைவி ஆறுமாதக் கர்ப்பிணி. அவனைத் தடுத்தாள்; கெஞ்சினாள். இந்தச் சமயத்தில் தன்னைத் தனியே தவிக்க விடக் கூடாது என்று அழுதாள். ஸ்ரீதரன் திரும்பிக் கூடப் பார்க்காமல் கிளம்பிவிட்டான். துரை இவனுக்குக் கல்கத்தா ஜூட் மில்லில் வேலை செய்து வைத்து விட்டு இங்கிலாந்து சென்று விட்டார். ஸ்ரீதரனுக்கு அதிர்ஷ்ட தேவதையின் கடாக்ஷம் கிட்டியது. அவன் சாமர்த்தியத்தாலும் வாக்கு சாதுரியத்தாலும் படிப்படியாக வேலை உயர்ந்தது. பிரும்மச்சாரி என்றே எல்லோரும் கருதினர். ஸ்ரீதரன் தேவிகுளத்தையும் பார்வதியையும் கடந்து போன ஒரு அவசியமற்ற அத்தியாயமாகக் கருதி அதை மனத்திலிருந்து கிழித்து எறிந்திருந்தான்.

இரண்டு வருஷங்கள் கழித்து, மாயவரம் ஸப் ஜட்ஜ் ஒருவர் தம் பெண்ணை அவனுக்குக் கல்யாணம் செய்து கொடுக்க முன்வந்த போது 'தானே வரும் ஸ்ரீதேவியைக் காலால் உதைப்பானேன்? பார்வதியும் அவள் அம்மாவும் மலைகளுக்கு நடுவில் இயற்கை அன்னையின் மடியில் தங்கள் வாழ்க்கையைச் சரிப்படுத்தி அமைத்துக் கொண்டு விடுவார்கள். தன்னுடைய வாழ்க்கையை ஏன் கெடுத்துக் கொள்ள வேண்டும்?' என்ற சபலம் உண்டாகியது. பிரமீளாவைப் பார்த்தவுடன் கொஞ்சம் நஞ்சம் இருந்த தயக்கமும் மறைந்து போய் விட்டது. அதன் பின் அவன் இன்ப வாழ்க்கை நடத்தி வந்தான்.

இத்தனைவருஷங்களுக்குப்பின் என்னமோ பூதம் புறப்பட்டாற் போல் எங்கிருந்தோ கிளம்பி இங்கு வந்து சேர்ந்திருக்கிறார்களே இவர்கள். பார்வதியை உரித்து வைத்திருக்கிறாளே, அந்தப் பெண்! பார்வதி என்ன ஆனாள்?—இவ்வாறு எண்ணினான் ஸ்ரீதரன்.

" ஸ்டேஷனுக்குப் போன் பண்ணு. இந்தக் கழுதைக்கு ஒரு பாடம் கற்பிக்கிறேன். இந்த வயதிலே இவ்வளவு தைரியமா? திருட்டுக் கழுதை " என்று அவள் காதை முறுக்கினார் கமிஷனர்.

ஸ்ரீதரனுக்கு எதிரே நின்றிருந்த பாட்டியம்மாவின் பார்வை கூரிய அம்புகளைப்போல் துளைத்தது. அந்தப் பெண்ணைப் பார்த்தான். மருள மருள விழிக்கும் விழி பார்வதியைப் போலவே இருந்தது. பாவம்! அவனை நினைத்து ஏங்கி ஏங்கி அவள் உயிரை விட்டிருப்பாள். அவனுடைய குழந்தையைத் தானே ஜெயிலுக்கு அனுப்பிச் சாக அடிப்பதா? தன் மகளையேதான் ஜெயிலுக்கு அனுப்புவதா? ஆனால் இவளை மகள் என்று ஒப்புக் கொண்டால் ஸௌம்யாவின் கௌரவம் என்ன ஆகிறது? ஸௌம்யா அவள் தோழிகளுக்கு முன் தலைகாட்ட முடியுமா? பிரமீளா உயிரையே விட்டு விடுவாளே! இந்த அவமானத்துக்கு முன் வரப் போகும் சம்பந்திகள் என்ன எண்ணுவார்கள்?

அவன் மனத்தில் பெரிய போராட்டம் நடந்தது. கடைசியில் கடமையே வென்றது; காருண்யமே வென்றது. பிரமீளாவுக்கு வரப் போகும் அவமானம் தான் பார்வதிக்கு இழைத்த — இழைக்கப் போகும் தீங்குக்கு முன் என்ன பிரமாதம்!

" நிறுத்துங்கள் ஸார்! அந்தப் பெண் திருடியல்ல. அவளும் என் மகளே. இந்த வைர நகை அவளுக்கும் சொந்தம் " என்று சொன்னதுதான் அவனுக்குத் தெரியும், அவன் மயக்கமாக விழுந்து விட்டான்.

கண் விழித்தவுடன் தன் மனைவி தன்னைத் தடவிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். " பிரமீளா! என்னை மன்னித்துவிடு! நான் உனக்குத் தீராத அவமானத்தைத் தேடி வைத்து விட்டேன். இனிமேல் என்னபண்ணுவது? " என்றான் கண் கலங்க. அவன் முகம் அவமானத்தினால் வாடிச் சுருங்கியிருந்தது.

" நீங்கள் கவலைப்படாதீர்கள்! என்னிடம் கூட நீங்கள் உங்கள் அந்தரங்கத்தைச் சொல்லவில்லையே! எனக்கு இது தெரிந்திருந்தால் நான் இத்தனை நூரம் விட்டிருக்க மாட்டேனே. முதலில் எனக்கும் உங்களிடம் ரொம்பக் கோபமாகத்தான் இருந்தது. நீங்கள் நினைவில்லாமல் படுத்திருப்பதைப் பார்த்து, நீங்கள் எனக்குக் கிடைக்க வேண்டுமே என்று என் மனம் என்ன பாடுபட்டது தெரியுமா? பார்வதியின் கதையை அவள் அம்மா வாயிலாகக் கேட்டவுடன் என் மனம் கொந்தளித்தது. நீங்கள் கடைசி நிமிஷத்தில் வேணும் மனிதத் தன்மையுடன் அந்தக் குழந்தையைப் போலீஸ் பிடித்துக் கொண்டு போகாமல் தடுத்தீர்களே. அதுதான் என் மனதை இளக்கியது. வெளியே ஒன்றும் தெரியாது. தமிழ் தெரியாதவர்கள் அவர்கள். ரத்தக் கொதிப்பில் ஏதோ உளறினீர்கள் என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். கமிஷனரைச் சமாதானப் படுத்தி அந்தப் பெண்ணை விட்டு விடச் செய்து விட்டேன். ஐந்நூறு ரூபாய் கையில் கொடுத்துப் பாட்டியையும் பேத்தியையும் அனுப்பிவிட்டேன். பார்வதி இந்தக் குழந்தை பிறந்தவுடனேயே இறந்து விட்டாளாம். காமாட்சிக்கு வரன் அமைந்தவுடன் எழுதச் சொல்லி இருக்கிறேன். கல்யாணச் செலவுக்கு ஐயாயிரம் ரூபாய் தருவதாகச் சொல்லி யிருக்கிறேன். நீங்கள் ஒன்றும் கவலைப்படாதீர்கள். சீக்கிரம் உடம்பு குணமாகி எழுந்தால் போதும் " என்றாள் பிரமீளா.

படித்துப் பாருங்கள்

இலங்கையில் இன்பத் தமிழ்

சமீபத்தில் இலங்கையை ஆளும் பண்டார நாயகா அரசாங்கத்தினர் நம் தமிழ் மொழியை அரசாங்க மொழி என்ற நிலையிலிருந்து இழுத்துக் கீழே இறக்கி விட்டிருக்கிறார்கள். இலங்கைத் தமிழர்களை இது பெரிதும் புண்படுத்தி விட்டிருக்கிறது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை எதிர்த்துப் பெரும் கிளர்ச்சி நடைபெற்று வருகிறது. இலங்கையில் தமிழ் எவ்வளவு முக்கியமான மொழியாக இருந்து வந்தது என்பதைச் சற்றுச் சரித்திர வாயிலாகப் பார்த்தால் தமிழர்களின் கிளர்ச்சியின் நியாயம் விளங்கும். நேர்மை புரியும்!

இலங்கையில் சிங்களவர்கள்வருவதற்குமுன்பிருந்தே தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

“இலங்கையின் வட பகுதியிலுள்ள யாழ்ப்பாணம் முன்னர் நாகதீபம் எனப் பெயர் பெற்று விளங்கியதென்பது மகாவம்சம் முதலிய நூல்களால் தெளிவாகப் புலப்படுகிறது. நாகர்கள் நாகரிகமாக வாழ்ந்து ஆண்டு வந்த இந்த நாகதீபத்தினையே மணிமேகலையும் மணிபல்லவமெனக் குறிப்பிடுகிறது. நாகதீபத்திலும் இலங்கையின் ஏனையப் பகுதிகளிலும் வாழ்ந்த நாகர்களில் பெரும்பாலோர் சிங்களவராயினர். கி. மு. ஆறாம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த விசயன் எனும் அரசகுமாரனையே தங்களுடைய முதல் அரசன் எனச் சிங்கள மக்கள் கொண்டாடுகின்றனர். அவனுடன் வந்த வீரர்களும் இயக்கர்களும் நாகர்களும் தமிழர்களும் கலந்து ஏற்பட்ட சாதியினரே சிங்களவராவர். இவர்களுடைய மொழியாகிய சிங்களம் தோன்றுவதற்கு முன் இலங்கையில் தமிழே வழங்கி வந்தது. சிங்கள மொழியையும் தமிழ் வளப்படுத்தி வருகிறது.”

இப்படிச் சங்க காலத்துக்கு முன்பிருந்த இலங்கையில் தமிழ் மொழி மிகச் சீரும் சிறப்புமாக இருந்து வந்திருக்கிறது. இலங்கைத் தமிழர்கள் தமிழ் அன்னைக்கு எத்தகைய தொண்டினைச் செய்திருப்பார்கள் என்பதை ஒரு சிறிது கணித்தாலே மலைப்பு ஏற்படும். ஆறுமுக நாவலர், சி. வை. தாமோதரம் பிள்ளை, விபுலானந்த அடிகள் என்று சில பெயர்களை இன்று நம்மிடையுள்ளவர்கள் கூறுவார்கள். ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வழங்கும் நாட்டிலே இன்னும் எத்தனை எத்தனையோ பேர்கள் தமிழ் அன்னைக்கு அருங்கலன் அணிவித்திருக்கிறார்கள். அவற்றை யெல்லாம் வெகு சுருக்கமாகவும் தெளிவாகவும் பண்டித கா. பொ. இரத்தினம் அவர்கள் இந்நூலில் மிக அழகாக எழுதி யிருக்கிறார்கள்.

தமிழ்ப் புலவர்களும், தமிழ் அறிஞர்களும் தமிழன்னைக்குச் செய்த தொண்டினை மாத்திரமின்றி இலங்கையில் வாழும் பாமர மக்களின் நாடோடிப் பாடல்களிலும் எவ்வளவோ சுவை மிகுந்து காண்கிறது. இதோ ஒரு தாலாட்டுப் பாடலைப் பாருங்கள்!

பாட்டி அடிச்சாளோ
பால் வார்க்கும் சங்கானே
அண்ணா அடிச்சானோ
அரைஞாண் கயிற்றாலே
ஆண்பனையில் நொங்கே
அணில்கோதா மாம்பழமே
கூப்பிட்டு நான் கேட்பேன்
குஞ்சரமே கண்வளராய்!

இவ்விதம் இலங்கையில் இயற்றமிழ், இசைத் தமிழ், இலக்கணத் தமிழ் ஆகிய பல துறைகளில் தமிழ் மொழி எப்படி வளம் பெற்றிருக்கிறது, யார் யார் வளம் பெறச் செய்திருக்கிறார்கள் என்பதை மிக எளிய தமிழில் ஆசிரியர் கூறுகிறார்.

கடைசியாகப் பேச்சுத் தமிழ் பற்றி இந்நூல் ஆசிரியர் கூறும் யோசனைகளும் உற்று நோக்கத் தக்கவையாகும்.

தமிழ் மொழி பேச்சு வழக்கில் ஜில்லாவுக்கு ஜில்லா வேறுபாடுடன் விளங்குகிறது. தஞ்சையில் பேசும் விதம் ஒரு மாதிரி. திருநெல்வேலியில் ஒருமாதிரி. கோவையில் வேறொரு மாதிரி. இலங்கையிலேயே யாழ்ப்பாணத் தமிழுக்கும் மட்டக்களப்பு தமிழுக்கும் வித்தியாசமுண்டு. பல நாடுகளிலும் வாழும் தமிழ் மக்களிடையே பேச்சிலே சில வேறுபாடுகள் காணப்பட்டாலும் அவர்களுடைய எழுத்திலே வேறுபாடுகள் இல்லை என்று கூறத் தக்க நிலையில் இப்பொழுது தமிழ்மொழி விளங்குகிறது. பேச்சிலுள்ள வேறுபாடுகளை அளவிறந்து பெருக்காமல் தடுத்து எழுத்தில் எவ்வித வேறுபாடும் ஏற்படாமல் செய்தால்தான் தமிழ் வழங்கும் நாடுகள் யாவற்றிலும் இன்று போல் என்றும் தமிழ் மொழி ஒரு தன்மையாக இலங்கும்.

“ஆசிய மொழிகளுக்குள்ளே மிகத் தொகையான நாடுகளிலே பேசப்படும் மொழி தமிழே என்பதை நன்கு உணர்தல் வேண்டும். இத்தகைய பெருமையுடைய மொழியினை வளர்ப்பதற்கும் அது வழங்கும் நாடுகளுடன் தொடர்பு கொள்ளுதற்கும் ஏற்றதொரு பொது நிலையம் இன்னும் அமைக்கப்படாதிருப்பது தாய்த் தமிழகத்துப் பெருமக்களுக்கு இழுக்கினை உண்டாக்குகிறது. தமிழைப் பாதுகாத்து வளர்த்துப் பரப்ப வேண்டிய ஆற்றலும் உரிமையும் அவர்களுக்கே சிறப்பாக உண்டு என்பதை உலகம் அறியும்.”

இவ்வாறு பண்டித கா. பொ. இரத்தினம் அவர்கள் தாய்த் தமிழகத்தைச் சேர்ந்த தமிழர்களுக்கு ஒரு சூடு கொடுத்திருக்கிறார். தமிழ் மொழி இன்று இலங்கை, மலாயா, பர்மா, தென்னாப்பிரிக்கா, பீஜித் தீவுகள் முதலிய பல நாடுகளில் பல்லாயிரக் கணக்கான மக்கள் பேசி வருகிறார்கள். இவர்களுடன் ஒரு நேரிடையான தொடர்பு கொள்ளக் கூடிய நிலையம் ஏற்படுத்த வேண்டியது தாயகத்தைச் சேர்ந்த நம்மவர்களின் கடமையே யாகும்.

பிரசுரம்: கலைவாணி புத்தக நிலையம், கண்டி. விற்பனை உரிமை: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை, விலை ரூ. 1—8—0


நான்கு மருந்துகள்
அடங்கிய 'அனஸின்' காட்டிலும்
வேறொன்று இவ்வளவு விரைவில்
குணமளிப்பதில்லை
1. க்வினையின் சல்பேட் 2. காப்பின்
3. பினஸிடின் 4. ஆஸிடில்ஸாலிஸிலிக் ஆஸிட்
வலிகளுக்கு நிவாரணமளிப்பதில் புகழ் பெற்ற 'அனஸின்' விஞ்ஞான முறையில் சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். இவைகள் நரம்புகளின் கேந்திர ஸ்தானங்களில் கூட்டாக வேலை செய்து, தலைவலி, ஜலதோஷம் ஜுரம், பல்வலி, மற்றும் தசைவலிகளுக்குத் துரிதமாயும் அபாயமின்றியும் நிச்சயமாயும் நிவாரணம் அளிக்கிறது. வலிகளுக்குத் துரித நிவாரணமளிப்பதில் அனஸினுக்கு இணையொன்றில்லை ... அனஸினைப் போல் தீங்கு விளைவிக்காதவில்லை வேறொன்றில்லை. ஆகவே ஞாபகமிருக்கட்டும் 'அனஸின்' ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். அது இருதயத்திற்குத் தீங்கு விளைவிக்கவோ அல்லது வயிற்றுக் கோளாறுகள் உண்டு பண்ணவோ செய்யாது. 'அனஸின்' லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கிறது. 'அனஸின்' விலை ஒவ்வொருவர் சக்திக்கும் ஏற்றது. ஒரு பாக்கெட்டின் விலை 12 நயா பைசா மட்டுமே.
நான்கு மருந்துகளின் சேர்க்கையான 'அனஸின்' வேண்டுமென்றே கேளுங்கள்
WILL NOT UPSET THE STOMACH
DOES NOT HARM THE HEART
ANACIN
TABLETS
ஒரு பாக்கெட்டின் விலை 12 நயா பைசா

விபத்தின் விளைவு

மனத்தின் விசித்திரத்தை என்னவென்று சொல்ல? என் மகனுக்கு வேலை கிடைக்கவில்லையே என்ற கவலை மறைந்தபோது, என்னை விட்டுப் போகப் போகிறானே என்னும் ஏக்கம் பிறந்தது. 'தனியாகப் போகிறாயே, ரங்கா' என்றேன்.

ரங்கன் சிரித்துக் கொண்டான். அவன் சிரிப்பின் அர்த்தம் நான் இன்னும் குழந்தையா என்று கேட்பது போலிருந்தது. குழந்தையில்லைதான். எத்தனை பெரியவனானாலும் பெற்றவனுக்குப் பிள்ளைதானே? அதுவும் இந்த மழையிலும், புயலிலும் அவனைத் தனியாக அனுப்புவதென்றால் மனம் இடம் கொடுக்கவில்லை.

''நானும் வருகிறேனே, ரங்கா!'' என்றேன்.

''நீங்கள் வந்தால் வருகிற மழையை நிறுத்தி விடுவீர்களா, அப்பா...'' என்றான். உண்மைதான். வரும் விதியைத் தடுக்க யாராலும் முடியாதுதான். நானும் வருவதாகப் புறப்பட்டபோது ரங்கன் தடுத்தான்.

'' நீங்கள் வருவதில் எனக்கு ஆட்சேபனை ஒன்றும் இல்லைதான். ஆனால் அம்மாவுக்கு உடல் நலமில்லாதபோது நீங்களும் என்னோடு அங்கே வந்து விட்டால்...''

உண்மைதான். மகன் மீதுள்ள பாசத்தால் மனைவியை மறந்து விட்டேனே. அதற்கு மேல் பேச எனக்கு நாவேது..?

ரங்கன் புறப்பட்டுச் சென்றான்.

ரயில் நிலையம் சென்று வழியனுப்பிவிட்டுத் திரும்பியபோது வெளியில் மட்டும் புயல் வீசவில்லை. என் உள்ளத்திலும் அதை விடப் பலமான புயல் வீசத் தொடங்கி விட்டது.

நாலு தினங்களுக்குப் பின் அவனிடமிருந்து கடிதம் வந்தது. எனக்குப் போன உயிர் மீண்டது. வேலையை ஒப்புக்கொண்டு விட்டதாகவும் நண்பன் ஒருவன் வீட்டில் ஒரு போர்ஷனில் தங்கி யிருப்பதாகவும் அவன் கடிதம் எழுதி யிருந்தான்.

தன்னைப் பற்றிக் கவலை வேண்டாமென்று சுலபமாக எழுதி விட்டான் ரங்கன். கடமை எண்ணம் கொண்ட மனம் அதை ஒப்புக்கொள்ள மறுத்தது. அதன் முழு வேகம் அன்றைய இரவு என்னை ஜனதா எக்ஸ்பிரஸின் பிரயாணியாக்கியது.

ஒரு மணி தாமதத்துடன் வண்டி சென்னை வந்தடைந்தது. வெளியே மழை பெய்த ஈரத்தின் சதசதப்பு. டாக்ஸி எடுத்துக் கொண்டு ரங்கன் கொடுத்த விலாசத்தை அடைந்தேன்.

வண்டியை வாசலில் நிறுத்திக் கொண்டு, உள் பக்கம் சென்று விசாரித்தேன். அங்கே ரங்கன் இல்லை. கிட்டத்தட்ட என் மகன் வயதுள்ள ஒருவன் வந்து என்னை வரவேற்றான்.

'' நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்...?'' என்று கேட்டான்.

'' நான் ரங்கனின் தந்தை. அவன் இங்கே தானே இருக்கிறான்?''

கோமதி சுப்பிரமணியம்



'' ஆமாம், அவர் என்னோடுதான்இருக்கிறார். ஆனால் இப்பொழுது வீட்டில் இல்லை. இனி மாலையில்தான் வருவார். அது வரை என் விருந்தாளியாகத் தங்கி யிருக்கலாம்'' என்றான். நான் தயங்கினேன்.

'' வாருங்கள், உள்ளே போகலாம். மழை நேரம்'' என்று அவன் முன்னே நடந்தான்.

'' ரங்கன் சௌக்கியம் தானே......அவன் அறை...,'' என்றேன்.

'' அவர் மாலையில்தான் வீடு திரும்புவார். சாவி அவரிடமே உண்டு. நீங்கள் என்னை வித்தியாசமாய் நினைக்காமல் என்னோடு தங்கி யிருங்கள்'' என்று மீண்டும் வற்புறுத்தவே அவன் பின் சென்றேன். அவன் என்னை அழைத்துச் சென்ற அறை விசாலமாக இருந்ததோடு வெகு சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருந்தது. அவன் தன் அறையை வைத்துக் கொண்டிருந்த ஒழுங்கும், என்னிடம் அவன் நடந்து கொண்ட அன்பும் மரியாதையும் என்னைக் கவர்ந்திழுத்தன.

சிறிது நேரத்திலே, ரங்கனோடு தங்கியதைப் போன்ற அமைதியைப் பெற்றேன்.

குளிக்கவும் சாப்பிடவும் வசதி செய்து கொடுத்தான். ஓட்டலுக்காகப் புறப்பட்ட போது தடுத்து அங்கேயே சாப்பிடச் செய்தான். '' உங்கள் பையன் வரும்வரை நீங்கள் என் விருந்தினர். என்னோடுதான் சாப்பிட வேண்டும்'' என்று வற்புறுத்தவே அவன் அன்புக்குக் கட்டுப்பட்டு ஒப்புக் கொண்டேன்.

சாப்பாடு முடிந்து வீட்டைச் சுற்றிக் காண்பித்தான் சோமு. எத்தனை பெரிய இடம்?

'' ஏன் தம்பி, இத்தனை பெரிய வீட்டில் நீ மட்டும் தனியாகவா இருக்கிறாய்? உன்னைத் தவிர வேறு யாருமில்லையா...?'' அவன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். சொல்ல நினைத்ததைச் சொல்ல முடியாதபடி எங்கிருந்தோ வந்த குரல்...குரலா அது? ஒப்பாரி யல்லவா எழுந்தது.

புலம்பியழும் அந்தக் குரல் சோமுவின் முகத்தைக் கண்டச் செய்தது.

'' என்ன தம்பி சத்தம்? எங்கிருந்து வருகிறது...?''

'' சற்று முன் ஒரு கேள்வி கேட்டீர்கள் அல்லவா? இத்தனை பெரிய வீட்டில் நான் மட்டுமே வசிப்பதற்குக் காரணம் கேட்டீர்களே, அதற்கு இந்தக் குரல்தான் காரணம்...''

'' எனக்குப் புரியவில்லையே?'' என்றேன்.

'' என் அறைக்கு வாருங்கள்...விவரமாகப் பேசலாம்'' என்றான்.

பெரிய பூர்வ பீடிகை ஒன்றுமில்லாமலே என்னிடம் பேசத் தொடங்கினான் சோமு.

* * *

சிறு வயதிலேயே தந்தையை இழந்து விட்ட நான் தாயாரின் பராமரிப்பில் வளர்ந்தேன். செல்வம் இருந்தது. சீராக வளர்த்த தாயாரிடம் என்றுமே எனக்கு மதிப்பு உண்டு.

படித்துப் பட்டம் பெற்றேன். கலபத்தில் உத்தியோகமும் பெற்றேன்.

என் நண்பன் சிதம்பரத்தின் கல்யாணம் முடிவாகி யிருந்தது. ஆப்த நண்பன். மாப்பிள்ளைத் தோழனாக என்னையே வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தான்.

நாலைந்து நாட்களாகவே வானம் மூட்டம் போட்டுக் கொண்டு மப்பும் மந்தாரமுமாக இருந்தது. சூல் கொண்ட மேகம் எந்த நேரத்திலும் எங்கள் பேற்றைக் கொட்டித் தீர்த்து விடுவோம் என்று உறுமிக்கொண் டிருந்தது.


'' இந்த மழையில் உன்னை அனுப்புவதற்கு நான் தயாராக இல்லை'' என்று அம்மா மறுத்து விட்டாள்.

புறப்படவேண்டிய நாள் வந்தது. நாலைந்து நாட்களாகவே கருங் கும்மெனச் சூழ்ந்திருந்த மேக மண்டலங்கள் அண்டம் கிடுகிடுக்கும் இடியோசையுடன் மழை பொழியத் தொடங்கி விட்டன.

என் பிரயாணத்துக்கு அம்மா ஒரேயடியாக முட்டுக்கட்டை போட்டு விட்டாள்.

ஏமாற்றத்தால் என் உள்ளம் சாம்பியது. வாடிய என் முகத்தைக் கண்டு வேதனை அடைந்த என் தாயார் சொன்னாள்: ''கலியாணத்துக்கு இன்னும் இரண்டுநாள் இருக்கிறதல்லவா? நாளையோ மறு நாளோ மழையின் ஆர்ப்பாட்டம் சற்று ஓய்ந்திருந்தால் நீ போகலாம்.''

மறுநாள் மழையின் ஆர்ப்பாட்டம் ஓரளவு அடங்கி யிருந்தது. இடியும் புயலும்



நின்று சிறு சிறு தூரல்கள் தூறிக் கொண்டிருந்தன. வெளிவாங்கிய வானத்தைப் போலவே என் மனத்திலும் சற்றுக் கலக்கம் தெளிந்து போயிருந்தது. சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்த நான் அன்றைய இரவு பிரயாணத்துக்காக அம்மாவின் அனுமதியை நாடினேன். என்ன நினைத்தாளோ, என் பரிதாப வேண்டுகோள் அவள் உள்ளத்தைத் தொட்டிருக்க வேண்டும். அரைகுறை மனத்தோடு எனக்கு அனுமதி அளித்தாள். எனக்கு வேண்டியது அதுதானே?''

துள்ளும் நினைவோடு பயணம் கட்டினேன். என் தாயாரிடம் விடைபெற்றுக் கொண்ட போது, ஏனோ அவள் கண் கலங்கியிருந்தது. செல்வ மகனின் நலனில் அக்கறை பரிவு தாய் மனத்துக்கு இருந்தது. நான் வாசற்படியைத் தாண்டியபோது கண்ணைத் துடைத்து விட்டுக் கொண்டாள். அதுதான் என் அன்னையை நினைவோடு கடைசியாகக் கண்ட காட்சி...

அன்று இரவு தூத்துக்குடி எக்ஸ்பிரஸில் சென்னையை விட்டுப் பயணமானேன். சுமை இறங்கிய மனத்துடன் என் பிரயாணம் தொடர்ந்தது. விடியும் நேரத்துக்கிடையே யுள்ள மணியை விரல் விட்டுப் போக்கியபடி ஆவல் துள்ளக் காத்திருந்தேன்.

ரயிலின் தடதடவென்ற தாலாட்டின் ஓசையிலே பிரயாணிகள் தூங்கி வழிந்து கொண்டிருந்தார்கள். இரவு புறப்படுகிற அவசரத்தில் சரியாகச் சாப்பிடவில்லை. நேரத்துக்கு நேரம் பசி வயிற்றைக் கிள்ளி என் தூக்கத்தைக் கலைத்தது. எப்படியாவது அம்மாவிடமிருந்து தப்பித்துக் கொண்டால் போதும் என்ற ஆத்திரத்தில் வந்து விட்டேன். ஆனால் இப்பொழுதோ... சூடாகக் காப்பியோ, டீயோ கிடைத்தால் போதும். அதற்கு எங்கே போவது? அடுத்து வரும் ஸ்டேஷனில் இறங்கிச் சாப்பிட்டுக் கொள்ளலாமென்று இருந்து விட்டேன்.

நிலையம் வருவதன் அறிகுறியாக வண்டி மெதுவாய் ஊர்ந்து நின்றது. பெயர்ப் பலகையைப் பார்த்தேன். இருட்டில் பெயர் சரியாகத் தெரியவில்லை. எந்த நிலையமாக இருந்தாலும் சரி, காப்பி சாப்பிட்டு வருவதென்று இறங்கி விட்டேன். கார்டு சொன்னார், வண்டி பத்து நிமிஷந்தான் அந்த ஸ்டேஷனில் நிற்கும் என்று. பக்கத்திலிருந்த குழாயில் வாயைக் கொப்பளித்தேன். என் வண்டியிலிருந்தும் சற்றுத் தள்ளியிருந்த டீக்கடையை அடைவதற்குள் என் மயக்கம் அதிகரித்தது. தள்ளாடித் தள்ளாடி, டீக்கடையை அடைந்த போது என் மயக்கம் அதிகரித்து விட்டது. என்னையுமறியாமல் அங்கே கிடந்த பெஞ்சியில் சாய்ந்தேன்.

கண் விழித்துப் பார்த்த போது வண்டி நகர்ந்தது. ஓடிப் போய் ஏறலாமென்றாலோ உடம்பிலே தெம்பில்லை.

என் பெட்டி படுக்கை எல்லாம் என் நண்பனின் திருமணத்தில் கலந்து கொள்ளும் அவசரத்தில் என்னை விட்டு முன்னேறிச் சென்று கொண்டிருந்தன! நல்ல காலம்! மணிபர்ஸ் மட்டும் மடியில் தங்கி விட்டது.

அடுத்து வரும் வண்டியை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருந்தேன். பின்னும் சில மணி நேரத்தில் திடீரென்று எங்கிருந்தோ அபாயச் சங்கின் அலறல் ஒலி எழுந்தது. ரயில்வே ஊழியர்கள் அங்குமிங்கும் பரபரப்போடு ஓடினர். உதவிக்கான எஞ்ஜின்களும் வண்டிகளும் நொடியில் பறந்தன. ஒன்றும் புரியாமல் விழித்தேன். எங்கே என்ன நடந்தது என்று விசாரித்தபோது கேள்விப்பட்ட சேதி என்னை மெய்சிலிர்க்கச் செய்தது. எந்த வண்டியைத் தவற விட்டு விட்டு மனம் சோர்ந்து நின்றேனோ, அதே வண்டி அடுத்து வந்த காட்டாற்றுப் பாலத்தின் உடைப்பிலே சிக்கிக் கவிழ்ந்து விட்டதென்னும் செய்தியை அறிந்தபோது நான் அடைந்த நிலையை என்னால் விளக்கத் தெரியவில்லை. ஆயிரக் கணக்கான மக்களுக்கு நேர்ந்த நஷ்டத்தை நினைத்துக் கதறியழுதது மனம். என் தாயார் செய்த பூஜாபலன், நான் விபத்தில் சிக்காமல் பிழைத்தேன். ஆனால் அந்த விபத்து என் தாயாரின் நினைவைப் பலி கொண்டு விட்டது.

"விபத்து நடந்ததை அம்மா அறிய நேர்ந்தால் அம்மாவின் மனம் அதிர்ச்சி யடையுமென்ற எண்ணம் அப்போது தோன்றவில்லை. என் நினைவெல்லாம் நண்பனின் திருமணத்தில் கலந்து நின்றதால் பஸ்ஸைப் பிடித்துக் கொண்டு திருச்சி சென்றேன். இடையிலே நேர்ந்த தாமதத்தால் முகூர்த்த நேரத்தில் சேராவிட்டாலும் பிற்பகல் சடங்குகளுக்கு மாப்பிள்ளைத் தோழனாக ஆஜராகி விட்டேன். நண்பனுக்கு ஒரே மகிழ்ச்சி. விநோதப் பொருளைப் பார்ப்பது போன்ற ஆர்வத்துடன் பார்த்து நின்றான்.

"அன்றைக்கே எங்களோடு வந்தால் விபத்தில் சிக்கிக் கொள்வாயென்று உன் அம்மா தடுத்தாரே... இன்று நீ வந்த வண்டி விபத்துக்கு உள்ளானதை அறிந்தால் எப்படித் துடிப்பார்?'' என்று அவன் கேட்ட பொழுதுதான் என் நினைவு விழிப்புற்றது. இதுவரை ஏன் இந்த எண்ணம் தோன்றாமல் இருந்தது? நண்பனுக்கு நன்றி தெரிவிக்கும் எண்ணத்தையும், மறந்து ஓடிப் போய் 'நான் பத்திரமாக வந்து சேர்ந்து விட்டேன்' என்று அம்மாவுக்குத் தந்தி கொடுத்து விட்டு வந்தேன். நான் தந்தி கொடுத்த சில மணிக்குள்ளாக என்னைத் தேடி ஒரு தந்தி வந்தது. 'அவசரம். உடனே புறப்பட்டு வரவும்' என்று என் வீட்டுக் காரியஸ்தர் தெரிவித்திருந்தார்.

உடனே வரும்படியான அவசரம் அப்படி என்ன வந்து விட்டது? அந்த விவரத்தையாவது தெரிவித்திருந்தார்களா? அதுவுமில்லை. என் தந்தி சென்ற பிறகே நான் இருக்குமிடம் தெரிந்திருக்க வேண்டும்.


அதற்கு மேல் திருச்சியில் இருப்புக்கொள்ளவில்லை. சென்னைக்கு ஓடோடியும் வந்தேன். என் அம்மாவின் நிலை என் நெஞ்சைத் தீய்த்தது. காரியஸ்தரும் வேலைக்காரர்களும் கதை கதையாய்ச் சொன்னார்கள்:

விபத்து நடந்த செய்தியை ரேடியோ மூலம் கேள்விப்பட்ட எங்கள் உறவினர் ஒருவர் விஷயத்தைத் தெரிவித்திருக்கிறார். அவ்வளவுதான்; அம்மா கதறித் துடித்தாளாம். 'என்னாலல்லவா என் மகன் இன்று விபத்துக்குள்ளாக நேர்ந்தது? அவன் போக விரும்பிய போதே அனுப்பியிருந்தால் இன்று


நீங்கள் செய்யும் தொழில் என்ன?

வியாபாரம் . . . தச்சுவேலை . . . எலக்டீரிஷியன் . . .
மெகானிக் . . . இஷ்டமான பொழுது போக்குத்தொழில்?

எதுவானாலும், இதுவரை விற்பனை செய்யப்படாததும், யாரும் வாங்கக்கூடிய விலையில், கச்சிதமான, சக்திநிறைந்த 'உல்ப் கப்' ¼" எலக்டிரிக் டிரில், உங்களுக்கு மிகவும் அத்தியாவசியம்.
முதன் முதலில் 'உல்ப் கப் டிரிலுடன்' தொடங்கி, உங்கள் தொழிற்சாலை முழுவதும், மின்சார சக்தியால் செலுத்தப்படும் ஆயுதங்களால் முன்நிரப்பு செய்யுங்கள்.
இதுவரை கை ஆயுதங்களால் செய்யப்பட்டுவரும், துவாரமிடுதல், பாலிஷ் செய்தல், ரம்பம் அறுப்புபோன்ற வேலைகளிலுள்ள சிரமம், தாமதம், இவைகளை 'உல்ப் கப்' ஏற்றுக்கொண்டு, உங்களுக்கு சௌகரியத்தை அளிக்கும். இலகுவாய் நிறுப்பக்கூடியதுமட்டுமன்றியில் இரைச்சலும் கூட. மிகவும் சுலபமாக வேலை செய்யலாம்.
சிரமமின்றி உங்களால் அதிகப்படியான வேலைகள் செய்யமுடியும்.



Wolf Cub



PSRI-1

ராலீஸ் இண்டியா லிமிடெட்,
320, லிங்கச்செட்டித் தெரு, மதராஸ். பம்பாய் • கல்கத்தா • டெல்லி

என் மகனை இழந்திருக்க வேண்டாமே' என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு புரண்டாளாம். வேலைக்காரர்களும் உறவினர்களும் எத்தனையோ சொல்லித் தேற்றி யிருக்கிறார்கள். அம்மாவின் மனம் ஒன்றிலும் அமைதி பெறவில்லை. நேரத்துக்கு நேரம் ஓலம் அதிகமாகிப் பின்னால் தன் நினைவு இல்லாமல் பிதற்றத் தொடங்கி விட்டாள்.

அம்மாவின் மனத்திலே அவள் கொலைகாரி என்ற எண்ணம் ஆழப் பதிந்து விட்டது.

நான் தப்பி வந்து விட்டதாக எவ்வளவோ சொன்னேன். பிறர் சொல்லைக் கேட்கும் நிலையில் இருந்தால்தானே! மேலே நடக்க வேண்டியதைச் சிந்தித்தேன். பிரபல மனோ தத்துவ நிபுணர்களை வரவழைத்து யோசனை கேட்டேன். 'உன் தாயார் தன்னைக் கொலைகாரியாக மனத்தில் நன்கு பதிய வைத்துக் கொண்டாள். அதிர்ச்சியால் ஏற்பட்ட நோய்க்கு மீண்டும் அதே சூழ்நிலையில் வைத்தியம் செய்தால் பூரண குணமாகும். விபத்து நேர்ந்த சமயத்தைப் போலவே மீண்டும் எப்பொழுது மழையும் புயலும் ஏற்படுகின்றனவோ அந்தச் சந்தர்ப்பத்தில் உன் அம்மாவுக்கு வைத்தியம் செய்யலாம்' என்று சொன்னார்கள்.

நாங்கள் இருந்த அறைக்குள் யாரோ வரும் நிழல் சாய்ந்தது. ரங்கன் வந்து கொண்டிருந்தான்.

''அப்பா!''-அந்தக் குரலிலேதான் எவ்வளவு பாசம்! ''நான் கடிதம் எழுதியிருந்தேனே. நீங்கள் ஏன் அப்பா இந்த மழையிலும் காற்றிலும் வந்தீர்கள்?''

''நல்ல வரவேற்பு, ரங்கா. மகனைப் பார்க்க வந்த தந்தைக்குச் சரியான உபசரணைதான்'' என்று உரிமையோடு கண்டித்தான் சோமு.

''அதற்குச் சொல்ல வில்லை சோமு. அம்மாவுக்கு உடல் நலமில்லை'' என்றான் ரங்கன்.

''உன் அம்மா சௌக்கியமாகத்தான் இருக்கிறாள். அவள்தான் உன்னைப் பார்த்து வரும்படி என்னை அனுப்பிவைத்தாள்.''

''பெரிய சுமை இறங்கியது போலிருக்கிறது, அப்பா. எனக்கு அதே கவலைதான்.''

''அவளுக்கும் அதேதான். சதா உன் நினைவு. நீ எப்படியிருக்கிறாயோ என்று புலம்பல். முடிந்தால் அவளே புறப்பட்டு வந்திருப்பாள்.''

இதற்குள் சோமு எழுந்தான்.

''எனக்கு அனுமதி கொடுங்கள். நான் டாக்டரைப் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது'' என்று எழுந்தான் சோமு.

''அவசியம் செய், அப்பா. உம். சோமு உனக்குத் துணையாக நானும் வருகிறேனே!'' என்று எழுந்தேன்.

''வேண்டாம், வெளியே சுழற்காற்று சீறிப் பாய்கிறது. நீங்கள் ரங்கனோடு பேசிக் கொண்டிருங்கள். நான் காரியஸ்தரை அழைத்துச் செல்லுகிறேன்'' என்று கூறி வெளியே புறப்பட்டான்.

வெளியே வந்த சோமு மலர்ந்த முகத்துடன், ''டாக்டர் வாருங்கள்! உங்களைப் பார்க்கத்தான் நானும் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். நீங்களே வந்து விட்டீர்கள். இதுவே நன்மைக்கு அறிகுறி'' என்றான். சோமுவின் முகத்தில்தான் எத்தனை ஆர்வம்!



பிரபல பிரசுகதாரும் தஞ்சை ஜில்லா தன்னிலம் ஜாகிர் சொந்தக்காரருமான ஸ்ரீ வி. கே. ஞானசிரமய்யர் அவர்களின் குமாரி சௌபாக்யவதி கௌரிக்கும், கும்பகோணம் ஸ்ரீ எஸ். ராமகிருஷ்ண ஐயர் (ஆர். எஸ். அண்ட் ஸன்ஸ்) அவர்களின் குமாரன் சிரஞ்சீவி நாகராஜனுக்கும் நல்லமாங்குடியில் சமீபத்தில் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. ஆயிரக்கணக்கான உறவினர்களும், நண்பர்களும் விஜயம் செய்து கல்யாணத்தைச் சிறப்பித்து மணமக்களுக்கு ஆசி கூறினர்.

வாழ்க கௌரி — நாகராஜன்!

''நீங்களும் சற்று இப்படி வருகிறீர்களா?'' என்று என்னைக் கேட்ட போது மறுக்க முடியாமல் நானும் அவர்களோடு உள்ளே போனேன். ரங்கன் உடை மாற்றிக் கொள்ள உள்ளே போனான்.

உள்ளே போனதும் டாக்டர் தம் திட்டங்களை வெளியிட்டார்.

டாக்டர் உத்தரவுப்படி மறுகணம் பிரயாண உடையுடன் சோமு பெட்டியும் கையுமாக மாறினான். அந்தக் கோலத்தில் தாயார் இருந்த அறைப் பக்கம் சென்ற போது. 'பாவி நான் என் மகனை எமனுலகுக்கு வழிகாட்டி அனுப்பி வைத்தேனே'' என்ற பழைய பல்லவியை உரக்க இரைந்து ஒப்பாரி பாடிக் கொண்டிருந்தாள் சோமுவின் தாயார்.

தயக்கத்துடன் அடியெடுத்து வைத்த சோமுவிடம், ஒத்திகை நடத்திக் காட்டும் டைரக்டரைப் போல மறைவாக நின்று அவன் பேச வேண்டிய விதத்தையும் வார்த்தைகளையும் விளக்கித் தைரியமூட்டி அனுப்பினார் டாக்டர்.

'டக்டக்' என்ற ஒலியுடன் தாயார் முன் போய் நின்றான் சோமு. அவள் பார்வையில் படும்படியாகப் பெட்டி, படுக்கைகளை இறக்கி விட்டு, ''அம்மா நான் நண்பனின் கல்யாணத்துக்கே போவதில்லை என்று தீர்மானித்து விட்டேன். ஒரே மழையும் புயலுமாக இருக்கிறது'' என்று கூறிவிட்டு, அங்கே கிடந்த கட்டிலில் தொப்பென அமர்ந்தான்.

வெளியே அடித்துப் பெய்த பெரு மழையிலும் சுழற்றியடித்த சூறாவளிக் காற்றிலும் வயித்து ஒப்பாரி பாடிக் கொண்டிருந்த

கேள்வியும் பதிலும்

வேகமாக ஓடிக் கொண்டிருந்த லாரியை 'டக்'கென்று பிரேக் போட்டு நிறுத்தினுன் அதன் டிரைவர்.

அதன் பலனுக, அதே வேகத்தில் பின்னுல் வந்து கொண்டிருந்த புத்தம் புதிய கார் மோதி அப்பளமாக நொறுங்கி விட்டது.

பெரும் நஷ்டத்துக்குள்ளான கார் சொந்தக்காரர் லாரி டிரைவர் மீது வழக்கு தொடர்ந்தார்.

நீதி மன்றத்தில் அவனே விசாரித்த நீதிபதி, "ஏன் அப்பா! நீ கையைக் காட்டி யிருக்கக் கூடாது?" என்று கேட்டார்.

"காட்டி என்ன சார் பிரயோசனம்? இத்தனை பெரிய லாரியே கண்ணில் படாத இவருக்கு என் கை எங்கே சார் கண்ணில் பட்டிருக்கப் போகி றது?" என்று லாரி ஓட்டிய வேகத் திலேயே நீதிபதியின் கேள்விக்குப் பிரேக் போட்டான் லாரி டிரைவர்.

தாயாரின் காதில் முதன் முதலாக மற்றவர் கள் குரலைக் கேட்கும் தன்மை அப்பொழுது தான் ஏற்பட்டிருக்க வேண்டும். சோமுவின் குரல் வந்த திசையை வெறித்து நோக்கிய அவள் பார்வையிலே தெளிவற்ற தன்மை மிதந்தது.

"அடேயப்பா! இந்த மழையிலும் புயலி லும் எவன் போவான்! அம்மா நான் போகவே யில்லே!" என்று வேண்டுமென்றே இரைந்து சொன்னுன்.

"சோமு!" அவள் குரலிலேதான் எத்தனை நடுக்கம்? நடுக்கமா? இல்லே, உணர்ச்சி வேகம் அவள் குரலிலும் முகத்திலும் நன்கு தெரிகிறதே!

"நீ இன்று போகவே யில்லேயா?" அவள் கண்களிலே மிதந்தது ஆவலா? சந்தேகமா?

"இல்லேயம்மா! உனக்குச் சந்தேகமா யிருந்தால் இதோ பெட்டி, படுக்கையைப் பாரேன்" என்றுன்.

சற்றே தெளிவாகப் பேசிய அவளுக்கு என்ன வந்து விட்டது? "இன்று போகா விட்டாலென்ன? இன்னும் இரண்டு நாளில் போவாய். புயலில் சிக்கிச் சாவாய். பாவி. நான்தானே உன்னைச் சாவுக்கு வழி காட்டி அனுப்பி வைத்தேன். சோமு! அப்பா, சோமு! நான் உன்னைக் கொன்று விட்டே னடா!" தலையிலே 'மடேர் மடேர்' எனப் போட்டுக் கொண்டாள்.

"அம்மா! விபத்து நடந்த அன்று உங்கள் பிள்ளை ரயிலுக்குப் போகவே இல்லையே!" டாக்டர் தம் உடையை மாற்றிச் சாதாரண உடையிலே வந்து நின்றுர்.

வியப்பும் திகைப்பும் போட்டியிடச் சிலே யாய்ச் சமைந்த சோமுவைத் தலையாட்டிச் சைகை செய்து விட்டு டாக்டரே தொடர்ந் தார்: 'கேளுங்கள், நான் தற்செயலாய் எங்கள் உறவினர் ஒருவரை வழியனுப்ப வந்திருந் தேன். சோமுவைப் பிளாட்பாரத்தில் கண்ட தும் வண்டி தவறி விட்டதைச் சொன்னுன். 'மீண்டும் போய் இரவில் தொந்தரவு செய்ய வேண்டாம். என் வீட்டுக்கு வாயேன்' என்று என்னோடு என் வீட்டுக்கு அழைத்துப் போயிருந்தேன். இரவில் என்னோடு 'என் வீட்டில்தான் (வேண்டுமென்றே டாக்டர் அழுத்திச் சொன்னுர்) தங்கியிருந்தான். காலையில் எழுந்ததும் வீட்டுக்கு வரவேண்டும் என்றுன். அன்று என் பிறந்த நாள். என் னோடு விருந்து சாப்பிட்டு விட்டு மாலையில் போகலாம். உன் அம்மா நீ கல்யாணத்துக்குப் போயிருப்பதாக எண்ணிக் கொள்ளட்டுமே என்றேன். சொல்லைத் தட்டமாட்டாமல் தங்கி விட்டான். அது தெரியாமல் நீங்கள் தவறுதலாக எண்ணி விட்டீர்கள்."

"தவறுதலாகவா! அப்படியானுல் ரேடி யோவில் சொன்னுர்களே!"

"ரேடியோவில் விபத்து நடந்ததைச் சொல்லி யிருப்பார்கள். உங்கள் பிள்ளைதான் அந்த வண்டியிலேயே போகவில்லேயே!"

"எல்லாம் தெரிஞ்சவங்க மாதிரி பேசும் நீங்கள் யாரையா? என்னே ஏமாற்றவா பார்க் கிறீங்க?" தெளிவற்ற தன் நினைவை, நினைவு படுத்த அவள் கேட்ட கேள்வி டாக்டரின் முயற்சிக்கு, வெற்றிக்குக் கொடி காட்டியது.

'நான் சோமுவின் அதிகாரி. என்னைத் தெரியவில்லேயா?' இடுக்கிட்டு விழித்தவளைப் போலக் கண்களைக் கொட்டி விழித்துப் பார்த் தாள். மறுகணம் என்ன நினைத்தாளோ, எழுந்து விட்டாள். "ஐயோ! சோமு, உன் அதிகாரியிடமா இத்தனை நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டேன். சோமு, நீயாவது சொல்லப்படாதா? சோமு! சோமு! எங்கே யிருக்கிறுய்? நீ போகவே இல்லேயா? உயி ரோடு இருக்கிறுயா? சோமு, சோமு!' என்று உணர்ச்சி வசமாய்த் தடுமாறியவள் திடீ ரென்று மயங்கிக் கீழே விழுந்தாள்.

"நீ அதிர்ஷ்டசாலி, சோமு. இனி உன் அம்மா சுய நினைவு பெற்று விடுவாள். இப் பொழுது ஒரு ஊசி போடுகிறேன். தூங்குகிற நேரம் வரையில் தூங்கட்டும், நீயாக எழுப்ப வேண்டாம். இரண்டு மூன்று நாட்களாவது உன் அன்னையை விட்டுப் பிரியாமல் இருக்க வேண்டும். முக்கியமாகக் கவனிக்க வேண்டி யது ஒன்று. உன் அம்மாவின் எதிரில் அவளுக் கிருந்த சித்தப் பிரமையைப் பற்றி அவள் தெரிந்து கொள்ளும்படியான எந்தப் பேச்சும் பேசக் கூடாது."

ஒருவாரம் தங்கி ஊருக்குப் புறப்பட்ட போது சோமுவின் தாயாரே எனக்கு ஆறுதல் கூறி வழியனுப்பி வைத்தாள். 'ரங்கனைச் சோமுவின் சகோதரனுகக் கருதி நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறேம். நீங்கள் அவனைப் பற்றிய கவலேயேயில்லாமல் சென்று வரலாம்' என்று கூறியதைக் கேட்டபோது என் மனம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தது.


ரங்கனும் சோமுவும் இருபுறமும் நிற்க, நினைவுபெற்ற சோமுவின் தாயார் நடுவில் நின்று வழியனுப்ப நிறைந்த மனத்துடன் அவ்விடம் விட்டகன்றேன்.



மூக்கடைப்பா ?
தலைநீர் இளக்கமா?
அவைகளை அகற்றுவது...
அமிர்தாஞ்சன்
இன்ஹேலர்
தயாரிப்பாளர்கள்: அமிர்தாஞ்சன் லி., மதராஸ் 4.
மற்றும் பம்பாய் 1, கல்கத்தா 7.
அமிர்தாஞ்சன் பெயின்பாம் வலிகளுக்கு ஒப்பற்ற நிவாரணி தயாரிப்பவர்



வஸந்தத்தின் புத்துணர்ச்சி
உங்களுக்கு இன்றும்..என்றும்
மிக்க கீர்த்தி வாய்ந்த காஷ்மீர் பொக்கே
உங்கள் உடலுக்கு இளவேனிற்காலத்தின் புத்துணர்ச்சியளிக்கிறது...
அதைக் குளிர்ச்சியாகவும்
வாசனை திகழவும்
வைக்கிறது.
Cashmere Bouquet
TALCUM POWDER
காஷ்மீர்
பொக்கே
டால்கம் பௌடர்
ஆண்கள் விரும்பும் நறுமணத்துடன்


பாலர் மலர்
கடிகாரம்
இந்தத் தங்க வாச்சு—எங்கள்
அப்பா தந்த வாச்சு
ஐந்து வருஷம் முன்பு—ரூபாய்
அறுநூற் றைம்ப தாச்சு
கணக்காய் சாவி கொடுத்து—அதி
காலை வேளை தன்னில்
மணிக் கையிலே கட்டி—நான்
மணியைப் பார்க்கும் வாச்சு
எண்கள் எத்தனை உண்டு—என்பது
எண்ணிப் பார்த்தால் தெரியும்
ஒன்று இரண்டு மூன்று—என்று
உண்டு பன்னி ரண்டு
ஈட்டி போலே நீண்டு—இதில்
இரண்டு முட்கள் உண்டு
கஷ்டம் எதுவும் இன்றி—அவை
கணக்காய் மணியைக் காட்டும்
ஸ்விட்சர் லாந்து வாச்சு—மிகச்
சிறப்பு வாய்ந்த வாச்சு
செவியில் வைத்துப் பார்த்தால்-'டிக்டிக்'
சத்தம் செய்யும் வாச்சு
★
ரத்தினம்





பார்க்கும் திரவத்தும் பச்சைப்புகை பூதம் அரசகுமாரி ஆய்ஷாவை அடையும் வித்தைத் சூசகமாக அறிவித்து விட்டு மறைந்ததும் மன்னர் திகைப்பிலிருந்து விடுபட்டார்.

பூதத்தின் புதிரைத் தண்டோரா மூலம் நாடெங்கிலும் அறிவிக்கும்படி காலிப் ஹாஸிமார் தனது வஸீரைக் கூப்பிட்டு உத்தரவு பிறப்பித்தார்.






"பூதம் தெரிவித்த வார்த்தைகளின் பொருளை அறிந்து யார் அரசகுமாரியை மீட்டு வருகிறார்களோ அவர்களுக்கு ஏராளமான வெகுமதியாம்!" பாக்தாத் நகர முழுதும் இதே பேச்சு.

பூதத்தின் வார்த்தைகளிலுள்ள கருத்தை அது பேசிக் கொண்டிருக்கும் போதே காசிம் ஒருவாறு ஊகித்துக் கொண்டு விட்டான். பளபளக்கும் பச்சைக் கண்களால் அது தன்னைப்





பார்த்துத் தனக்காகவே அந்த வார்த்தைகளைச் சொல்லியதாக அவன் கருதினான். தன் முடிவு சரியோ தவறோ. அதைப்பற்றி யாரிடமும் விவாதிக்க அவனுக்கு விருப்பமில்லை. ஆகவே

யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் பாக்தாத் நகரத்தை விட்டுச் சந்திர மலையை நோக்கித் தன்னந்தனியாக அரசகுமாரி ஆய்ஷாவை மீட்டுவரக் கிளம்பி விட்டான்.




பல நாள் பிரயாணத்துக்குப் பின்
காடு, மலை, வனம் வனாந்திரங்களை
எல்லாம் கடந்து சந்திரமலை அடி
வாரத்துக்கு வந்து சேர்ந்தான் காசிம்



மாலைவாயில் நின்றும் சந்திரமலையைக்
கண்டு காசிம் கலங்கவில்லை. கரடு
முரடானதும் ஆபத்துக்கள் நிறைந்தது
மான செங்குத்தான மலை மீது ஏறலானான்.




மூச்சு வாங்கிற்று. வியர்வை வெள்ளமாகப்
பெருகிற்று. செங்குத்தான அதன் பக்கங்
களைப் பிடித்துக் கொண்டு இனி இதற்கு
மேலே ஏற முடியாது என்ற ஒரு நிலையில்



காசிம் களைத்துப் போய் அப்படியே பாறை
மீது படுத்து விட்டான். அப்போது திடீ
ரென்று அதிகக் காற்று ஒன்று வீசியது. கரு
மேகம் போன்ற நிழல் அவன் மீது படிந்தது.



காசிம் தலையை உயர்த்திப் பார்த்தான்.
அவன் உடல் பயத்தால் நடுங்கிற்று.
இதுவரை பார்த்தே இராத பிரும்மாண்டமான
ஒரு பொன்னிறக் கழுகு தனது இறக்கை



களை விரித்தபடி இவனை நோக்கிப் பாய்ந்து
வந்தது. காசிம் 'வீல்' என்று கத்தினான்
அடுத்த வினாடி அது காசிமைத் தூக்கிக்
கொண்டு ஆகாயத்தில் பறந்தது. (தொடரும்)

சாப விமோசனம்







ஸ்பெயின் நாட்டிலே அவன் ஒரு பெரிய வியாபாரி. அவனிடம் மொத்தம் நாற்பத்தேழு கழுதைகள் இருந்தன. ஒரு நாள் காலையில் ஒரு கழுதைக்குப் பதிலாக ஒரு சிறுவன் கட்டுண்டு கிடப்பதைக் கண்டான்.

"என்ன அப்பா! என் கழுதை எங்கே? நீ ஏன் இங்கே இப்படிக் கட்டுண்டு கிடக்கிறாய்?" என்று கேட்டான் வியாபாரி.

"என் அப்பாவுக்கு என்மேல் ஒரு நாள் அசாத்தியக் கோபம் வந்து விட்டது. நீ கழுதையாகப் போகக் கடவது என்று சபித்துவிட்டார்! இப்பொழுது கோபம் குறைந்து சாபத்தை வாபஸ் பெற்றிருப்பார் என்று நினைக்கிறேன். இல்லா விட்டால் நேற்று கழுதையாக இருந்த நான் இன்று பையனாக மாற முடியுமா?" என்றான் பையன்.


வியாபாரி அநுதாபம் கொண்டு, "அப்பாவின் கோபத்துக்கு ஆளாகாதே!" என்று புத்திமதி சொல்லி அனுப்பினான். பையனோ ஒரே ஆனந்தத்துடன் தன் சகாக்களைத் தேடி ஓடினான். அவர்கள் அந்தக் கழுதையை விற்றுப் பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்து வைத்திருந்ததுதான் அவனது அந்த ஆனந்தத்துக்குக் காரணம்.

மறு நாள் கடைத் தெருப் பக்கம் போயிருந்த வியாபாரி, தனது அந்தக் கழுதை ஒரு கடை வாசலில் கட்டப்பட்டிருப்பதைக் கண்டான். ஆழ்ந்த மனத் துயருடன் அந்தக் கழுதையை அணுகி, "என் அப்பா! அதற்குள் வேறு விஷமம் செய்து அப்பாவின் கோபத்துக்கு ஆளாகி விட்டாயா? மறுபடியும் கழுதையாகப் போகுமாறு அவர் சபித்துவிட்டாரா? என் புத்திமதியைக் கேட்காமல் போனாயே! ஆனால் நான் இனி உன்னை விலைக்குவாங்கி நஷ்டப்படத் தயாராக இல்லை!" என்று கூறினான்.



ரா. வீ.

உங்கள் அழகை அதிகரிக்கிறது பாதுகாக்கவும் செய்கிறது!



அற்புத நறுமணமூட்டப்பட்ட சார்மிஸ் ஸ்னோ உங்கள் சருமத்தை அழகுறச் செய்கிறது. பாதுகாக்கிறது. எல்லா பருவ காலங்களிலும் சருமத்தை மிருதுவாகவும், வெல்வெட் போல வழவழப்பாகவும் வைக்கிறது. பவுடருக்கு ஆதாரமானது. எண்ணைப் பசையில்லாதது. சார்மிஸ் ஸ்னோ சொற சொறப்பும், வரிகளும், கோடுகளும், புண்களும் ஏற்படாமல் சிறந்த முறையில் தடுக்கிறது. பூச்சிக்கடிகள், வெடிப்புகளினின்றும் பாதுகாக்கிறது.



ஒரு கால்கேட் உயர்தர சரக்கு

சார்மிஸ் ஸ்னோ

CSG/3

சார்மிஸ் பலகாரிய க்ரீமையும் டால்கம் பவுடரையும் பரீட்சித்திருக்கிறீர்களா?



18. கழுகு ஏமாற்றியது!

"கலா! அந்தப் பொம்மைப் பட்டணத்தில் ஒரு பெரிய காடும் அல்லவா இருக்கிறது! அதன் நடுவில் பயங்கரத் தோற்றமுடைய ஒரு பொம்மையுங்கூட இருக்கிறது. இரண்டு பெரிய தலைகள். ஒவ்வொரு தலையிலும் இரண்டு கண்களுக்குப் பதிலாக ஒவ்வொரு கண். ஒட்டைச் சிவிங்கியைப் போல் கழுத்து. உடல் பெரிய திமிங்கிலத்தைப் போல் தோற்றமளிக்கிறது. ஆதி மனிதனைப் போலக் காணப்படுகிறது. பெரிய உடம்புக்குத் தகுந்தாற் போல இல்லாமல் மிகவும் சிறிய முதலைகளைப் போலக் கால்கள். கோவில், பள்ளிக்கூடம், போலீஸ் ஸ்டேஷன் முதலிய யாவும் இருக்கின்றன. இம்மாதிரி ஒரு பொம்மைப் பட்டணத்தை நான் பார்த்ததே இல்லை. அதோ, பார்! ஒரு சின்னஞ்சிறிய பலகையில் 'மாயப் பட்டணம்' என்று எழுதியிருக்கிறது."


"அண்ணா, எனக்கு நாட்டியம் என்றால் மிகவும் பிரியம் ஆயிற்றே! நல்ல நாட்டியம் பார்த்து வெகு நாட்களாகின்றன. அதோ அரசனுக்கு முன்னால் நாட்டியம் ஆடுவது போல் நட்டுவனுருடன் இருக்கிற பெண் பொம்மையைப் பார்த்தாயா? என்ன அழகு! உண்மையாகவே அவள் நாட்டியத்தைப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது. நம்மிடமுள்ள மாயப் பந்தின் உதவியினால் இந்தப் பட்டணத்துக்கு உயிர் கொடுத்தால்...."

"கலா, வேண்டாம்! ஏதாவது ஆபத்து வந்தாலும் வரலாம்."

"இல்லை, அண்ணா! அரசன் முன்னிலையில் நிற்கும் நாட்டியம் ஆடும் பொம்மை இருக்கிறதே, அதைப் பார்த்தாலே அதற்கு உயிர் இருந்தால் நன்றாக ஆட்டம் ஆடும் போலத் தோன்றுகிறது. சற்று நேரம் நாட்டியம் ஆடுவதைப் பார்த்து விட்டுப் பிறகு கொஞ்ச நேரத்துக்கெல்லாம் பந்தின் உதவியால் மறுபடியும் பொம்மைகளாக மாற்றி விட்டால் போகிறது."

"அப்படியானால் சரி. நானும் சங்கீதம் கேட்டு வெகு நாட்களாகின்றன. இந்தப் பட்டணத்துக்கு உயிர் கொடுத்து விட்டு, சங்கீத வித்வான்கள் பாடுவதைக் கொஞ்ச நேரம் கேட்கிறேன்."

"ரொம்ப சந்தோஷம், அண்ணா! நான் இதுவரையிலும் உன்னிடம் உள்ள பந்தை உபயோகிக்கவே இல்லை. அந்தப் பந்தைச் சற்றுக் கொடு. நான் உபயோகித்துப் பார்க்கிறேன்" என்று மால்கோவிடம் இருந்த மாயப்பந்தை வாங்கிக் கொண்டாள் கலா. தான் கையில் வைத்திருந்த ஜமக்காளமும், முத்து மாலையும் உள்ள பையைக் கீழே வைத்தாள். "இங்கே காணப்படும் பொம்மைப் பட்டணம், உண்மையான மிகவும் பெரிய பட்டணமாகவே மாறி, எல்லாப் பொம்மைகளும் உண்மையான





உருவம் அடைந்து, உயிர் உடனே பெற வேண்டும்'' என்று மெதுவாகச் சொல்லிக்கொண்டே பந்தைக் கீழே போட்டு, பந்து எழும்பியவுடன் பிடித்துக் கொண்டாள்.

அந்தச் சமயத்தில் யாரோ பின்பக்கத்திலிருந்து கலாவின் காலைக் கீறுவது போல் இருந்தது. திரும்பிப் பார்த்தாள். ஒரு பெரிய கழுகு தனது அலகினால் கலாவின் காலைக் குத்திற்று. கழுகு திடீரென்று பறந்து தனது அலகினால் கலாவின் கையில் இருந்த பந்தைக் கவ்விக் கொண்டது. பந்தைக் கவ்விக் கொண்டதுமல்லாமல் கீழே வைத்திருந்த மந்திர ஜமக்காளமும் முத்துமாலையும் உள்ள பையையும் தனது கால்களில் உள்ள கூர்மையான நகங்களினால் எடுத்துக் கொண்டு வெகு வேகமாகப் பறந்து சென்றது. ''ஐயோ, அண்ணா! பந்தையும் ஜமக்காளத்தையும் கழுகு தூக்கிக் கொண்டு போய் விட்டதே!'' என்று கூச்சலிட்டாள் கலா.

அதைக் கேட்ட மால்கோஷ் பதைபதைத்துப் போனான். பறக்கும் கழுகைப் பிடிக்க யத்தனித்தான். முடியவில்லை. கீழேயிருந்து ஒரு பெரிய கல்லை எடுத்துத் தனது முழு பலத்துடன், ஆகாயத்தில் பறந்து போய்க் கொண்டிருக்கும் கழுகின் மீது விட்டெறிந்தான் மால்கோஷ். ஆனால் கல் கழுகின் கால்களில் ஒன்றைத் தாக்கியது. கழுகு அதை லட்சியம் செய்யாமல் வேகமாகக் கண்ணுக்குத் தெரியாத தூரத்துக்குப் பறந்து சென்றது. பாவம், மால்கோஷும், கலாவும் என்ன செய்வார்கள்? ஏதோ விளையாட்டாகப் பந்தை உபயோகிக்கப் போய்ப் பந்தும், ஜமக்காளமும் அல்லவா அவர்களிடமிருந்து பிரிந்து விட்டன! அவைகளை எப்படி அவர்கள் திரும்பப் பெறப் போகிறார்கள்? எடுத்துக் கொண்டு போனவர்கள் யார் என்று தெரிந்தாலல்லவா ஏதாவது முயற்சி செய்யலாம்? கலா சிறிய குழந்தையைப் போல் தேம்பித் தேம்பி அழலானாள்.


ஆனால் மால்கோஷ் கலாவைச் சமாதானம் செய்தான்.

''அண்ணா! கழுகுபோல் வந்தது மந்திரவாதியாகத்தான் இருக்க வேண்டும். ஒரு வேளை நாம் இருக்கும் இடம் அறிந்து கார்கூர் கழுகு போல வந்து நம்மிடத்தில் இருந்த விலை மதிப்பில்லாத பொருள்களைக் கொண்டு போய் விட்டானோ? அல்லது மந்திரக் கிழவிதான் அப்படி வந்து எடுத்துக் கொண்டு போயிருப்பாளோ?'' என்று அழுது கொண்டே கேட்டாள்.

''கலா! இருக்காது. மந்திரக் கிழவி நம் மீது மிகவும் அன்பு கொண்டிருக்கிறாள். நமக்கு நன்மையே செய்வதாக வாக்களித்திருக்கிறாள். அவள் ஒரு நாளும் நமக்குத் தீங்கு செய்து நம்மைத் துக்கக் கடலில் ஆழ்த்த மாட்டாள். நீ சொல்வது போல ஒரு வேளை சமயம் பார்த்துக் கார்கூர்தான் கழுகு போல் வந்திருக்க வேண்டும். அவன்தான் மந்திர ஜமக்காளத்தின் மீது ஒரு கண் வைத்திருந்தான். அவன் இல்லாவிட்டால் மந்திர விதையின் உதவியால் ஒரு மந்திரவாதியை மகாராஜா, பட்டணத்தில் தோல்வியுறச் செய்தோமே, அவன் கழுகு போல வந்து நம் மீது உள்ள வஞ்சத்தைத் தீர்த்திருப்பான். ஆனால் பலர் அவன் சமுத்திரத்தில் மூழ்கி இறந்து விட்டான் என்கிறார்கள். ஆனால் எது எப்படிப் போனால் என்ன? நமது தகப்பனார் நமக்கு அவருடைய ஆசீர்வாதத்துடன் கொடுத்த இரண்டு அரியசாமான்களும் போய்விட்டன. இனிமேல் இந்த இரண்டு சாமான்களும் இல்லாமல் நாம் வீடு திரும்ப முடியாது. திரும்பி நாம் எப்படி அப்பாவைப் பார்க்கப் போகிறோமோ? நம்முடைய அவசர புத்தியினால் நமக்குப் பெரிய நஷ்டம் அல்லவா வந்து விட்டது!'' என்றான் மால்கோஷ். துக்கத்தினால் தனது கண்களில் வந்த நீர்த் துளிகளைத் துடைத்துக் கொண்டான்.

அந்தச் சமயத்தில் யாரோ நாட்டியம் ஆடுவது போலவும் இனிமையான நாட்டிய சங்கீதமும், கலாவின் காது





அன்னதான சிவன் சங்கத்தின் செயலாளர் ஸ்ரீ டி. எஸ். இராமநாதய்யர் அவர்களின் புதல்வி சௌபாக்கியவதி கல்பகத்துக்கும் ஸ்ரீ வி. ஸ்ரீனிவாச ஐயர் அவர்களின் புதல்வன் சிரஞ்சீவி எஸ். வி. ராமனுக்கும் ஜூலை மாதம் 8-ந் தேதி சென்னை தியாகராய நகரில் ஸ்ரீ விருசாமிபிள்ளை கோஷ்டியாரின் நாதசுர வாத்தியம் முழங்கத் திருமணம் மிகவும் விமரிசையாக நடந்தேறியது. வாழ்க, மணமக்கள்!

களில் ஒலித்தன. "ஹா ! ஹா ! அண்ணு, நமது தூக்கத்திறல் நமக்கு எதிரில் நமது மந்திரப் பந்திறல் ஏற்படுத்தப் பட்ட பிரமாதமான பட்டணத்தைப் பார்க்க வில்லையே. எவ்வளவு பெரிய பட்டணம் ! நமது பந்தின் சக்தியே சக்தி ! நமது கண்களுக்குத் தோன்றிய பெரிய பாலைவனம் முழுவதுமே ஒரு பெரிய பட்டணமாக அல்லவா மாறி விட்டது. அந்த அருமையான நாட்டியம் ஆடும் சலங்கை யின் சத்தத்தையும் காதுக்கு இனிய பாட்டையும் கேட்டாயா, அண்ணு!" என்று ஆனந்தத்துடன் கூவினுள் கலா.

"ஆமாம், ஆமாம்! எவ்வளவு அழகான நகரத்தை நாம் சிருஷ்டி செய்திருக் கிறேம் !"

" அண்ணு, நான் உடனே சென்று அந்த நாட்டியத்தைப் பார்க்க விரும்புகிறேன் " என்றுள் கலா.

"எனக்கும் அந்த இனிமையான பாட்டை நேராகச் சென்று கேட்க ஆசையாக இருக்கிறது " என்றுன் மால்கோஷ்.

மறு நிமிஷம் மால்கோஷும், கலா வும் பாட்டு வரும் திசையை நோக்கிச் சென்றுர்கள்.

"அண்ணு! பார்த்தாயா, அந்தப் பொம்மை நகரம் எப்படி இருந்ததோ அப்படியே அல்லவா இந்தப் பட்டணமும் இருக்கிறது ! எவ்வளவு பெரிய பட்டணம் ! முதலில் நாம் அரண்மனைக்குச் சென்று நாட்டியத்தையும், பாட்டையும் கவனிப் போம். இனிமேல் நாம் இருவரும் இந்தப் பட்டணத்திலேயேதான் நம் காலத்தைக் கழிக்கும்படி ஏற்படும். ஏனென்றல் நம் மிடத்தில் மறுபடியும் இந்த உண்மையான பட்டணத்தை நாம் முன்பு எண்ணிய பிர காரம் பொம்மைப் பட்டணமாக மாற்றுவ தற்கு உள்ள சக்தி கிடையாது " என்று கலா சொல்லிக் கொண்டிருக்கும்போது அரண்மனை வாயிலை அடைந்தார்கள். நேராக அரண்மனைக்குள் நுழைய யத்தனித்தார்கள்.

" யார் அது, உத்தரவு இன்றி உள்ளே வருவது ? அரசன் உத்தரவு இல்லாமல் உள்ளே போகக் கூடாது " என்று இரண்டு அரண்மனைச் சிப்பந்திகள் கலாவையும் மால்கோஷையும் மேலே போகாமல் தடுத் தார்கள். அதைக் கேட்ட மால்கோஷ். "ஹி! ஹி! ஹி !" என்று சிரித்தான்.

" என்ன, எங்களைப் பார்த்து ஏளன மாகச் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டார்கள் அந்தக் காவல் புரியும் அரண்மனைச் சேவ கர்கள். உடனே மால்கோஷ், "ஒன்று மில்லை. சற்று நேரத்துக்கு முன்பு வரை யில் நீங்கள் இருவரும் இரண்டு மரப் பொம்மைகளாக இந்த இடத்தில் நின்று கொண்டிருந்தீர்கள். நாங்கள்தான் உங்க ளுக்கு உயிர் கொடுத்து உண்மையான மனிதனைப் போல் தோற்றமளிக்கச் செய் தோம். கடைசியில் உங்களுக்கு உயிர் கொடுத்த எங்களையே நீங்கள் உள்ளே அனுமதிக்க மறுக்கிறீர்கள் !" என்றுன்.

மால்கோஷ் சொல்லியதைக் கேட்ட சிப் பந்திகளில் ஒருவன், " நீங்கள் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. பொம்மைக ளாக இருந்த எங்களுக்கு நீங்கள் உயிர் கொடுத்து மனிதர்களைப் போல ஆக்கினீர் களா? யாராவது கேட்டால் சிரிக்கப் போகி றர்கள். சற்று நேரம் கழித்தால் இந்த மாயப் பட்டணத்தையே நீங்கள்தான் ஏற் படுத்தினீர்கள் என்று சொல்வீர்கள் போல் இருக்கிறதே !" என்றுன்.

"ஏன் நமது அரசரைக்கூட இவர்கள் தான் உயிர் கொடுத்து அரசராக ஏற்படுத்தி யிருக்கிறர்கள் என்று சொல்வார்கள் போல் இருக்கிறதே !" என்றுன் மற்றொரு சிப்பந்தி.

" சரியாகச் சொன்னீர்கள். நீங்கள் கூறுவது உண்மையே. பொம்மை அரச ராக இருந்தவரை, உண்மையான அரச ராக்கி உயிர் கொடுத்தவர்கள் நாங்களே. இந்த மாயப் பட்டணத்தையே நாங்கள் தான் எங்களிடத்தில் உள்ள மந்திரசக்தி யிறல் ஏற்படுத்தினேம். அதற்கு என்ன சந்தேகம் ?" என்றுன் மால்கோஷ்.

உடனே அந்தச் சிப்பந்திகள், "ஐயா! நீங்கள் இதை விட்டுப் போய் விடுங்கள். இல்லாவிட்டால் உங்களை யாராவது பைத் தியக்காரன் என்று பைத்தியக்கார ஆஸ்பத் திரிக்கு அழைத்துக் கொண்டு போய்விடப் போகிறர்கள் " என்றுர்கள். (தொடரும்)

மலைச்சாரல் மாதவி



அத்தியாயம் 41

மாதவியின் பாசம்

மாதவி, ஜயந்தி இருவரின் நிலையைப் பற்றியும் விவரிப்பதே இயலாத காரியம். அவர்களுடைய துயரத்தை எடுத்துக் கூற வார்த்தைகளுக்குச் சக்தி போதாது.

சிவசங்கரனும், கருணாகரனும் சண்டை போட்டுக் கொண்ட தினம், இரவு பத்து மணியாகியும் தம்பி வராமல் போனது மாதவிக்கு மிகவும் பீதி யளித்தது.

அன்று கருணாகரன் மலைமீது ஏறிச் சென்று ஒரு மணி நேரத்துக் கெல்லாம் ஜயந்தி ஓடி வந்தாள்.

வரும்போதே, ''அக்கா!'' என்று விம்மிக்கொண்டு வந்தாள். மாதவி அவளை அணைத்துக் கொண்டு தேறுதல் சொல்லி விஷயத்தை விசாரித்தாள். கருணாகரன் ஜயந்திக்குத் தான் கடிதம் எழுதுகிறான் என்பதை முன்பே ஊகித்திருந்தாள் மாதவி.

ஆகவே, ''என்ன எழுதி யிருந்தான், ஜயந்தி?'' என்று ஆவலுடன் கேட்டாள் மாதவி.

ஜயந்தி கடிதத்தில் எழுதி யிருந்ததை யெல்லாம் சொல்லி விட்டு, ''அக்கா!; அவர் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும். என்னைக் கோபித்துக் கொள்ளட்டும். இனிமேல் திரும்பி வர மாட்டேன் என்று எழுதி யிருக்கிறாரே. இது சரியா? அவர் அப்படி வெறுக்கும்படியாக நான் என்ன செய்து விட்டேன்?'' என்று விம்மினாள்.

''நீ வருத்தப்படாதே, ஜயந்தி. அவன் இப்படியெல்லாம் முட்டாள்தனமாக எழுதுவானென்று நான் நினைக்கவே இல்லை. அப்படி அவன் உன்னை மணந்து கொள்ள விரும்பவில்லையானால் உன்னுடைய அன்பைப் பெற அவன் தகுதி யில்லாதவன் என்றுதான் அர்த்தம். எல்லோர் மனத்தையும் புண்படுத்துவதிலேயே ஒருவன் நேரமெல்லாம் செலவழித்தால் அவனை மனிதன் என்று எப்படி ஒப்புக் கொள்வது? இன்று அவன் பேசிய பேச்சுக்கு இன்னொரு பராக இருந்தால் நிச்சயம் முகத்தில் கூட விழிக்க மாட்டார். ஆனால் அவரைப் பற்றி



என்னால் அப்படி நினைக்க முடியவில்லை. இந்தக் கிராதகனுக்குப் பயந்து, நான் வேறு அவர் மனம் புண்படும்படி பேசிவிட்டேன். அவரைப் பார்த்து மன்னிப்பு கேட்டுக் கொள்ளும் வரை என் மனம் சமாதானமடையாது'' என்றாள் மாதவி.

ஜயந்தி அன்று நடந்ததையெல்லாம் விவரமாகச் சொல்லும்படி கேட்கவே எல்லாவற்றையும் மாதவி கூறினாள்.

''இருவரும் மலைமீது ஏறியா போயிருக்கிறார்கள்? அங்கே எங்கேயாவது சந்தித்து மறுபடியும் சண்டை போட்டுக் கொள்ளப் போகிறார்களே? நான் வேண்டுமானால் அப்பாவிடம் சொல்லி, இரண்டு ஆட்களை அனுப்பி, இருவரையும் தேடி அழைத்துக் கொண்டு வரச் சொல்லட்டுமா?'' என்று மிகவும் கவலையுடன் கேட்டாள் ஜயந்தி.

''சே! சே! மறுபடியும் ஒரு நாளும் சண்டை போட்டுக்கொள்ள மாட்டார்கள். கருணாகரன்தான் பிதற்றுவானே தவிர, அவர் ஒதுங்கிப் போய்விடுவார்'' என்றாள் மாதவி. கூடவே அவளுக்கு ஜயந்தியிடம் கருணாகரனைப் பற்றித் தான் இப்படிப் பேசக்கூடாது என்று தோன்றியது. என்ன இருந்தாலும் அவரைப் பற்றி உயர்வாகவும், கருணாகரனைப் பற்றிக் குறைவாகவும் பேசினால் ஜயந்திக்குப் பிடிக்காதென்று உணர்ந்தாள். அவளைச் சமாதானப் படுத்துவதற்காகவே அப்படிச் சொன்னாலும் அவள் அதை விரும்ப மாட்டாள் என்று மாதவி அறிந்திருந்தாள்.

''இருந்தாலும் இவர் திரும்பிவரமாட்டேன் என்று எழுதியிருக்கிறாரே! அதனால்தான் பயமாக இருக்கிறது. நான் அப்பாவிடம் சொல்கிறேன்.''

''வேண்டாம், ஜயந்தி! அவருக்கோ உடம்பு சரியாக இல்லை. ஏற்கெனவேயே அவருக்குப் பல தொந்தரவுகள். நீ இதைப் பற்றிச் சொன்னால் ரொம்பக் கவலையும் வருத்தமும் அடைவார். கருணாகரன் எழுதியிருப்பதையெல்லாம் நீ உன் அப்பாவிடம் சொன்னால் அவருக்கு அவன்மீது வெறுப்புத்தான் ஏற்படும். பிறகு அவனை அடியோடு பிடிக்காமல் போய்விடலாம். அதற்கு வேண்டிய முகாந்திரம் இருந்தாலும் நாம் ஏன் அதற்குக் காரணமாக இருக்க வேண்டும்? இதைப் பற்றி அதிகமாக ஆர்ப்பாட்டம் செய்யாமல் விட்டு விடுவதே நல்லது. கருணாகரன் எப்படியும் இரவில் காட்டில் திரிய மாட்டான். எங்கேயாவது போவதாக இருந்தாலும்

இங்கே வந்து விட்டுத்தான் போவான். அதனால் நீ கவலைப்படாதே. இங்கே வரும்போது நான் நல்ல வார்த்தை சொல்லி அவனைச் சமாதானப் படுத்து கிறேன்!" என்றாள் மாதவி.

"சரி, அக்கா! அதுதான் நியாயம் என்று தோன்றுகிறது. அவர் ஏதோ ஆத்திரத்தில் எழுதியதை வைத்துக் கொண்டு அப்பாவிடம் சொல்லி அமர்க்களம் செய்வானேன்?" என்று கூறி விட்டு ஜயந்தி கிளம்பினாள்.

"ஜயந்தி! எனக்கு ஒரு உதவி செய். நாளைக் காலையில் ஒரு ஆளை அவர் வீட்டுக்கு அனுப்பி நான் வரச் சொன்னதாகச் சொல்லி யனுப்பு!" என்றாள் மாதவி.



"கட்டாயம்சொல்லி யனுப்புகிறேன், அக்கா!" என்று கூறி விட்டு விடை பெற்றுக் கொண்டாள் ஜயந்தி.

இரவு தன்னந்தனியாக மாதவி தன் அறையில் உட்கார்ந்து கொண்டிருந்த போது அன்று நடந்தது முழுவதும் அவளுக்கு ஒன்றன்பின் ஒன்றாக ஞாபகம் வந்தது. கையிலிருந்த புத்தகத்தில் மனம் செல்லவே இல்லை. மழை பெய்ய ஆரம்பித்ததும் அவளுக்கு ரொம்பக் கவலையாகப் போயிற்று. 'கருணாகரன் மழையில் நனைந்தால் உடம்புக்கு ஆகாதே. ஏன் வரவில்லை?' என்று தன்னையே கேட்டுக் கொண்டாள்.

"ஐயோ, ஜயந்தி சொன்னபடி ஆள் அனுப்பித் தேடச் சொல்லியிருக்கலாமே, முட்டாள்தனமாக வேண்டாம் என்று சொன்னேனே!" என்று அங்கலாய்ப்பாக இருந்தது அவளுக்கு.

கருணாகரன் திரும்பி வந்தால் கழுகுமலை முருகன் கோவிலுக்கு அர்ச்சனை செய்வதாகப் பிரார்த்தனை செய்து கொண்டாள்.

"நான் திரும்பி வராவிட்டால் அதிசயப்பட வேண்டாம்" என்ற வாக்கியம் திரும்பத் திரும்ப அவள் உள்ளத்தில் சுழன்று சுழன்று வந்தது.

நேரமாக ஆக அவளுடைய பதை பதைப்பும் அதிகமாயிற்று. 'ஒருவேளை தற்கொலை செய்து கொண்டிருப்பானோ? அவமானம் பொறுக்க முடியாமல் உயிரைவிடத் துணிந்திருப்பானோ?' என்று தோன்றியதும் அவள் நடுங்கினாள். அந்த எண்ணம் தோன்றாமலிருப்பதற்காகப் புத்தகத்தில் மனத்தைச் செலுத்தப் பார்த்தாள். அது முடியவில்லை. காற்றில் ஜன்னல் கதவு இலேசாக அடித்துக் கொண்டாலும் கருணாகரன்தான் கதவைத் தட்டுகிறானோ என்று ஓடிப் போய்க் கதவைத் திறந்து பார்த்தாள்.

இரவெல்லாம் மாதவி சரியாகத் தூங்கவில்லை. சற்றுத் தூங்கினாலும் பயங்கரமான கனவுகள் கண்டு திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள்.

மறு நாள் காலை பொழுது விடிந்தது. மாதவிக்கு இருப்பே கொள்ள வில்லை. சிவசங்கரன் வீட்டுக்குப் போய் அவரிடம் மன்னிப்பு கேட்டு விட்டு வர வேண்டும் போலிருந்தது. இரவு இருந்த பயம் இப்போது சற்றுத் தெளிந்திருந்தது. தம்பியைக் காணவில்லை என்பதை அவரிடம் சொன்னால் ஏதாவது யோசனை சொல்வார் என்ற எண்ணத்துடன், சீக்கிரம் குளித்து விட்டுப் புறப்பட்டு வாசலுக்கு வந்தாள். அப்பொழுது, ஜயந்தி அனுப்பிய ஆள் வேகமாகச் சைக்கிளில் வந்து இறங்கினான்.

"அம்மா! மாஜிஸ்திரேட் வீட்டுக்குச் சின்னம்மா என்னை அனுப்பினாங்க. அவர் நேற்று ராத்திரியே ஊருக்குப் போய் விட்டாராம். இதை உங்களிடம் அம்மா சொல்லிவிட்டு வரச் சொன்னாங்க" என்றான்.

"சரி! நீ போய்விட்டு வா" என்று மாதவி சொல்லி விட்டுத் திரும்பினாள். வீட்டுக்குள் நுழையும்போதே அவளுக்கு விம்மலும் விசும்பலுமாக அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

'அவர் என்மீது ஏற்பட்ட வெறுப்பினால் தான் இப்படிச் சொல்லிக் கொள்ளாமல் ஊருக்குப் போய்விட்டார்' என்று நினைத்து, நினைத்துத் துக்கப்பட்டாள் மாதவி. அவளுக்கு உலகமே சூன்யமாகத் தென்பட்டது.

அவர் ஊருக்குப் போய் விட்டார் என்ற எண்ணத்தை அவளால் தாள முடியவில்லை. அதுவும் அவர் தன்னிடம் கோபித்துக் கொள்ளக் காரணம் இருக்கிறதென்பதை நினைக்கும்போது அவளுக்குத் தன் நெஞ்சம் வெடித்து விடும் போலிருந்தது.


சிவசங்கரன் தன்னையும், தம்பியையும் மன்னித்துத் தன்னை மணம் செய்து

காகிதத்தின்

மீது

இன்பத்திற்கு





சுலபமாக எழுதுவது சிலசமயம் பெரிய பிரச்னை ஆகிவிடுகிறது. தகுந்த மனநிலையும் உயர்தரக் காகிதமும் மட்டுமன்றி, இவ்விரண்டுக்கும் பொருத்தமான பேனாவும் உங்களுக்கு அவசியம். ப்ளேடோ பேனாக்கள் சுகமாக, நேர்த்தியாக எழுதுவதற்கென தயாரிக்கப்பட்டவை. அவற்றின் நிப்கள் நுண்ணியவை, உழைப்பவை. வேலைநிமித்தமாகவோ பொழுதுபோக்காகவோ நீங்கள் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளும்போதும் ஒழுக்கில்லை, காகிதத்தைக் கிழிப்பதில்லை.

plato

எனில் காகிதத்தின்மீது இன்பம்!

விலை ரூ. 4 முதல் ரூ. 18 வரை

ஒரு மாத்ரே உற்பத்தி PLATO

வியாபார விபரங்களுக்கு கீழ்க்கண்ட எங்கள் ஏக விநியோகஸ்தர்களுக்கு எழுதவும்:

பெஸ்ட் பௌண்டன்பென் டிபோ,
79, தேவ்கரன் மான்ஷன்,
பிரின்ஸெஸ் தெரு, பம்பாய் 2.

shilpi-mp-468 Tamil.

கொண்டாள், இந்தப் பைத்தியக்காரத் தம்பி மீது இருக்கும் பாசத்தைக்கூடத் துறக்க மாதவி தயாராக இருந்தாள். சிவசங்கரன் எங்கேபோயிருப்பார் என்று யோசித்துப் பார்த்தாள். அவருடைய சகோதரிகள் வீட்டுக்குப் போயிருக்கலாம். அவருக்கு எத்தனையோ சிநேகிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் யார் வீட்டுக்காவது போயிருக்கலாம். எப்படியிருந்தாலும் இப்போது விடுமுறைக் காலம். ஆகவே உடனே திரும்பிவரக் காரணம் இல்லை. இந்த விடுமுறையில் சந்தடியில்லாமல் விவாகத்தை முடித்துக் கொண்டுவிட வேண்டும் என்று அவர் சொல்லிக் கொண்டிருந்தது ஞாபகம் வந்தது. எல்லாம் இந்த அசட்டுத் தம்பியின் மீது தனக்குள்ள அசட்டுப் பாசத்தால் கெட்டுப் போயிற்று என்று நொந்து கொண்டிருக்கும் போதுதான் அந்தப் பயங்கரமான செய்தி வந்தது.

ஒரு மாட்டுக்காரப் பையன் தலை தெறிக்க ஓடி வந்து கருணாகரன் மலைமீது இறந்து கிடக்கும் செய்தியைக் கூறினான்.

மாதவியைத் தேற்றுவாரில்லை.

அத்தியாயம் 42

உள்ளங்கள் உடைந்தன

மாதவிக்குப் பிரமை பிடித்த மாதிரி ஆகிவிட்டது. அவளால் அந்தப் பயங்கரத்தை நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. கண்ணீர் நிற்காமல் பெருகிக் கன்னங்களில் வழிந்து கொண்டே இருந்தது. முதலில் அவளுக்கு நம்பிக்கையே ஏற்படவில்லை. ஆனால் எவ்வளவு நாட்கள்தான் உண்மையை நம்பாமல் இருக்க முடியும்?

சற்று நேரத்துக் கெல்லாம் விஜயராகவன் வந்தார். உடனே சிவசங்கரனின் அருமை அன்னையும், கிருஷ்ணன் குட்டியும் வந்தார்கள். எல்லோருமாகச் சேர்ந்து மாதவியைச் சமாதானம் செய்ய முயன்றார்கள்.

சிவசங்கரனின் அன்னை மிகவும் பரிவோடு தேறுதல் சொன்னார். விஜயராகவனைக் கண்டதும் மாதவிக்கு ஜயந்தியின் நிலை ஞாபகம் வந்தது. அதனால் அவளுடைய துயரம் அதிகமாயிற்று.

"இப்படி ஒரு அநியாயம் நடந்து விட்டதே. என்னால் பொறுக்க முடியவில்லையே" என்று விம்மினாள் மாதவி.

எல்லாரும் கண்ணீர் வடித்தார்கள்.

"நான் யாருமற்ற அனாதையாகி விட்டேன்" என்று கூறினாள் மாதவி.

"நீ அனாதையாகவில்லை, அம்மா. நான் இருக்கிறேன். சிவசங்கரனும் இருக்கிறார். ஆனால் இந்த ஈடு செய்ய முடியாத நஷ்டத்துக்கு யார்தான் என்ன செய்ய முடியும்?" என்று விஜயராகவன் வருத்தத்துடன் கூறினார்.

"ஜயந்தி எப்படி இருக்கிறாள்?" என்று கேட்டாள் மாதவி.

"இதைக் கேட்டதும் அவளுக்குப் பிரக்ஞையே போய் விட்டது. டாக்டரை அழைத்து வரச் சொல்லி விட்டு நான் இங்கே வந்தேன். அவளை எப்படித்தான் நான் தேற்றப் போகிறேனோ, தெரியவில்லை" என்று மிகவும் வருந்தினார் விஜயராகவன்.

* * *


சிவசங்கரனின் அன்னை மாதவியுடனேயே சில நாட்கள் இருந்தார். அவளை வற்புறுத்தி உணவு உட்கொள்ளச் செய்தார். அவருடைய பரிவு மாதவிக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. அவரிடம் சிவசங்கரனைப் பற்றிப் பேசுவதற்குக் கூச்சமாகவும் இருந்தது.

ஆயினும் ஒருநாள், "அவர் ஏன் திடீரென்று ஊருக்குப் போனார்?" என்று அவரைக் கேட்டாள் மாதவி.

"யார் கண்டார்கள்? என்னிடம் சொல்லி விட்டா போகிறான்? ஏதோ காரியம் இருக்கிறது. கடிதம் எழுதுகிறேன் என்றான். இது வரை கடிதமும் வரவில்லை" என்றார் அவர்.

பிறகுதான் தம் பிள்ளையை வளர்ப்பதற்கு எடுத்துக்கொண்ட சிரமங்களையும், அவரைப் படிக்க வைத்தது, அவர் சிறு வயதில் விளையாடியது முதலிய சம்பவங்களையும், ஒரு தாய்க்கே உரிய பாணியில் மிகவும் அருமையுடன் மாதவிக்குக் கூறினார் சிவசங்கரனின் அன்னை. மாதவியின் மனத்தைத் திருப்பவே அவ்வாறு கூறியபோதிலும், அவைகளைச் சொல்லுவதில் அவருக்கு மிகவும் சந்தோஷம் ஏற்பட்டது. மாதவியும் ஆவலுடன் அவற்றைக் கேட்டாள்.

அதுவரை அதிகமாக மாதவி அவருடன் பழகியதில்லை. ஓரிரு முறை பார்த்திருக்கிறாள். அவ்வளவுதான். அவர் மிகவும் பிரியமாக இருப்பதைக் கண்டு அவள் மனம் நிம்மதியடைந்தது. 'ஆனால் சிவசங்கரன்?... அவர்தான் கோபித்துக் கொண்டு போய் விட்டாரே! அதை நினைக்கும் போது மாதவிக்கு மறுபடியும் துயரம் அடைத்துக் கொண்டது. இந்தத்



சென்னை திரு ஆர். ஆர். ஐயர் அவர்களின் குமாரி சௌ. சரோஜாவுக்கும் சென்னை திரு எஸ். ராமகிருஷ்ணன் அவர்கள் குமாரன் சிரஞ்சீவி ஆர். ஸ்ரீநிவாசன் பி.எஸ்ஸி.க்கும் 13-7-57 அன்று சென்னை, தியாகராயநகரில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது!
வாழ்க மணமக்கள்!

துயரகரமான சமாசாரத்தைக் கேள்விப் பட்டாவது திரும்பிவர மாட்டாரா? வந்து எனக்கு ஆறுதல் சொல்லவேண்டும் என்று அவருக்குத் தோன்றாதா?' என்று ஏங்கி ஏங்கித் தவித்தாள்.

நடுநடுவே அன்று ஜயந்தி கூறியது ஞாபகம் வந்து அவள் நெஞ்சில் முள்ளைப் போல் குத்தியது. 'இருவரும் மலைமீது சந்தித்துச் சண்டை போட்டுக் கொண்டால்?' என்று அவள் கேட்டது ஞாபகம் வரும் போதெல்லாம் அதை உதறித் தள்ளி விட்டு வேறு எதிலாவது கவனம் செலுத்துவாள்.

ஜயந்திக்கு இந்த அதிர்ச்சியினால் ஜுரம் வந்து விட்டது. "நான் சொன்னதைக் கேட்காமலிருந்து விட்டீர்களே" என்று புலம்பிக் கொண்டே இருந்தாள்.

ஐந்தாறு நாட்களுக்குப் பிறகு ஜயந்திக்கு ஜுரம் சற்றுக் குறைந்தது. தன் தந்தையிடம் மாதவி அக்காவை அழைத்து வருவதற்குக் கார் அனுப்பும் படி கேட்டுக் கொண்டாள்.

மாதவியும் ஜயந்தியும் சந்தித்த காட்சி உருக்கமாக இருந்தது. "அக்கா! நான் ஏன் இன்னும் உயிரோடு இருக்கிறேன்?" என்று கதறினாள் ஜயந்தி.

மாதவி தன்னால் இயன்றவரை அவளைச் சமாதானப் படுத்தினாள். மாதவி அருகில் இருப்பது ஜயந்திக்குச் சற்று ஆறுதலாக இருந்தது.

மாதவி விடைபெற்றுக் கொண்டு கிளம்பிய போது ஜயந்தி, "அக்கா! நீங்கள் அந்த வீட்டில் தன்னந்தனியாக இருப்பானேன்? இங்கே வந்து என்னோடு இருந்து விடுங்களேன்" என்று கூறினாள்.

"ஆகட்டும். யோசிக்கலாம்" என்று கூறி விட்டுக் கிளம்பினாள் மாதவி.

சிவசங்கரனின் அன்னை சில நாட்களுக்கு மேல் மாதவியுடன் இருக்க முடியவில்லை. அவருடைய மகளுக்குக் குழந்தை பிறந்திருப்பதாகவும், துணைக்கு யாரும் இல்லாதபடியால் உடனே புறப்பட்டு வரும்படியும் மருமகன் கடிதம் எழுதியிருந்தார். கடிதம் வந்த மறு நாளே அவர் தம் பெண் வீட்டுக்குப் புறப்பட்டுப் போய் விட்டார்.

இப்போது மாதவி மலைச்சாரல் பங்களாவில் தன்னந்தனியாக இருந்தாள். பகல் வேளையில் யாராவது வருவார்கள். துக்கம் விசாரித்து விட்டுப் போவார்கள். மாதவிக்கு யாராவது வந்தாலும் பிடிக்கவில்லை. தனியாக இருந்தாலும் பிடிக்கவில்லை.

சில சமயம் மலைப்பாதையை ஆவலோடு பார்த்துக் கொண்டு ஜன்னல் அருகில் உட்கார்ந்திருப்பாள். 'ஒருவேளை கருணாகரன் இறங்கி வந்து விட மாட்டானா? இது வரை நடந்ததெல்லாம் ஒரு துர்சொப்பனமாக இருந்து விடாதா?' என்று ஏங்குவாள்.

சிவசங்கரன் ஒரு கடிதம் கூட எழுதவில்லை. அவருக்கு இந்தச் செய்தி தெரியாமலா இருக்கும்? அதுதான் எல்லாப் பத்திரிகைகளிலும் கொட்டை எழுத்தில் பிரசுரிக்கப் பட்டிருந்ததே.

"என்னதான் கோபம் இருந்தாலும் இந்த மாதிரி ஒரு துயர சம்பவம் நடந்திருக்கும் போது அவர் வந்திருக்க வேண்டாமா? வரத்தான் முடியவில்லை என்றால் ஆறுதலாக நாலு வரி எழுதிப் போட்டிருக்கக் கூடாதா? என்ன கல் நெஞ்சு அவருக்கு? சித்தப்பா முகுந்தன் கூட வந்து ஆறுதல் சொல்லி விட்டுப் போனாரே?" என்று எண்ணினாள்.

அவளுக்குப் போலீஸார் அச்சுதனைக் கைது செய்ததன் அர்த்தம் தான் புரியவில்லை. போலீஸாருக்கு என்ன காரணத்தினால் அச்சுதன் மீது சந்தேகம் ஏற்பட்டிருந்தாலும் மாதவிக்கு மாத்திரம் அது விளங்கவே இல்லை.

மாதவியை இன்ஸ்பெக்டர் விசாரணை செய்தபோதெல்லாம் மிகவும் நிதானமாகவே பதில் சொன்னாள். துயரத்தை மிகவும் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு கேள்விகளைப் புரிந்து கொண்டு பதில் சொன்னாள். ஏதேதோ அர்த்தமில்லாத கேள்விகளை அவர்கள் கேட்டார்கள். கருணாகரனுடைய பழக்க வழக்கங்களைப் பற்றியும், வாழ்க்கையில் அவனுக்கு வெறுப்பு ஏற்படும்படியாக ஏதாவது

சம்பவம் நடந்ததா என்பது பற்றியும், அவனுடைய நண்பர்களைப் பற்றியும் கேட்டார்கள். பிறகு அவனுடைய விரோதிகளைப் பற்றிக் கேட்டார்கள்.

வேலாயுதத்தைப் பற்றித் தனக்குத் தெரியாதென்று மாதவி கூறிவிட்டாள்.

பிறகு, "முகுந்தனிடமும், அச்சுதனிடமும் கருணாகரனுக்கு விரோதம் ஏதாவது உண்டா?" என்று கேட்டார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

மாதவி பதில் சொல்லச் சற்றுத் தயங்கினாள். "எங்களுக்குள் மனஸ்தாபம் உண்டு. ஆனால் சண்டையாக முற்றும் அளவுக்கு அது என்றும் போனதே இல்லை. அச்சுதன் என் தம்பியிடம் பிரியமாக இருக்கவே முயற்சி செய்து கொண்டு வந்தான்" என்றாள்.

பிறகு இன்ஸ்பெக்டரிடம், "நீங்கள் இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"என்னவென்று நினைப்பது அம்மா? குற்றம் செய்தவரைக் கண்டு பிடிக்க முயற்சி செய்து வருகிறோம். எங்களால் முடிந்ததைச் செய்கிறோம். அது எங்கள் கடமை" என்றார் இன்ஸ்பெக்டர்.

"இப்படிப்பட்ட பயங்கரமான ஒரு காரியத்தை அச்சுதன் செய்திருக்க மாட்டான் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. அவனை நீங்கள் ஒன்றும் செய்யாதீர்கள்" என்றாள் மாதவி.

"நாங்கள் எந்த வாக்குறுதியும் கொடுக்க முடியாது, அம்மா! சந்தர்ப்ப சாட்சியங்கள் என்ன சொல்கின்றனவோ அவற்றை வைத்துக் கொண்டு தான் நாங்கள் எங்கள் கடமையைச் செய்ய வேண்டும். ஊகத்தினால் செய்யக்கூடிய காரியம் இது அல்ல" என்று கூறி விட்டுப் போனார் இன்ஸ்பெக்டர்.



அதன் பிறகும் மாதவியின் மனம் சமாதானமடையவில்லை. அச்சுதன் கைதாகி யிருப்பது அவளுக்கு மிகவும் வருத்தத்தை அளித்தது. அச்சுதனுக்கு இத்தகைய துரதிர்ஷ்டம் நேர்ந்து விட்டது குறித்து அவள் உண்மையாகவே துயரமடைந்தாள்.

இதையெல்லாம் அவள் நினைத்துக் கொண்டே வாசற்படியில் நின்றுகொண்டிருந்தாள். அப்போது விஜயராகவனுடைய கார் வந்தது. கோவிந்தன் அந்தக் காரில் வந்தார்.

கோவிந்தன் காரிலிருந்து இறங்கி மாதவியை நோக்கி வந்தார். அருகில் வந்ததும் "மாதவி! உங்களை உடனே ஜயந்தி அழைத்துக் கொண்டு வரச் சொன்னாள். நீங்கள் இங்கே தனியாக இருப்பது அவளுக்குப் பிடிக்கவில்லையாம். கையோடு அழைத்துக் கொண்டு தான் வரவேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறாள்" என்றார்.

மாதவிக்குக் கோவிந்தன் வந்து தன்னை இவ்வாறு கூப்பிடுவது அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

"நான் அங்கே வந்து எப்படி இருக்க முடியும்? என் சித்தப்பா தவறாக நினைத்துக் கொள்வார். இங்கு நான் இருக்காவிட்டால் சித்தப்பா வீட்டில் இருப்பது தான் நியாயம்" என்றாள் மாதவி.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. ஜயந்தி உங்களை அழைத்து வரச் சொன்னாள். அவளிடம் வந்து பேசிக் கொள்ளுங்கள்" என்றார் கோவிந்தன்.

"தயவுசெய்து என்னை மன்னித்து விடுங்கள். நான் இன்று..."

"இல்லை, மாதவி! நீங்கள் கட்டாயம் வரத்தான் வேண்டும். நீங்கள் இப்படி ஏதாவது சொல்வீர்கள் என்ற பயத்தினால்தான் ஜயந்தி என்னை அனுப்பினாள். பாவம்! அவளுக்குத் தானே வந்து உங்களை அழைத்துக் கொண்டு போக வேண்டும் என்று ஆசை. ஆனால் இன்னும் பலஹீனமாய் இருப்பதால் அவளுடைய சின்னம்மா அலையக் கூடாதென்று சொல்லி விட்டார். மேலும் இன்று விஜயராகவனுக்கு வேறு உடம்பு சரியாக இல்லை."

"என்ன? அவருக்கு மறுபடியும் அதிகமாகி விட்டதா?"

"ஆமாம்! அன்று முதல் அவர் ரொம்ப அலைந்து விட்டார். என்ன சொல்லியும் கேட்கவில்லை. ஏற்கனவே பலஹீனம். நேற்றிரவு முதல் அவருக்கும் ஜுரம் வந்து விட்டது. இன்று எதற்காகவோ வக்கீலைக் கூப்பிடச் சொன்னார். நான் பயந்து போய் விட்டேன். பிறகு ஆலை விஷயமாக ஏதோ கேட்க வரச் சொன்னார் என்று தெரிந்தது. அப்புறம்தான் மனம் நிம்மதி யடைந்தது."

"ஐயோ, பாவம்! அவருக்கும் எங்களால் கஷ்டம்தான். இந்தக் கருணாகரன் மட்டும் முதலிலேயே அவர் சொன்ன படி கேட்டிருந்தால் இப்படியெல்லாம்

நேர்ந்திருக்குமா? இப்படி நான்தான் அனாதையாக நிற்கும்படி ஆகியிருக்குமா?'' என்று கூறிப் பொல பொலவென்று கண்ணீர் உகுத்தாள் மாதவி.

''வேண்டாம். வருத்தப்படாதீர்கள். போனதை நினைத்துக் கொண்டு வருந்தி என்ன பயன்? நீங்கள்தான் தைரியமாக இருந்து, ஜயந்தியையும் தேற்ற வேண்டும். பாவம்! அவள் மனம் அப்படியே உடைந்துபோய் விட்டது. களங்கமற்ற குழந்தையைப் போன்ற சுபாவமுள்ளவள் ஜயந்தி. அவளுக்கு இவ்வளவு பெரிய அதிர்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டாம்'' என்றார் கோவிந்தன்.

மறுபடியும் மாதவியிடம் '' நீங்கள் புறப்படுங்கள். அங்கே இருக்க வேண்டாமென்று தோன்றினால் நானே திரும்பிக் கொண்டு வந்து விட்டு விடுகிறேன்'' என்று சொன்னார்.

அதற்கு மேலும் மாதவியால் மறுக்க முடியவில்லை. மிக அவசியமான நாலைந்து துணிமணிகளைப் பையில் எடுத்துக் கொண்டு கிளம்பினாள். காரில் ஏறப் போகும்பொழுது கோவிந்தன் நடப்பதற்குச் சற்றுப் பிரயாசைப் படுவதாகத் தோன்றியது அவளுக்கு.

''காலில் அடிபட்டிருக்கிறதாஎன்ன?'' என்று கேட்டாள் மாதவி.

''ஆமாம். இரண்டு நாட்களுக்கு முன்னால் தடுக்கி விழுந்து அடிபட்டு விட்டது'' என்றார் கோவிந்தன். பிறகு வீடு வரும்வரை இருவரும் பேசவில்லை.

விஜயராகவனின் வீடு களை யிழந்து காணப்பட்டது. முன் அறை தூசிகூடத் தட்டாமல், குடியிருக்காத வீடு போலக் காணப்பட்டது. ஜயந்தியின் அருகில் உட்கார்ந்திருந்த சின்னம்மா மாதவியைப் பார்த்ததும் '' நான் போய் அவரைக் கவனித்து விட்டு வருகிறேன். நீ இங்கே இரு அம்மா!'' என்றார்.

மாதவி தான் கொண்டு வந்த பையை ஓரத்தில் இருந்த மேஜையின் மீது வைத்து விட்டு, ஜயந்தியின் அருகில் கட்டில்மீது உட்கார்ந்து கொண்டாள்.

சின்னம்மா கீழே இறங்கிப்போனதும், ''உனக்குச் சின்னம்மாவாக இருந்தாலும் எத்தனை அன்போடு கவனித்துக் கொள்கிறார்?'' என்றாள் மாதவி.

'' இந்த அன்பினால்தான் என்னைத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறார் அக்கா! உங்கள் தம்பியை நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளக் கூடாதென்று முன்னமேயே சொல்லிக் கொண்டிருந்தார். இப்போது பெரிய அவமானம் வந்து விட்டதாம். இப்படிச் சொல்லி வேதனைப் படுத்துகிறார்'' என்று கூறிவிட்டு விம்மினாள் ஜயந்தி.

'' இதற்கெல்லாம் நீ வேதனைப்படக் கூடாது ஜயந்தி. பெரியவர்கள், அப்படித்தான் ஏதாவது சொல்வார்கள். அவர் சொன்னது நியாயம்தானே? உன்னுடைய அன்புக்கும், உன் தந்தையின் பெருந்தன்மைக்கும் அருகதை யில்லாதவன் அவன் என்று நிரூபித்துக் காட்டி விட்டானே!'' என்று துயரத்துடன் கூறினாள் மாதவி.

'' நீங்கள் இப்படியெல்லாம் நினைத்து வருத்தப்படாதீர்கள் அக்கா. எல்லாம் நம்முடைய தலைவிதி'' என்று மாதவியை ஜயந்தி தேற்றினாள். (தொடரும்)



கர்நாடக சங்கீத உலகில் பாலக்காடு திரு ராம பாகவதர் உன்னத ஸ்தானம் வகித்தவர். ஷொரனூருக்கு அருகிலுள்ள முண்டாயாவில் பிறந்து வளர்ந்த திரு ராமபாகவதருக்குச் சின்னஞ் சிறு வயதிலேயே சங்கீதத்திலே ஆசையும் ஆர்வமும் மிகுந்திருந்தன. அவரது தமையனார் திரு வெங்கடகிருஷ்ண பாகவதர், அவருக்குச் சங்கீத வித்தையைப் பயில்வித்தார். பிறகு திரு ராம பாகவதர் காயக சிகாமணி திரு அனந்தராம பாகவதரிடம் சிஷ்யராக இருந்து சங்கீதத்திலே தேர்ச்சி பெற்றார். அவருக்குச் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜ ஸ்வாமிகளிடம் அளவற்ற பக்தி. வருஷந்தோறும் கல்பாத்தியில் தியாகராஜ உத்சவம் அவரது பெருமுயற்சியினாலேயே வெகு சிறப்பாக நடைபெற்று வந்தது. சிறந்த பக்தரும், கர்நாடக சங்கீத உலகில் தலைசிறந்து விளங்கியவருமான பாலக்காடு திரு ராம பாகவதர் தமது அறுபத்தொன்பதாவது வயதில் ஜூன் மாதம் 25-ந் தேதி யன்று இறைவனடி சேர்ந்தார். அவரது மறைவு கர்நாடக சங்கீத உலகத்துக்குப் பெரு நஷ்டமாகும்.

மகுடியின் புன்னகைவராளி



வெள்ளி அம்பலத்தே கால் மாறி ஆடிய தில்லைவாசி வெள்ளி ரதத்திலே பவனி வந்து கொண்டிருந்தார். பூவைமா நகரில் எள் விழ இடம் இல்லை; அவ்வளவு ஜனக் கும்பல். நவராத்திரி உற்சவத்தில் அந்தப் பத்தாம் நாள் திருவிழாதான் சுற்று வட்டத்தில் வெகு பிரசித்தமானது.

நாதஸ்வரம் இசை முழங்கியது; மேளம் மனம் விட்டுப் பேசியது; தாளங்கள் நெஞ்சோடு நெஞ்சம் சேர்த்துச் சிரித்தன.

'மன்றுளே மாறியாடு மறைச் சிலம்படிகள்' விண்ணிலே பண்கூட்டிப் பறந்தன. 'அவன்' சிரித்தான்; சிரிக்கத்தானே அந்த ஆண்டவனுக்குத் தெரியாது...?

அப்போது —

"சாமி!... என்னையும் என் வள்ளியையும் நல்லபடியாகக் காப்பாத்து சாமி!"

முனியன் கண்களை மெல்லத் திறந்தான். வெள்ளி ரதம் ஊரின் கிழக்குப் பகுதியில் திரும்பிக் கொண்டிருப்பதைக் கவனித்தான். அவசரம் அவசரமாகக் கையிலிருந்த சில்லறைக் காசுகளை எண்ணத் துடித்தது அவன் மனம். மையிருட்டில் நாணயங்கள் புலப்படவில்லை. ஆகவே, அந்தப் புளிய மரத்தடியில் கிடந்த பாம்புப் பெட்டியையும் மகுடியையும் கையில் எடுத்துக் கொண்டான். சில்லறைக் காசுகள் தரையில் நழுவப் பார்த்தன. அவன் விழித்துக் கொண்டான். காலணா அரையணாக்களைக் கிழிசல் துணியில் 'சுருக்கிட்டு'க் கட்டினான். விசையாகத் திசை திரும்பி நடந்தான் முனியன்.

பிள்ளையார் கோயில் வந்தது. வாசலில் இருந்த விளக்கடியில் அன்றைய வரும்படியை எண்ணினான். "பலே! பலே! நாலு ரூபாயும் அஞ்சே முக்காலணாவும் கைக்கு மெய்யாச் சேர்ந்திருக்கே! ஏ, வள்ளிப் பொண்ணு! விடிஞ்சதும் கட்டாயமா உனக்குச் சுங்கடிச் சேலையும் கட்டம் போட்ட ரவிக்கைத் துணியும் வாங்கித் தந்து விடுவேறன்" என்று தன்னுள் பேசினான். அடுத்த வினாடி, முனியன் வாரிச் சுருட்டிக்கொண்டு ஓடினான்.

"வள்ளி! வள்ளி!"

அவனது உதடுகள் ஓயாமல் இந்தப் பெயரை உச்சரித்துக் கொண்டிருந்தன. அவளுடைய மயக்கும் எழில் உருவம் அவனுக்குக் கும்பிருட்டைக் குடைந்து செல்லத் துணிச்சலைத் தந்தது. செட்டித் தெரு, பெட்டிக் கடை, இளைஞர் சங்கம், சர்க்கார் ஆஸ்பத்திரி, 'ஹையர் எலிமெண்டரி ஸ்கூல்' எல்லாம் அவனுக்குப் பாதை திறந்துவிட்டன;

முனியன் ஓடினான்; ஓடினான்!

அந்த இடம் வந்தது. அவன் 'டக்' கென்று நின்றான். புளிய மரத்தடியில் ஒதுங்கிக் கிடந்த குடிசை அவன் விழிகளில் சுற்றியது; சுழன்றது. இடுப்பில் செருகியிருந்த தீப்பெட்டியை எடுத்து ஒரு தீக்குச்சியைச் செலவுக் கணக்கில் எழுதினான். ஒளி பரவியது.

"வள்ளி! எப்படி இருக்குது இப்ப?... கடு கஞ்சி வைச்சுக் குடிச்சியா?" என்ற வார்த்தைகள் பரவி நின்ற வெளிச்சத்தில் பனிச்சிட்டன; ஒலித்தன. தீ அணைந்தது. அடுத்த மூன்றாவது தீக்குச்சி 'சிம்னி' விளக்கை ஏற்றியது.

முனியன் தீயைத் தீண்டியவன் மாதிரி திடுக்கிட்டான். நெஞ்சைப் பிடித்து அழுத்திவிட்டான். "வள்ளி! ஏ, வள்ளிப் பொண்ணு!" என்று தழுதழுத்த தொனியில் கூப்பிட்டான்; கூவி அழைத்தான். அவள் அங்கு இருந்தாலல்லவா அழைத்த குரலுக்கு ஆதாரமாகப் பதில் தருவாள்? அங்கே, அப்பொழுது சூன்யம் கை கொட்டிச் சிரித்தது!



குடிசைக்கு வெளியே நழுவிக் கிடந்த பாம்புப் பெட்டியி லிருந்த பாம்பு — கட்டுவிரியன் அப்பொழுது பெட்டிப் பாம்பாக இல்லை. தலை தூக்கிச் சீறிக் கொண்டிருந்தது. "தூ!" என்று ஆத்திரம் பொங்கக் கூறிய அவன் மறுவினாடி கீழே கிடந்த மகுடியை எடுத்துப் பாம்பின் மண்டையில் ஓங்கித் தட்டினான். பெட்டிக்குள் பதுங்கியது பாம்பு. "இதோ! தாங்கள்!" என்று கை குலுக்கிக் கதறின — சிதறிக் கிடந்தநாணயக் குழந்தைகளைக் காலால் எத்தி விட்டான்; பைத்தியக்காரன்! வலிய வந்த சீதேவியை அவனுக்கு வரவேற்கத் தெரிந்தால்தானே?

பாவம், அவனுக்குப் பூதலம் பூஜ்யமாகத் தோன்றியிருக்க வேண்டும். காரணம், அங்கு அவனுடைய இச்சைக்குகந்த பச்சை மணிக் கிளி வள்ளி இல்லை!

முனியன் கண்கள் கண்ணீரை உகுத்தன. சுற்று முற்றும் ஒரு தடவை பார்த்தான். கருந்திரை போடப்பட்ட அரங்கமாக உலகம் தோன்றியது.

"வள்ளி, நீ எங்கே போயிட்டே?.. உடம்பு சுகமில்லாமல் கிடந்த கண்ணுக்குக் கண்ணான உன்னைத் தனியே விட்டுப்பிட்டுதான் போயிட்டேன்னு உனக்குக் கோபமா?... நான் என்ன செய்யட்டும்?..., நான் போகலேன்னு நம்ம வயிறு எப்படி நிரம்பும்? ஊரிலே திருநாள். இப்பத்தானே நாலு காசு பணம் உபரியாகக் கிடைக்கும்!... பாம்பை ஆடச் சொல்லி நான் மகுடியும் கையுமாக விளையாடிப் புன்னாகவராளி ராகத்தை எழுப்பினால்தானே தெருக்கள்ளே பத்து அம்மாமார், அய்யாமார் கையிலே மடியிலே கிடைத்ததைத் தூக்கிப் போடுவாங்க!"..என்று கதறினான் முனியன்.



"பாட்டையா, நீ சொன்னது அவ்வளவும் மெய்தானு?..."

"முனியா, நான் உன்னிடம் பொய் சொல்லி எனக்கு இப்ப என்ன ஆகப் போகுது? நடந்ததைச் சொன்னனே...இந்தக் குடிவிருப்பிலே பாம்பாட்டி குடும்பம் எண்ணி நாலே நாலு போர்கள் குடிசை போட்டிருக்கிறோம். ஒன்னுக்குள்ளே ஒன்னு கண்ணிலே மண் தூவ நினைப்பாங்களா?...என்னே தம்பு...!"

''அடி பாவி! மறுபடியும் உன் பழைய மச்சான் மாடனா உன்னைத் தேடி வந்து விட்டான்? அவனோடேயா நீ ஓடிப் போய் விட்டாய்? கொதிச்சுக்கிட்டு இருக்குதே? ஐயோ, நான் இனி எப்படி உயிரோடு வாழ முடியும்? உன்னிடம் என் உயிரையே நீ வச்சிருந்தேனே? நம்பிக்கை மோசம் பண்ணிப்பிட்டியே?...''

முனியன் சிறு குழந்தையின் பாங்கில் விம்மி விம்மி அழுதான். அவன் நெஞ்சம் வெடித்துக் கொண்டிருந்தது.

★

கீழைக் கன்னி கதிரவனுக்கு மஞ்சள் ஆரத்தி எடுத்துப் பூசனை செய்து கொண்டிருக்க புனிதமான வேளை அது; மண் பொன்னாகிக் கொண்டிருந்த மந்திரப் பொழுது அது.

முனியன் கைக்குள் ஒளித்து வைத்திருந்த அந்த வேருடன் காட்டில் அடிமேல் அடி யெடுத்து வைத்து நடந்து கொண்டிருந்தான். பாம்பாட்டிகளுக்கு அந்த மூலிகை-வேர்தான் உயிர்—அது இல்லையென்றால், பாம்புகளைப் பிடிப்பதென்பது சாத்தியமே இல்லை! தோளில் தொங்கிக் கொண்டிருந்த பாம்புப் பெட்டி காலியாக இருந்தது. அதனுடன் ஒட்டி உருகி அசைந்தாடிக் கொண்டிருந்த மகுடி அவனுக்குத் தைரியம் சொல்லிக் கொண்டிருந்தது. வழி நடந்தான். பட்டப் பகல்; ஆனால் மூங்கில் காட்டுக்குள்ளே இன்னும் பொழுது புலரவில்லை போலும்! எங்கும் இருட்டு; ஒரே இருட்டு மயம்!...

இமை பொருத்தி இமை பிரிக்கும் நேரத்தில் அவன் ''ஆ!'' என்று கூப்பாடு போட்டான். காலடியில் கட்டுவிரியன் வாயைப் பிளந்தபடி படுத்திருந்ததைக் கண் விரித்துப் பார்த்தான் முனியன். மேனி சிலிர்த்தது.

''பலே, தேடிப் போன மூலிகை காலிலே சிக்கினது கணக்கிலே என் காலடியிலேயே நீயே வந்து கிடக்கிறியா?...சபாஷ்! இனி என் பாடு வேட்டைதான்! தேர், திருநாளிலே கடைத்தெருவிலே இனி எனக்கு ஏராளமாகக் காசு பணம் கிடைக்கும்! ம்!.....என் சந்தோஷத்திலே பங்கு போட்டுக்கிறதுக்கு எனக்கு ஒரு ஜோடி மாத்திரம் கிடைச்சுட்டா, ஆகா!....நிசமாகவே இந்த முனியன் அதிர்ஷ்டக்காரன் தான்!'' என்று எண்ணங்களைச் சேகரம் செய்து கொண்டிருந்தான் முனியன். மறுவினாடி, அவனுக்குத் தன் நினைவு வந்தது. கவனமாக அந்தப் பாம்பின் நிழலிலிருந்து தன்னுடைய கால்களைத் தள்ளிக் கொண்டான். பாம்பு வாயை மெல்ல மூடியது. உடனே சுதாரித்துக் கொண்டான் முனியன். தோளில் இருந்த பாம்புப் பெட்டியும் மகுடியும் தரையில் விழுந்தன. கைக்குள் இருந்த விஷ வேர்த் துணுக்கை வெளியே எடுத்தான். முன் எச்சரிக்கையுடன் அடி பதித்து அடி பிரித்து நடந்தான். பாம்பின் கண்களில் அவனுடைய விழிகள் பதிக்கப்பட்டன. அப்போது எங்கிருந்தோ மகுடியின் நாதம் காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது. ஒரு கணம் தலை நிமிர்ந்தான். மறுகணம் தாழம்பூ வாடை அவன் மூக்கில் மிதந்தது. ஏறிட்டுப் பார்த்தான். பாவை...! பெண் பதுமை...! காட்டுப் பூ!...

முனியனின் மூளை இறங்கியது. சித்தம் தடுமாறினான். அந்த வேர் தடுமாறித் தரையில் நழுவியது. சுய நினைவு



வந்தது: ஆனால் தரையில் விழுந்த வேரின் நினைவு எட்டவில்லை. கையில் வேர் இருக்கிறதென்ற எண்ணத்துடன் கையை அந்தக் கட்டுவிரியன் பாம்பின் வாய்க்கு நேரே நீட்டினான். பாம்பு பயங்கரமாக வாயைத் திறந்து எம்பிக் குதித்து அவனைக் கடிக்கச் சீறிக்கொண்டு எழுந்தது. ''ஐயோ!'' என்று அலறிய வண்ணம் அவள் ஓடிவந்து அவனைத் தள்ளி விட்டாள். அவளுடைய மூலிகை அந்தப் பாம்பின் வாயைக் கட்டியது. பாம்பு மயங்கிச் சுருண்டு விழுந்தது.

பொறியில் அடிபட்டாற் போலக் கதிகலங்கிப் போனான் முனியன்.

''ஏ, நீ யாரு?''

''நானா? தெரியல்லே? பொண்ணு!''

''ஏய்! நான் சூறி வைச்ச பாம்பு இது!''

''அதுதான் புரிஞ்ச போச்சே? சூறி வைச்ச பாம்பைப் பிடிக்கப் போன லட்சணம்!''

''கேலியா பண்ணுறே பிள்ளே? இது என் சொத்து!''

''அப்படியா சங்கதி? நீ பெரிய ஆள் போலேயிருக்கே?...இந்தக் கட்டு விரியன் உன் காலைச் சுற்றிக் கடிக்காமல் இருந்ததே. அதற்கு முதல்லே உங்க குல தெய்வத்தை நினைத்துச் சாம்பிராணிப் புகை காட்டு...! இது எனக்குச் சொந்தம்!'' என்று சொல்லியவாறே, அந்தப் பெண் கட்டு விரியனைத் தூக்கப் போனாள்.

அதற்குள் முனியன் வெகுண்டு விட்டான். அவன் 'விசுக்'கென்று அந்தப் பாம்பைப் பறிக்க அதன் மீது கையை வைத்தான். அவன் கைகள் அவளது கைகளில் இருந்தன. பாம்பு மாத்திரம் ஸ்மரணை இழந்து தரையில் கிடந்தது கிடந்தபடி இருந்தது.

''நீ...நீங்க ரொம்ப அவசரப் படுறீங்க... இந்தாங்க, இந்தப் பாம்பு உங்களுக்கே தானாகும்! சும்மா ஒரு வேடிக்கை காட்டிப் பார்க்கலாம்னு நினைச்சுத்தான் இப்படிக் கூத்து நடத்தினேனுங்க!'' என்றாள் அவள். சற்று முன் 'தேசாந்திரம்' போயிருந்த வெட்கம், இப்போது அவளுடைய கண்களில், உதடுகளில் கன்னக் கதுப்புக்களில் ஒட்டி உறவாடத் தொடங்கி விட்டது. அவளுடைய நெஞ்சம் எம்பித் தணிந்தது.

'' நீ...''

''நான் அனாதை!''

'' நான்கூடத்தான் அனாதை...நீ மனசு வைத்தால் நான் அனாதையாயிப்பிட மாட்டேன்!''

''நீங்கள் மனசு வைச்சால், நான்கூட அப்படித்தான்....!''

'' நீயும் அப்படின்னு எம்மா திரிதானா?... ஆத்தான்தான் நம்மை ஒண்ணு சேர்த்திருக்க வேணும்!'' என்றான் அவன்.

'' ஆமா...ஆ.ம.ாம்...,மச்சான்!'' என்று சொன்னாள் அவள், உணர்ச்சி வசப்பட்ட குரலிலே. அவள்தான் வள்ளி.

★

''**வ**ள்ளி! நீ என்னை ஏமாற்றி விட்டு அந்தப் பயல் மாடனோடு ஓடி விட்டாயா? அப்படியானால் நான் இனி மனசொடிந்து மண்ணோடு மண்ணாயிப்போய்விட வேண்டியது தானா? இரண்டு வருசத்துக்குள்ளே நான் உனக்குக் கசந்து போய் விட்டேனா?''

வானத்தில் மின்னும் ஒற்றைத் தனி விண் மீனைப்போல் முனியன் தத்தளித்துத் தடுமாறிக் கொண்டிருந்தான். பயமுறுத்திய இருட்டைத் துண்டித்தபடி அவன் நடந்தான். கூப்பிடு தொலைவில் இருந்தது அந்த அரச மரம். அருகில் இருந்தது நாகப் பாம்பு, கல்வடிவிலே. பூவும் மஞ்சளும் சிதறிப்போய்க் கிடந்தன; அவை தெரிந்தும் தெரியாமலும் இருந்தன.

அரச மரத்தில் சாய்ந்தவாறு எவ்வளவு நேரம்தான் அவன் தன்னை மறந்து இருந்தானோ? அவன் சுயநினைவு பெற்ற சமயம், வானத்திரையில் பிறைநிலவின் சித்திரம் வரையப்பட்டிருந்தது.

நடந்துபோன சம்பவங்கள் அவனுக்கு நினைவில் எழுந்தன; எண்ணினான்.

நிலாமலர்ந்த இரவிலே இதே இடத்தில் மண் தரையில் அவன் உட்கார்ந்து மருது வாசித்து அவளை மகிழச் செய்த இந்த இன்ப நாட்களை அவன் எப்படி மறப்பான்? அந்த மருதுவின் புன்னகைவராளி அவள் இதயத்தை இட்டு நிரப்பி அவனுக்குக் கொள்ளை கொள்ளையாக ஆனந்தத் தேனை அள்ளிக் கொடுத்ததைத்தான் அவன் மறந்துவிட முடியுமா?

நடந்தான்: தூரம் வளர்ந்தது. ஜல்லிக் கட்டுப் பொட்டல் தெரிந்தது. ஒரு விநாடி அவன் நிலைப்பூண்டை மிதித்தாற் போலானான்! அவனுக்கு வள்ளிக்கொடி பற்றிப் படரக் கொழுகொம்பாகக் கிடைத்த அதே இரவு நடந்த ஒரு சம்பவம் ஏடு விரித்தது.

முனியனும் வள்ளியும் கஞ்சி காய்ச்சிக் குடித்து, வெற்றிலைச் சருகு போட்டுக் கொண்டு குதூகலமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்—அன்று! அங்கே அந்த இரவிலே மாடன் தோன்றினான்: '' ஏ முனியா! என் முறைப் பெண்ணை நீ மயக்கி ஏமாற்ற உனக்கு எவ்வளவு துணிச்சல்?'' என்று கர்ஜித்தவாறு வம்பு பேசினான்; அவனை வம்புக்கு இழுத்தான். கடைசியில் பூவைமாநகரில் உள்ள 'பெரிய தலைக்காரர்' சுப்பிரமணிய செட்டியார் வந்தார். இருதரப்பிலும் விசாரித்தார். கடைசியில் வள்ளியின் வாக்குமூலத்தையும் பெற்றார். ''ஐயா! எனக்கு என் முனியன் மச்சான்தான் வேணும்.. நான் அந்தக் குடிகாரனுக்கு வாழ்க்கைப் படவே மாட்டேன்'' என்று தீர்மானமாகச் சொல்லி விட்டாள். ஆகவே, செட்டியாருக்குத் தீர்ப்பு சொல்வதில் கஷ்டம் எதுவும் உண்டாகவில்லை. வள்ளி முனியனிடம் மறுபடியும் ஒப்படைக்கப்பட்டாள். பற்களைக் கடித்த வண்ணம் மறைந்து விட்டான் மாடன்!

★

மீண்டும் முனியனைத் தூண்டில் புழுவாக்கவா அந்த மாடன் வந்து விட்டான்?

'...அந்தப் பயலோடு வள்ளி ஓடட்டும்... பார்க்கிறேன்...அவன் உயிரைக் குடிக்காமல் நான் இனி தரையிலே தலையை வைக்கத் தூங்கவே மாட்டேன்.....வள்ளி!...நீ வஞ்சகி!... என்னை ஏமாத்திப்பிட்டிகளா?....நீயும் என் னிடமிருந்து தப்ப முடியாது!...' என்ற தீர்மானம் உருவான நெஞ்சைச் சுமந்த



எக்லா
தென் இந்தியா விரும்பும் டால்க் !
தெம்பூட்ட, மணமளிக்க தனிப்பட்ட தயாரிப்பு
இந்த பரத நாட்டியக்காரியைப் போல், நீங்களும் தென்னாட்டின் அதி உஷ்ண நிலையிலும்கூட குளு மையும் இதமும் பெறலாம் ... மனோரம்மிய மணம் பெற்ற எக்லா டால்க் உபயோகித்தால். குளுமை யான நுண்ணிய சுகந்தத்திற்கு இந்த ஒப்புயர்வற்ற டால்க்கை அடிக்கடி தாராளமாக உபயோகியுங்கள்
மெல்லிய எக்லா ஒரு லட்சிய முகப்பவுட ரும் கூட
கால்கேட்
எக்லா
டால்க் பவுடர்
ECLAT
TALC POWDER
COLGATE
EC/G/2A



நரஸூ காபி
அருந்தி அதன்
பிரத்யேகமான
ருசியை
அனுபவியுங்கள்
மான்யுபாக்சரிங்
கோ. பிரைவேட் லிட்.
சேலம் & சென்னை


பிரகாசமுள்ள
வெண்ணிறப் பற்கள்
மட்டுமல்ல
அத்துடன்
ஆரோக்கியமான
ஈறுகளும்!
ஈறுகளை கெட்டியாகவும் ஆரோக்கியமாகவும் வைக்கவும் மற்றும் பற்களுக்கு ஸ்படிகத்தைப் போன்ற வெண்மையை அளிக்க வேண்டும் என்றே போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட் விசேஷமாய்த் தயாரிக்கப்படுகிறது. உங்களை ஈறுகள் சம்பந்தமான நோய்கள் தொற்றிக்கொண்டு அவதி கொடுக்காதிருக்கவே யாவரும் அறிந்த இப்பற்பசையில் டாக்டர் ஆர்.ஜே.போர்ஹான் டி.டி.எஸ் அவர்கள் பக்குவப்படுத்திய முறையில் விசேஷ காரப் பொருள் கலக்கப்படுகிறது. ரத்தக்கசிவு வீங்கிய ஈறு புண்ணுனதும் மற்றும் கூசும் ஈறுகளை லேசாக போர்ஹான்ஸ் கொண்டு தேய்க்க வேண்டும். அவை உடனே கெட்டியான ஆரோக்கிய நிலைக்குத் திரும்பி விடும் ஆனபடியால் இந்த இரட்டைக் காரிய முள்ள பற்பசையை நீங்கள் உபயோகித்து பளிச்சென இருக்கும் வெண் பற்களையும் நல்ல ஆரோக்கியமான ஈறுகளையும் உடையவரெனப் பெருமைப்படலாம்.
தன் நிலைதிருவல்
செய்யப்பட்ட டூத்பேஸ்ட்
போர்ஹான்ஸ்
Forhan's

படி, முனியன் தன்னுடைய குடிசையை நோக்கி நடந்தான்.

"மச்சான்!... எங்கே மச்சான் போய் விட்டீங்க?" என்ற குரல் கேட்டது.

முனியன் கண்களைத் திறந்து திறந்து பார்த்தான். வள்ளியா?...அல்லது கனவுதானா?

"என்ன மச்சான், கனா ஏதும் கண்டியா?"


"எங்கே உன் மச்சான் மாடன்?"

"அது போயிட்டுதே?"

"அடி பழிகாரி!" என்று சொல்லிக் கொண்டே அவளை அணைத்தான்; பற்களைக் கடித்துக் கொண்டே அவள் கழுத்தைப் பலமாக நெரித்தான்.

ஆண் புலியின் பிடியிலிருந்து பெண் மான் திமிறிக் கொண்டு விடுபட்டது.

"ஏ மச்சான்! உனக்குக் கண்ணு அவிஞ்சு போயிட்டுதா? மச்சான் மாடன் வராட்டா, இந்நேரம் நான் செத்த இடங்கூட புல் முளைச்சுப் போயிருக்கும்! அது வந்து, காய்ச்சலிலே துடிச்சுக்கிட்டிருந்த என்னை வைத்தியரிடம் அழைச்சுப் போய் மருந்து வாங்கித் தந்தது. உனக்குத்தான் கட்டின மனைவியைப் பத்தி நினைப்பு இல்லே! வைத்தியர் கிட்டே போய் வர எதற்கு இவ்வளவு நேரமாச்சின்னு யோசிக்கிறயா?... அந்த ஐயா கோவிலுக்குப் போய் விட்டாரு. வர இவ்வளவு தாமசம் ஆயிடுச்சு! ஐயா, நான் இந்நேரம் சாகாமல் இருந்தேனே..."



வள்ளி கதறியழுதாள்.

முனியன் கல்லாய்ச் சமைந்து நின்றான். அவள் சொன்ன பேச்சு அவனுக்கு நம்பிக்கை ஊட்டவில்லை.

அப்பொழுது, "ஏ முனியா!...வள்ளி சொன்னது அத்தனையும் உண்மைதான்!" என்று கூறியவண்ணம் நாட்டு வைத்தியர் நல்லசாமி அங்கே நின்றார். அவருடன்கூட மாடனும் காணப்பட்டான்.

"முனியா, நான் பழைய மாடன் இல்லே, புது மாடன். ரொம்ப நாட்களாச்சேன்னு உங்கள் இரண்டு பேரையும் பார்த்துவிட்டுப் போகலாம்னு வந்தேன். வந்த இடத்திலே வள்ளி மாத்திரம்தான் ஒண்டியாக இருந்தது. நீ இல்லாதப்போ நான் இங்கே தங்கிப் பேச நினைக்கல்லே.... போய்விடத்தான் நினைத்தேன்? ஆனால், வள்ளி காய்ச்சலிலே துடிச்ச துடிப்பைக் காணப் பொறுக்கலே...உடனே நான் வைத்தியர்கிட்டே அழைச்சுக்கிட்டுப் போனேன். இவ்வளவுதான் நடந்த கதை! நீ ஒண்ணும் தப்பாத் தவறு நினைச்சு மனசை அலட்டிக்காதே...என்னை நம்பு!...!" என்று உறுதியாகக் கூறினான். மாடன்.

உடனே வள்ளி குடிசைக்குள் சென்று மூட்டை முடிச்சுகளுடன் திரும்பினாள்.

இக்காட்சியைக் கண்ட முனியன் திகைத்து விட்டான். என்னவெல்லாமோ பயம் நிறைந்த நினைவுகள் தோன்றி மறைந்தன.

"வைத்தியர் ஐயா!...நான் இனி ஒரு பொட்டுப் பொழுதுகூடத் தங்க மாட்டேன். என் ஆத்தா வீட்டுக்குப் போகிறேன்" என்று சொல்லிப் புறப்பட்டாள்.

"வள்ளி! அறியாத பொண்ணு நீ?...நான் எதற்கு இவ்வளவு நாள் கழிச்சு இங்கே வந்து உங்கள் நிம்மதியைக் குலைச்சேன்?...முனியன் ஏதாவது ஒண்ணு கிடக்க ஒண்ணு சம்சயப் படும்னு தெரிந்துதானே வைத்தியர் ஐயாவையும் இந்த ராத்திரியிலே கையோடு அழைத்துக் கொண்டு வந்தேன். நீ இங்கே தான் இருக்க வேணும். முனியா! நீ சமாதானப்படுத்தப்படாதா? பாவம், வள்ளி!" என்று விம்மினான் மாடன்.

சில விநாடிப் பொழுது முனியன் தீவிரமாக ஏதோ யோசித்தான். பிறகு வள்ளியை நெருங்கி, "வள்ளி, என்னை மன்னிச்சிடு. மாடன் நல்லவன் என்கிறதைப் புரிந்துக்கிட்டேன்!" என்று ஆறுதல் கூறி, அவளிடமிருந்து மூட்டை முடிச்சுகளை யெல்லாம் வாங்கிக் கொண்டான்.

இப்பொழுதுதான் வள்ளியின் இதழ்களில் அமைதி நிறைந்த சிரிப்பு நெளிந்தது.

"நான் போயிட்டு வரேன், முனியா...! இல்லே, இனி நான் இந்தப் பக்கம் தலையைக் காட்டவே மாட்டேன்..! நான் வரேன் வள்ளி!" என்று சொல்லிவிட்டுப் புறப்படத் திரும்பினான் மாடன்.

முனியன் அவனுடைய கைகளைக் கெட்டியாகப் பற்றியவாறு, "இல்லே, நீ போகப்படாது! இங்கே இரு...நாம் இரண்டு பேரும் இனி அண்ணன் தம்பி கணக்கிலே...! உனக்கு ஒரு நல்ல பெண்ணைப் பார்த்து நானே கண்ணாலமும் கட்டிப்பிடறேன்...நீ இங்கேயே தங்கு, மாடா!" என்று வேண்டினான்.

மாடனுக்கு எல்லாம் கனா மாதிரிதான் தோன்றிற்று!

★

கை ஊன்றிக் கரணம் போடவேண்டும் என்பார்களல்லவா? ஆனால் இந்தப் பிறைமதி கை ஊன்றாமலே ஆகாயத்தில் கரணம் போட்டுக் கொண்டிருந்தது.

ஊர் முழுதும் உறங்கிக் கொண்டிருந்தது.

ஆனால் முனியன் மாத்திரம் உறங்கவில்லை. பக்கத்தில் அவன் பார்வை திரும்பியது. மடலவிழ்ந்து கிடந்தது தாழம்பூ. நுகர்ந்த பூவின் மணம் இன்னும் அவன் இதயத்தில் நிரம்பி மணத்தது. வள்ளி ஆழ்ந்த துயில் வசப்பட்டிருந்தாள்.

முனியன் எழுந்தான். குடிசையின் கொடியில் தொங்கிய புதிய புடவைகள், ரவிக்கைகள் அவன் கண்களில் உறுத்தின. அவை யெல்லாம் மாடன் அளித்த அன்புப் பரிசுகள்! அகல் விளக்கின் அடியில் காணப்பட்டது ஒரு புதிய பாம்புப் பெட்டி. முனியன் மனம் 'கடகட' வென்று சிரித்தது. அதைக் கையில் எடுத்துக் கொண்டான். கைக்கு உதவியாக விஷ வேரையும் மடியில் செருகினான்.

பொதிதட்டும் பொழுது அப்படியே நின்று விட்டான் முனியன். நினைக்கவும் அச்சம் தரும் காட்சி ஒன்று அவனுடைய நெஞ்சடியில் பிறந்தது. 'ஹஹ்ஹா!... மாடா! நீ



பம்பாய் டெலிபோன் கம்பெனியைச் சேர்ந்த திரு கே. வி. வெங்கடராமன் அவர்கள் புதல்வி சௌ. ராஜலக்ஷ்மிக்கும், பம்பாய் டபிள்யூ. எச். பிராடி & கம்பெனியைச் சேர்ந்த திரு ஆர். கணேசன் அவர்களுக்கும் பம்பாயில் ஜூலை 7ந் தேதி திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!

அதிர்ஷ்டமில்லாதவன்!... இள வயசிலேயே நீ மடியப்போறே! நேற்று மத்தியானம் பிடிச்சு வந்த இந்தப் பாம்புக்கு இன்னும் பல்லுக்கூடப் பிடுங்கல்லே!... எல்லாம் எனக்காகத்தான்!.... இந்த விரியன்கிட்டேயிருந்து நீ தப்பவே முடியாது! நல்லாத் தூங்கிக்கிட்டே இரு... இதோ வந்துடறேன், ம்!...நீ புது மாடனா?... எப்படி உன்னே நான் நம்ப முடியும்?... நல்லவன் மாதிரி நடிச்சு, ஒரு நாள் இல்லாட்டி ஒரு நாள் என் அழகுப் பொண்ணு வள்ளியை நீ கடத்திக்கிட்டும் போயிட்டால் என்னநான் செய்வேன்? பஞ்சையும் நெருப்பையும் ஒன்றாக வைக்கப்படாதின்னு தெரிஞ்சவன்தான் நான்!.... வள்ளிகூட என்னே நம்பிவிட்டாள்!...ம்!... இன்றைக்குத்தான் உனக்குக் கடைசி நாள்... இன்றிரவு வள்ளி போட்ட விருந்துதான் கடைசிச் சாப்பாடு!......உனக்குக் கண்ணாலம் கட்டி வைக்க வேண்டியது ஒன்றுதானா பாக்கி! நீ ஏமாந்திட்டே!.....ம்!' என்று வெறிகொண்டவன்போல் தன்னுள் நினைத்து, மனத்துக்குள் மறுபடியும் வெற்றிச் சிரிப்பு சிரித்துக் கொண்டான்.

முனியன் வள்ளியைப் பார்த்தான். அவள் தன்னை மறந்து தூங்கிக் கொண்டிருந்தாள். கையில் தாங்கிய பாம்புப் பெட்டியுடன் அவன் வெளியே வந்தான்.

★

சூன்யம் அட்டகாசமாகச் சிரித்துக் கொண்டிருந்தது.

முனியன் விழித்துப் பார்த்தான்:

அங்கு மாடன் இல்லே. வழக்கமாக அவன் படுத்துக் கிடக்கும் புளியமரம்—அந்தக் கட்டில் எதுவுமே அவனுக்கு மாடனைப் பத்திச் சொல்லவில்லே.

"மாடா! மாடா!" என்று கூவி அழைத்தான் முனியன்.

அந்தருணத்தில்—

சிரிப்பொலி மிதந்து வந்தது. பெண் ஒருத்தி சிரித்தாள்.

அவன் திரும்பினான்.

வள்ளி!

"மச்சான், இனி வாய் வலிக்க அந்த மச்சானைப் பேர் சொல்லி அலட்டாதிங்க! அது இனி உங்க கண்ணிலேகூட முழிக்காது. முழிக்கவே முழிக்காது! உன் வஞ்சக நாடகம் எனக்கு மட்டுமல்ல, அதற்கும் தெரிஞ்சுட்டுது! நீ மாடனைக் கொன்னு போடறதுக்குத்தான் புதுப் பாம்பைப் பிடிச்சாந்திருக்கே என்கிற ரகசியத்தை நேற்று நடுச்சாமத்தில் உன் வாயாலேயே தெரிஞ்சுகிட்டேன். உன்னே மறந்து நீ உளறிக் கொண்டிருந்தே! மனசிலே உள்ளது வாய்க்கு வராமல் தப்பாதுங்கிறது மெய்யான சேதிதான். ம்! மாரியாத்தா மாத்திரம் என்னே நேற்று முழிக்கச் செய்து, உன் ரகசியத்தைப் புரிஞ்சிக்கிடப் பண்ணாமல் இருந்திருந்தால், இந்நேரத்துக்கு, பாவம், அந்த மச்சான் செத்துச் சிவலோகம் போயிருக்குமே! மனுசன்னா அவன் எப்பவும் கெட்டவனாகத்தான் இருப்பானா? ஐயோ, உன் சந்தேகம் ரொம்பப் பொல்லாதது. மாடன் மச்சான் நிசமாகவே புது மாடன்தான்! சொல்லப் போனால், அது என் மட்டுக்கும் கண்கண்ட தெய்வமுங்கூட......! நான் கெஞ்சிக் கதறினேன்...இல்லாமற் போனால் எனக்கு இன்றைக்குத் தாலிப் பிச்சை தந்திருக்குமா?...உன் வஞ்சனையை அதனிடம் சொன்னதும் அதற்கு வந்த ஆத்திரத்துக்கு உன் உயிரையே கட்டாயம் குடிச்சிருக்குமே! மச்சான், இனியாவது நல்ல மனசோடு வாழுறதுக்குப் பாரு! இந்தா பாரு, அது உனக்குத் தந்துவிட்டுப் போன பரிசு!" உணர்ச்சி கழிக்கும் குரலில் பேசி முடித்த வள்ளி கையிலிருந்த இருநூறு ரூபாய் நோட்டுக்களை முனியனிடம் நீட்டினாள்.

"மாடா!... என் கண். திறந்திடுச்சு... என்னே மன்னித்துவிடு!'" என்று விம்மினான் முனியன்.

ஆனால், மறுவினாடி, "ஐயோ!" என்று அலறினான் முனியன். அவன் சப்தநாடிகளும் பயத்தினால் ஒடுங்கிப் போய்விட்டன.

தரையில் தவறி விழுந்த பாம்புப் பெட்டியிலிருந்து தப்பிய புத்தம் புதிய கட்டுவிரியன் முனியனின் இடது காலைக் கடித்துவிட்டது.

வள்ளி அவனை அணைத்துக்கொண்டு போய்ப் படுக்க வைத்தாள்.

"வள்ளி! நான் இனி பிழைக்க மாட்டேன். என்னுடைய துரோகத்துக்குச் சரியான தண்டனை கிடைத்துவிட்டது" என்று கண்களில் கண்ணீர் பெருகக் கூறினான் முனியன்.

"மச்சான், பயப்படாதே!... உனக்குத் தெரியாமல் அந்தக் கட்டுவிரியன் பாம்பின் விஷப் பல்லை முன்பே பிடுங்கி வீசிவிட்டேன்!..." என்று விம்மினாள் வள்ளி.

உதிர்ந்த ரத்தத் துளிகள், சிதறிக் கிடந்த ரூபாய் நோட்டுகளிடம் 'பாவ மன்னிப்பு' கேட்டுக் கொண்டிருந்தன!


Cow & Gate
Milk-Food
எல்லாக் குழந்தைகளும்
விரும்புவது மிக எளிதில்
ஜீரணமாகும் கௌ & கேட்
டாக்டர்களும் தங்களது
சொந்தக் குழந்தைகளுக்கு
தேர்ந்தெடுக்கும் உணவும்
அதுவே இன்றைய உலகில்
கௌ & கேட்டே தலைசிறந்த
உணவாகத் திகழ்கிறது என்
பதற்கு இதுவே தக்க சான்
றாகும். உங்கள் குழந்தைக்கு
கௌ & கேட்டை வற்புறுத்
திக் கேளுங்கள்.
5465
COW & GATE MILK FOOD
The FOOD of ROYAL BABIES

நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

26. நேயர்கள் கடிதம்

"வழக்கு என்ன ஆச்சங்க, மாமா?" என்று கேட்டான் மருமகன்.

"வழக்கா? மறுபடியும் 'ஈரங்கி' போட்டுப்புட்டாங்க" என்று பதில் அளித்தார் மாமனார்.

"ஏனும்?" என்றான் மருமகன்.

"என்னமோ? சர்க்காரு சாட்சிகளுக்கு 'சம்மனு' போய்ச் சேரவில்லையாம். அவங்க வரவில்லையாம். வாய்தா வேணுமென்றாரு சர்க்காரு வக்கீல். சரின்னு வருகிற மாசம் 3-ந் தேதிக்கு 'ஈரங்கி' போட்டு விட்டாரு மாஜிஸ்திரேட்டு."

இப்படிப்பட்ட சம்பாஷணைகளை எல்லோருமே கேட்டிருக்கலாம். "இந்தக் கேள்விக்குப் பதில் அடுத்த இதழில்" என்று எழுதி விட்டு, 'அடுத்த இதழில் வேறு விஷயத்தைப் பிரசுரித்தால் இந்த 'ஈரங்கி' போலத்தானே இருக்கும்?

நேயர்கள் கேள்விகளில் பதில் எழுதத் தக்கவற்றுக்குப் பதிலை ஒரு வாரம் விட்டு ஒரு வாரம் எழுதுவதென்பதுதானே திட்டம்? ஆகவே அடுத்த 'இதழில் பதில்' என்றால், பதில் வரவேண்டிய கிரமத்தில் அடுத்த இதழில் என்று சொல்லாமலே விளங்கும். இப்போது சொல்லியும் விட்டேன். ஆகவே இதில் ஈரங்கி—வாய்தா என்பது ஒன்றுமில்லை.

நாயுருவி பல்தேய்க்க உபயோகிக்கும் விஷயமாக நண்பர் கேட்டிருந்த கேள்விக்கு விடை வருமாறு.

முதலாவதாக, எல்லோருமே பல்குச்சியால் பல் துலக்கக் கூடாது. அஜீர்ண முள்ளவர் என்று ஆரம்பித்துப் பல் குச்சியால் பல் துலக்கக் கூடாதவரை தெரிவித்திருப்பதை ஞாபகமூட்டுகிறேன்.

இரண்டாவதாக, பல் தேய்ப்பதற்காக ஏற்கும் குச்சிகளுக்கு உதாரணமாக எருக்கு, ஆல், வேல், புங்கு முதலியவை சொல்லப்பட்டன. ஆயினும், பல் குச்சியாக ஏற்கத் தக்கதை யெல்லாம் சொல்லிக் கொண்டிருக்க முடியுமா?

ஆகவே துவர்ப்பு, காரம், கசப்பு சுவையுள்ளவைகளைப் பல் தேய்க்க உபயோகிக்க ஏற்கவேண்டும் என்று மூன்றுவதாக விளக்கப்பட்டது.

மாம்பழுப்பை — நடு நரம்பைக் களைந்து விட்டுச் சுருட்டிக் கொண்டு அதைச் சிறிது மென்று அதனால் பல் துலக்கலாம். ஏன்? துவர்ப்புச் சுவையுள்ளது. ஆகவே அது நல்லது. யாருக்கு? பல் குச்சியால் பல் துலக்கத் தக்கவருக்கு.

வேப்பங் குச்சியால் பல் துலக்கலாம். ஏன்? அது கைப்புச் சுவையுள்ளது. ஆகவே அது நல்லது. யாருக்கு? பல் குச்சியால் பல் துலக்கத் தக்கவருக்கு.

இப்படித்தான் பல் துலக்க நாம் ஏற்கக் கூடியவற்றைத் தெளிய வேண்டும். இவ்வாறு தெளிந்தெடுக்கும் குச்சியை மெதுவாக மென்று நுனியைப் பஞ்சு போல் மிருதுவாக்கிப் பல்லீறுகளுக்குத் துன்பம் நேராத முறையில் பல் துலக்க உபயோகிக்க வேண்டும். இதற்கு, பல் குச்சி பச்சையாகத்தான் இருக்க வேண்டும்.

நாயுருவியை நண்பர் ஏற்பதானால் அதன் கதிரை எப்படி உபயோகிக்க முடியும்? வேரைத்தானே உபயோகிக்க வேண்டும்? தினம் ஒரு செடி கிடைக்கா விட்டால் என்ன செய்வது? வேலங் குச்சி, ஆலங்குச்சி, வேப்பங் குச்சி என்று இப்படி ஒன்றை ஏற்பது. அவ்வளவு தான்; நாயுருவியால் பல் தேய்க்கும் பல்லெல்லாம் தங்கமாகி விடும், நாம் பணக்காரனாகி விடலாம் என்பதைக் கதைகள், சினிமாக்கள் அளவில் உண்மையாக்கலாமே யன்றி—அதில் அதிகம் சாதிக்க முடியுமா?

* * *

சேரள சகோதரி (222ல்) கேரள பாஷையிலேயே எழுதி யிருக்கும் ஒரு கடிதம் உள்ளத்தையும் கடந்து உயிரையும் தொடுமளவு உணர்ச்சி மிக்கதாயிருக்கிறது. "......எனிக்கு தமிழு எழுதுவான் அறியுக வில்ல. வாயிக்கு வானே அறியுகயுள்ளு.' பக்ஷே, சேட்டன்னு பல பாஷைகள் அறிவுண்டென்னு ஞான் மனஸ்ஸிலாக்கி· யிட்டுண்டு. அது கொண்டாணு ஞான் மலயாளத்தில் எழுதுன்னது..." என்ற பீடிகையுடன் எழுதுகிறாள்.

சின்னஞ்சிறு பெண். மனம் நொந்து - தனது சொந்த அண்ணனுடன் சொல்லவும் அச்சப்படும் அகக்கதை எழுதுகிறார். ஆகவே, நோயைப் பற்றின விவரத்தைப் பிரசுரித்தல் பண்பல்ல. கல்கி வாசகர்களின் அன்பும் ஆதரவும் எனக்கு எவ்வளவு ஊக்கமூட்டுகின்றன என்பதைத் தெரிவிக்க இந்தக் கடிதத்தைப் பற்றி இங்கு பிரஸ்தாபித்தேன்.

* * *

இலங்கை நண்பர் ஒருவர் கடிதத்தில் (226-ல்) குடற் கிருமிக்கும், அதனால் ஏற்பட்டதெனத் தெரிவிக்கப்

படும் ரத்தக் குறைவுக்கும் என்ன செய்ய லாமெனக் கேட்டிருக்கிறார். இது விஷய மாகக் காலக்கிரமத்தில் ஒரு தனிக் கட்டுரையே வரவிருக்கிறது. இதனிடை யில் நண்பருக்கு நேரிட பதில் எழுதலா மென்றால் பதில் கடிதத்துக்கு சிலோன் ஸ்டாம்புகளை அனுப்பியுள்ளார். என்ன செய்வது? அவர் அனுப்பிய ஸ்டாம்பை அவருக்கே அனுப்பி, கேட்டிருக்கும் கேள்விக்கும் பதிலை எழுதி உள்ளடக்கம் அனுப்பினேன். தபால் கூலி ...? இவ் விதம் நேயர்கள் செய்யலாமா?

பம்பாய் நண்பர் (228ல்) எழுது கிறார். சென்ற ஆறு மாத காலமாக ஈரல் கோளாறு. பசியில்லை. ஆகாரம் சாப்பிட்டால் உடனே மலம் தளர்ந்து கழியும். வயிற்றில் கடுப்பும் வலியும் இருக்கும். ஆனால் மலத்தில் சீதமோ ரத்தமோ இல்லை. இதற்குப் பல வைத் தியம் செய்யப்பட்டது. நாட்பட்டு நிலைத்துள்ள சீதபேதி என்று சிகிச்சை செய்தனர். பிறகு இது ஒரு கிருமியினால் உண்டானதென்றும், இதன் காரண மாக ஈரலில் வீக்கம் ஏற்பட்டிருப்பதா யும் அவ்வீக்கம் கட்டியாய்ப் பழுத்தும் விடலாம் என்றும் சொல்லி ஊசிகள் போடப்பட்டன. நிலைமையில் விசேஷ மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. பசிக் குறைவு, ஜெரிக்க மாட்டாமை அப் படியே இருக்கின்றன. வெளிக்குப் போவதிலும் மாற்றமில்லை. ஆகாரத் தைச் சீராக்கி அமைத்துக்கொள்ள வசதி இல்லை. கலியாணமாகாதவர். ஹோட் டல் சாப்பாடுதான். இத்துடன்...

வெயிற் காலம் வந்தால் ஒருவகை நீர்க்கடுப்பு வருவது வழக்கம். இவரைப் போலவே வெயிற் காலத்தில் நீர்க் கடுப்பினால் கஷ்டப்பட்டு வரும் வேறு சில நண்பர்களும் இருக்கின்றனராம். இவருக்கோ மேற்சொன்ன ஜீரணக் கோளாறுடன் நீர்க்கடுப்பும் ஏற்பட்டுத் தொந்தரவு. இதைவிட நரகமே கிடை யாது என்கிறார் நண்பர். இதற்கு என்ன செய்யலாம் என்று கேட்கிறார்.

ஜீர்ணாசயக் கோளாறு உள்ளவருக்குப் பத்தியமான ஆகாரத்தில் கட்டுப்பாடு மிகவும் அவசியம். இதற்கு வசதி செய்து கொள்ள இயலாதென்றால் வைத்தியத் தால் முழுப் பலனை எதிர்பார்க்க முடியுமா? அல்லது, ஹோட்டல் சாப் பாட்டை மாற்றி விட்டுச் சாப்பாடு கிடைக்க ஆவன செய்திடல் வைத்தியன் பொறுப்பா? இந்த விஷயத்தை நண் பரேதான் யோசித்து, செய்யத் தக்க தைச் செய்ய வேண்டும்.

இரண்டாவதாக, ஜீரண சக்தியை அதிகப்படுத்திடவும், இளகிப் போகும் மலத்தை இறுகிப் போகவும் கொடுக்கக் கூடிய மருந்து உஷ்ணமானதாகத்தானே இருக்க முடியும்? ஏற்கெனவே ஜீர்ணா சயத்தில் ஓரளவு அழற்சியுள்ளதாலும், ஈரல் வீக்கமுற்றுள்ளபோதும் உஷ்ண மான மருந்து கொடுக்க முடியுமா? மேலும், உஷ்ணமான மருந்து ஏற் கெனவே உள்ள நீர்க் கடுப்பை அதிகரிக் கச் செய்யுமே! இப்படி ஒரு கோளா றுக்கு இதமான சிகிச்சை இன்னொன்றுக் குப் பரமான நிலையில் இருப்பதால் நண் பரின் சுகவீனத்தைக் குணப்படுத்து வதில் வைத்தியனுக்குச் சிரமம் இருக் கிறது. அல்ப வீர்யமான மருந்துகளைத் தான் கொடுக்கமுடியும். அதனால் வியாதி குணமாகத் தாமதம் ஏற்படும்.

இதனிடையில் ஒரு உபாதை சிறிது குறையும்போது இன்னொன்று சிறிது அதிகரிப்பது போன்ற அனுபவமும் ஒன்று இரண்டு தடவைகள் ஏற்பட லாம். இதை யெல்லாம் உத்தேசித்து நண்பர் பொறுமையுடன் சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும். இதற்கு, அனுபவத்தில் தனக்கு அஹிதமென்று ஏற்பட்டுள்ள ஆகாரங்களையும் பானங் களையும் தவிர்ப்பது முதற் கடமையா கும். இதை நண்பரே அறிவார். ஆகவே அவரே நிச்சயித்துக் கொள்ளலாம்.

தினசரி ஒரு அரை ஆழாக்கு அளவா வது, வெள்ளாட்டுப் பாலை, காலை மாலை கால் ஆழாக்கு வீதமாவது, சாப் பிட்டு வருவது மிகவும் விரும்பத்தக்கது. இது மருந்தாகவும் ஆகாரமாகவும் உதவும். ஜீரணாசய அழற்சி, மலம் இளகிப் போதல், வயிற்றுக்கடுப்பு—கோலைடிஸ்—எமீபியாஸிஸ்—என்னும் பலதரப்பட்ட கோளாறுகளில் வெள் ளாட்டுப் பாலைப் போல் பயனளிக்க வல்லது வேறொன்றுமில்லை.

சிறு பஞ்சமூலம் என்னும் கூட்டு மருந்துகளின் பெருந்தூளை வாங்கி வைத்துக் கொண்டு தினமும் கஷாயம் வைத்து - ஆகாரத்துக்கு முன் 1—2 அவுன்ஸ் வீதம் இரண்டு வேளை சாப் பிட்டு வருவது மிகவும் நல்லது. இரண்டு மூன்று தினத்துக்கொரு முறை தாளீ சாதி வடகம் என்ற மருந்தில் ஒரு மிள களவு அவசியமானால், விழுங்கி வந்தால் இதற்கு அதிகப் பலன் கிடைக்கும்.

திரண பஞ்சமூலம் என்னும் கூட்டு மருந்துகளின் கஷாயத்தில் ஒன்றிரண்டு அவுன்ஸை - இரவு ஆகாரம் கழிந்த பிறகும் - காலையில் வெறும் வயிற்றிலும் சிறிது சீனாகற்கண்டும் கூட்டிச் சாப்பிட நீர்ச் சுருக்கும் குணமாகும். ஜீர்ணாசய அழற்சியும் குறையும். ஒரு மாத காலம் இவற்றை உபயோகித்துக் குண குணத்தை எழுதவும். (தொடரும்)

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

ஆசைக் குழந்தைகளுக்கு

அருமைப் பவுடர்



இலவச புத்தகம்: ஜான்ஸனின் குழந்தை பராமரிப்பு புத்தகத்தின் இலவசப் பிரதிக்கு எழுதுங்கள். பெற்றோர்களுக்கு உபயோகமான அநேக விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன. இங்கிலீஷ் அல்லது ஹிந்தி பிரதிகளில் எது வேண்டுமென்று குறிப்பிட்டு எழுதவும்.

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன், பி.ஓ. பாக்ஸ் 1976, டிபார்ட்மெண்ட் 36-J பம்பாய்

பத்ரிநாத் யாத்திரை

நாகம்மாள்



ஒரு பெண்ணைக் கண்ணைப் போல் காக்க வேண்டுமென்று ஒரு ஆண் மகனுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கிறோம். ஐந்து கணவன்மார்களை அடைந்தாள் பாஞ்சாலி. துரியோதனன் அரச சபையில் மானம் போகும் நிலையில் நிற்கிறாள். தன்னைக் காப்பாற்றும்படி கணவன்மார்களை வேண்டிக் கதறினாள். இவரும் தலை குனிந்து நின்றார்கள். அந்தப் பெண் தெய்வம் "ஹே, கிருஷ்ணா! இதய கமலவாஸா!" என்று கதறி இரு கைகளையும் குவித்து வேண்டினாள். அடுத்த கணம் அவள் மேல் ஆடை களையக் களையக் குவிந்தது. இதையெல்லாம் புராணங்களில் படிக்கிறோம். கதைகளில் கேட்கிறோம். அப்படியெல்லாம் இந்தக் கலி காலத்தில் நடக்குமா என்று சந்தேகப்படுகிறோம். உங்களுக்கு அப்படிச் சந்தேகமிருந்தால் இந்த நிமிஷமே விட்டு விடுங்கள். கடவுளின் கருணைக்குக் காலம் தேசமில்லை; வர்த்தமானமில்லை.

சென்ற மே மாதம் 18ந் தேதி நடந்த ஒரு சம்பவத்தினால் கடவுளின் கருணையை இவ்வளவு உறுதியாகச் சொன்னேன். சுமார் பதினாறு பேர்கள் கொண்ட ஒரு கோஷ்டி பத்ரிகாச்ரம் போய்த் திரும்பினோம். இயற்கை எங்களை விழுங்க நான்கு பக்கமும் சூழ்ந்து கொண்டது. ஆகாயம் வெடித்தது. மலை சரிந்தது. வானம் பிரளயமாக மழையைப் பொழிந்தது. சூறாவளி அடித்தது. எங்கள் மனம் கோர மரணம் நெருங்குவதை நினைத்துத் துடித்தது. ஆனால் நாங்கள் செய்த பிரார்த்தனைக்குச் செவி சாய்த்து ஜகன்மாதா தன்னுடைய கருணைப் பிரவாகத்தால் எங்களைக் கரை சேர்த்து ஒரு ஆபத்தும் அணுகாமல் காப்பாற்றினாள்.

முதலில் துன்பமான இந்த அனுபவத்தைச் சொல்லி விட்டேன். ஆனால் நாங்கள் அனுபவித்த ஆனந்தத்தையும் சொல்லி விடுகிறேன்.

பத்ரி யாத்திரை என் வாழ்க்கையில் ஒரு லட்சியமாக இருந்தது. என் வாழ்க்கையில் நான் செய்ய நினைத்ததை யெல்லாம் கடவுளின் கருணையால் அநேகமாகச் செய்து விட்டேன். இதையும் நிறைவேற்ற நினைத்தேன். என் அன்புக்குரிய தோழிகளும் உறவினர்களும் சேர்ந்து கொண்டார்கள். பதினாறு பேர்கள் கொண்ட கோஷ்டியாக நாங்கள் மே மாதம் ஆறாம் தேதி தில்லியிலிருந்து புறப்பட்டோம். பத்ரி கோவிலுக்கு ஆறு மாதங்கள் யாத்ரிகர்கள் வர வசதியாயிருக்கும். மற்ற ஆறு மாதங்கள் பனி குளிர் தாங்காது. கோவிலைச் சாத்தி விடுகிறார்கள்.

பத்ரிக்குப் போக நீங்கள் சேகரித்துக் கொள்ள வேண்டியது முக்கியமாகத் தடிக் கம்புகள், பழைய கோட்டு, சட்டைகள். கம்புகள் அங்குள்ள துஷ்ட மிருகங்களை அடிக்க என நினைக்க வேண்டாம். அந்தக் கரடுமுரடான பாதையில் ஊன்றிக் கொண்டு நடக்க அது இன்றியமையாதது. அங்குள்ள கூலிக்காரர்களுக்கும், டோலிக்காரர்களுக்கும் பணம் கொடுப்பதைவிடப் பழைய துணிகளைக் கொடுப்பது சிறந்த தர்மமென நினைக்கிறேன். பழைய காலம் மாதிரி சத்து மா, அவல்

மட்டும் உபயோகமில்லை. அங்குள்ள குளிருக்கும், ஜுரத்துக்கும் தாராளமாக அரையுடன் ஹார்லிக்ஸ் புட்டிகள் எடுத்துக் கொண்டு போகலாம்.

ஆறும் தேதி புறப்பட்டு ஏழாம் தேதி காலை ஹரித்வார் வந்து சேர்ந்தோம். அங்கே சாந்தி நிகேதன் ஹோட்டலில் வசதியான ஒரு பாகத்தை எடுத்துக் கொண்டோம். வாடகை அதிகமில்லை. பன்னிரண்டு ரூபாய் ஐம்பது நயா பைசாதான். இரண்டு நாட்கள் கங்கையில் ஆனந்தமாக ஸ்நானம் செய்தோம். அங்கே கடைத்தெரு இருக்கிறது. நாம் கொண்டுவர மறந்து போன சாமான்களை இங்கே வாங்கிக் கொள்ளலாம். நாங்கள் கொண்டுவர மறந்த கம்புகளை அங்கே வாங்கி அங்கேயே மறந்து வைத்து விட்டோம்!

ஒன்பதாம் தேதி ரிஷிகேசம் போய்ச் சேர்ந்தோம். ஹரித்வாரிலிருந்து ரிஷிகேசம் பதினாறு மைல்கள்தான். ரிஷிகேசம் என்று நினைத்தவுடன் கங்கையின் அழகு, சிவானந்தருடைய ஆசிரமம் இரண்டு விஷயங்களும் நம் மனத்தைப் பரவசப் படுத்துகின்றன. பால் போல் பொங்கும் கங்கா தேவியை வணங்கி ஸ்நானம் செய்தோம். அங்கே சிவ பஞ்சாயதன கோவில் ஒன்று இருக்கிறது. அதில் நம் கையால் பூஜை செய்யலாம்.


அங்கிருந்து பத்தாம் தேதி காலை புறப்பட்டோம். இருபதாவது மைலில் வியாஸகாட் என்ற இடம். நாற்பதாவது மைலில் தேவப் பிரயாகை. இவைகளைக் கடந்து ஸ்ரீநகர் வந்து சேர்ந்தோம்.

ஸ்ரீநகரில் வைத்தியப் பரிசோதனை கடுமை. நம்ப குடும்ப வைத்தியரிடம் அம்மை குத்திக் கொண்டு போனாலும் அவர்கள் ஒத்துக் கொள்வதில்லை. கார்ப்பொரேஷனில் குத்தின சர்டிபிகேட் இருந்தால்தான் ஒத்துக்கொள்கிறார்கள். கொலரா தடுப்பு ஊசி குத்திக் கொண்டோம். ஏழரை மணி சுமாருக்கு ஸ்ரீநகரை வந்து அடைந்தோம்.

ஒரு குடும்பப் பெண் குழந்தைகளுக்குத் தாயாகவும், மாமிக்கு மருமகளாகவும், கணவனுக்கு மனைவியாகவும் இப்படிப் பல உறவு முறையில் விளங்குவதுபோல் நம் பாவங்களைப் போக்கிப் பாவனமாக்கும் பாகீரதி பத்ரியிலிருந்து ரிஷிகேசம் வருகிறாள். அளகநந்தா என்ற பெயருடன் ஓடுகிறாள்.

பதினொன்றாம் தேதி ஸ்ரீநகரிலிருந்து புறப்பட்டு ருத்ரபிரயாகை, நந்தப் பிரயாகை இவைகளைக் கடந்து மாலை பிப்பல்கோட் வந்து சேர்ந்தோம். மிகவும் செங்குத்தான பாதை. இயற்கை தேவி இங்கே அழகாகக் காட்சி அளிக்கவில்லை. பயங்கரமாகத் தோன்றினாள். இந்தப் பாதையை யாத்திரிகர்கள் வசதிக்காக உடனடியாகக் கவனித்துச் செப்பனிட வேண்டும் என்று எப்பொழுது யாருக்குத் தோன்றப் போகிறதோ!

பன்னிரண்டாம் தேதி பிப்பல் கோட்டிலிருந்து நாங்கள் டோலி யாத்திரை கிளம்பினோம். அங்கே டோலிக்காக ஒரு கூட்டுறவு சங்கம் இருக்கிறது. தண்டி, கண்டி என இரு வகைப்பட்ட டோலிகள். சின்னக் குதிரைகளும் இருக்கின்றன. ஒருவகை டோலி கூடைமாதிரி. உட்காருவது மிகவும் சிரமம்.



ஊரில் எவ்வளவுக்கு எவ்வளவு நாஸ்திகப் பிரசாரம் அதிகமாகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு ஆஸ்திகத் தொண்டும் வளர்ந்து வருகிறது. முன் எப்போதையும் விட இப்பொழுது கோவிலுக்குக் கொடுப்பவர்கள் அதிகமாகி வருகிறார்கள். மதுராந்தகம் ஸ்ரீ கோதண்டராமசாமி கோயிலில் சுவாமி அபிஷேகத்துக்காக இரண்டாயிரத்து முந்நூறு ரூபாய்க்கு வெள்ளி அபிஷேகவேதி வாங்கிக் கொடுத்திருக்கிறார் முகந்தவிசி ஸ்ரீ வ. வே. ராகவன் அவர்கள். சென்ற ஜூன் இருபத்தெட்டாம் தேதி ஸ்ரீ ஜனகவல்லித் தாயாருக்கும் கருணாகரப் பெருமாளுக்கும் இந்த அபிஷேகவேதியில் வைத்து விசேஷ அபிஷேகம் நடைபெற்றது.

இன்னொன்று பலமில்லாத கள்ளிச் சட்டங்களை வைத்துக் கட்டி இருக்கிறார்கள். மேலே நிழலுக்காகப் போட்டிருக்கும் துணியில் ஆயிரம் பொத்தல்கள். சாமான்களுடன் ஆளையும் நிறுத்து விடுவார்கள்.

விடியற்காலையிலிருந்து பேரம் பேசி ஏழு மணிக்கு ஒரு மாதிரியாக டோலிகளை அமர்த்திக்கொண்டு கிளம்பினோம். வழியில் கருடகங்காவில் ஸ்நானம் விசேஷம். பாதைகள் எல்லாம் பயங்கரம்தான். ஒரு புறம் மண் மேடு, இன்னொருபுறம் அதல பாதாளம். எங்கள் கோஷ்டியில் ஒரு அம்மாள் பாதாள கங்கையைப் பார்த்துப் பயந்து அழுது விட்டார். அந்த இடத்தில் டோலிக்காரர்கள் எல்லோரையும் இறக்கிவிட்டு எங்கள் கையைப் பிடித்து அழைத்துப் போனார்கள். மாலை குமாரஜெட்டி வந்து சேர்ந்தோம்.

பதின்மூன்றாம் தேதி குமார ஜெட்டியிலிருந்து ஜோஷி மடம் வந்தோம். இதுவரை சாப்பாடு வசதியாக இருந்தது. இதன் பிறகு அகாலச் சாப்பாடு. கஷ்டமான பிரயாணம் தான். ஜோஷி மடத்தில் சங்கர மடம் இருக்கிறது. நரசிம்மமூர்த்தி கோவில் ஒன்று இருக்கிறது. இரவை அங்கு கழித்தோம்.

பதினான்காம் தேதி பாண்டுகேசுவரம் வந்தோம். இது மிக விசேஷமான இடம். பாண்டவர்கள் பூஜை செய்த புண்ணிய ஸ்தலம்.

பதினைந்தாம் தேதி விடியற்காலையில் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு அனுமான ஜெட்டி வந்து சேர்ந்தோம். இங்கிருந்து பிரயாணம் அதிக சிரமம். இந்த இடம் கடல் மட்டத்திலிருந்து ஆறாயிரம் அடி உயரம். பத்ரிகாச்ரமம் பதினாயிரம் அடி உயரம். ஏற்றமான செட்டப் பாதை. பாதையில் ஜல வசதி குறைவு. ஒரே குழாய்தான். பிரயாணிகள் தங்கள் சௌகர்யத்தைப் பார்த்துக் கொள்ள வேண்டும். வழியில் நாம் தங்கும் சத்திரம்



அமெரிக்க நாட்டிலே இந்தியத் தூதராக இருக்கும் திரு ஜி. எல். மேத்தாவும், அவருடைய மனைவியாரும், நியூஜெர்ஸி மாகாணத்திலுள்ள ஜான்ஸன் அண்டு ஜான்ஸன் ஆராய்ச்சிச் சாலையைப் பார்வையிட்டு மகிழ்ந்தனர். ஜான்ஸன் அண்டு ஜான்ஸன் கம்பெனியார் வைத்தியத் துறையில் உபயோகமாகும் வைத்தியக் கருவிகளையும், குழந்தைகளுக்குப் பயன்படும் பொருள்களையும் தயாரித்துப் புகழ் பெற்றவர்கள். ஜான்ஸன் அண்டு ஜான்ஸன் கம்பெனியாரின் பொருள்கள் பாரதநாட்டிலே ஏராளமாக விற்பனையாகின்றன. மேற்படி கம்பெனியாரின் அரை மைல் நீளமுள்ள பெரியதோர் யந்திரத்தை நமது தூதர் ஒரு விசேஷ மின்சார ரயிலில் ஏறிச் சென்று பார்த்தாராம். இந்திய தூதர் வருகையை முன்னிட்டு, அந்த விசேஷ ரயிலிலும் அந்த யந்திர சாலையின் முகப்பிலும் இந்தியக் கொடியைப் பறக்கவிட்டுக் கௌரவித்தனர்.

கள் விடுதிகளில் சாமான்களைக் கும்பலாகப் போட்டு விடுவோம். அதை அவரவர்கள் தேட வேண்டாம். டோலிக்காரர்கள் குறிப்பாகத் தங்கள் டோலி சாமான்களைச் சுலபமாகப் பிரித்து எடுத்து விடுவார்கள். முதலில் டோலியில் ஏற்றியதைவிட ஒரு சிறு துரும்பைக்கூட அதிகமாக வைக்கச் சம்மதிக்க மாட்டார்கள். நாங்கள் எல்லோரும் பட்டினி, பசி, பயம் எல்லாமாகச் சேர்ந்து ஒவ்வொரு நாளும் இளைத்துக் கொண்டு வந்தோம். எனவே எங்கள் நிறை குறைந்து விட்டது. டோலிக்காரர்கள் சந்தோஷப்பட்டார்கள். இந்த யாத்திரைக்குக் கையில் பிடிப்பிடியாகச் சில்லறை வேணும். ஒரு மைல் நடந்ததும் தச்சரிக்க ஆரம்பித்து விடுவார்கள். ஏதாவது பணம் கொடுத்தால்தான் அவர்கள் வாயை மூடுவார்கள்.

அங்கே சுற்றிலும் மூடு பனி. கைலையங்கிரியை அணுகி விட்டதாகப் பிரமை உண்டாகிறது. எனக்கு ஜுரம் வந்து வழியில் வைத்தியம் செய்து கொண்டேன். அன்று மாலை பத்ரிகாச்ரமம் வந்து சேர்ந்தோம். என்னுடைய நீண்ட நாளையக் கனவு நிறைவேறியதை எண்ணிப் பொங்கினேன். அந்த ஆனந்தமான நிலையில் உடல்நலனை மறந்தேன்.

அன்று மாலையே மறு நாள் நிறைவேற்ற வேண்டிய அர்ச்சனைகள் அபிஷேகத்துக்கு ஏற்பாடு செய்தோம்.

கோவிலுக்கு எதிரே கொஞ்ச தூரத்தில் தப்த குண்டம் என்ற இடத்தில் குளிர்ந்த தண்ணீர் பொங்கும்; வெந்நீரும் வரும். இரண்டும் பூமியிலிருந்து சுரக்கின்றன. இது ஒரு அதிசயம். தண்ணீரில் கந்தக வாசனை வீசுகிறது. எல்லோரும் அதில் ஸ்நானம் செய்தார்கள்.

பதினேழாம் தேதி காலை அந்தச் சிறிய அழகிய கோவிலுக்குள் போனோம். எங்கள் மனம் ஆனந்தத்தில் நிரம்பியது. ஒவ்வொருவரும் குறைந்தது ஐந்து கம்பளிச் சட்டைகளாவது போட்டுக் கொண்டிருந்தோம். அப்படியும் குளிர் நடுக்கியது.

பத்ரிநாராயணமூர்த்தி வெகு அழகாகச் சுவரில் சித்திரிக்கப்பட்டிருக்கிறார். பத்ம ஆசனம். பக்கத்தில் நரன், நாரதர், உத்தவர், குபேரன், கருடன், விக்னேஸ்வரர் எல்லாம்கூட இருக்கும் மூர்த்திகள். பிரும்மானந்தமாகத் தரிசனம் செய்தோம். சுமார் மூன்றரை மணி காலம் அபிஷேகம் அர்ச்சனை நடந்தது. அபிஷேகம் ஆனதும் நிறையச் சந்தனத்தைப் பகவானுக்குக் கவசமாக அணிவிக்கிறார்கள்.

அபிஷேகம் தரிசனம் எல்லாம் முடித்துக் கொண்டு எங்கள் கோஷ்டி புறப்பட்டது. ஒரு நாள் தங்கினால் டோலிக்காரர் ஒருத்தருக்கு மூன்று ரூபாய் படிச் செலவு கொடுக்க வேண்டும். பிரும்ம குண்டம் என்ற இடத்தில் பிதுர்களுக்குச் சிராத்தம் செய்தால் மிகவும் விசேஷம் என்றார்கள். அந்தக் காரியத்தையும் செய்தோம்.

மறுநாள் மறுபடியும் அபிஷேகம் செய்து விட்டுக் கிளம்பினோம். கடும் மழையும் எங்களுடன் வந்து விட்டது. அன்று பாண்டுகேசுவரம் வந்தோம்.

பதினெட்டாம் தேதி மழைக்குப் பயந்து கொண்டு அங்கேயே தங்கி விட்டோம். பத்தொன்பதாம் தேதி புறப்பட்டு ஜோஷிமடம் வந்து சேர்ந்தோம். இங்குதான் எங்களுக்கு ஒரு சோதனை காத்திருந்தது. டோலிக்காரர்கள் வேறு வழி சுலபமென்று போக ஆரம்பித்தார்கள். கொஞ்ச தூரம் போய் ஒரு அபாயகரமான இடத்தை அடைந்தோம். வானம் பொத்துக் கொண்டது போல் மழை கொட்டியது. பாதை தெரியாமல் மண் மூடிவிட்டது. எல்லோரும் இறங்கி ஒரு மரத்தடியில் நின்றோம். மேலே வெட்டு வைத்துப் பாறையைச் சுடுகிறார்கள். காலடி மண் சரிகிறது. இடியும் மின்னலும் பயங்கரமாக இருக்கின்றன. எங்கள் முடிவு காலம் நெருங்கி விட்டதாக உணர்ந்தோம். தனித் தனியாக அழுதோம். எங்கள் நிலையைக் கண்டு டோலிக்காரர்கள், தைரியம் சொன்னார்கள். ஆனால் இந்தப் பேராபத்திலிருந்து எங்களை எப்படிக் காப்பாற்றுவது என்ற கவலை இல்லாமல் இல்லை. குறுக்கும் நெடுக்குமாக அலைந்தார்கள். வரும் போது மண்சரிந்து நேர்வழியில் வந்தும் ஒரு அம்மாள் இறந்து விட்டதைக் கேள்விப்பட்டோம்.

அதெல்லாம் நினைவுக்கு வந்ததும் மேலும் பயங்கரமாய் விட்டது. என் கடைசிக்காலம் வீட்டோடு வாசலுடன் போகப்படாதா வென்ற அளவில்தான் என் உயிரைப் பற்றிய கவலை ஏற்பட்டது.

'ஆனால் அருமைப் பேரனை அவன் அன்னையிடம் ஒப்படைக்க வேண்டுமே. என் பிள்ளையும் அவன் மனைவியும் குழந்தை முகத்தைக் காண வேண்டுமே. கூட வந்தவர்கள் பிழைத்து அவர்கள் குடும்பத்துடன் சேர வேண்டுமே?'—இவைகளை நினைத்துத் தவித்தேன். கதறினேன்.

மேலே பாறையைச் சுடுவதை நிறுத்தி விட்டார்கள். ஆனால் இடியையும் மழையையும் யாரால் நிறுத்த முடியும்? அந்தத் தேவியின் கருணையால் ஐந்து நிமிஷங்களுக்குள் மழை நின்றது. டோலிக்காரர்கள் சரிந்த மண்ணைக் கையால் தட்டிச் சமனப்படுத்தினார்கள். பிறகு அவர்கள் எங்களைத் தங்கள் முதுகில் ஏற்றிக் கொண்டார்கள். வெகு ஜாக்கிரதையாக நடந்தார்கள். அப்பொழுது டோலிக்காரர்கள் எங்களுக்குத் தெய்வமாகத் தோன்றினார்கள். அவர்கள் மார்பை மலைமேல் உரசிக்கொண்டு வந்தார்கள். ஒருவன் விழாமல் இருக்க இரண்டு பேர் கூடப் பிடித்துக் கொண்டார்கள். எப்படியோ மின்னல் வேகத்தில் ஒரு பாதையைக் கண்டோம். அப்பொழுது நாங்கள் உயிரோடுதான் இருக்கிறோமா வென்று சந்தேகம் வந்து விட்டது. பிறகு அந்தப் பாதையும் நல்ல பாதை என்று கூற முடியாது. ஆனால் ஆபத்திலிருந்து தப்பினோம். ஐந்து நிமிஷங்கள் எங்களுக்காகக் காத்திருந்த மழை மறுபடியும் கொட்ட ஆரம்பித்தது. எல்லோரும் மறுபடியும் அழுதோம். ஆனால் அது ஆனந்தக் கண்ணீர்.

இருபதாம் தேதி கார் போகும் வழியில் வந்து பிப்பல்கோட் வந்து சேர்ந்தோம். இரவு அங்கு தங்கினோம்.

மறுநாள் பிப்பல்கோட்டிலிருந்து ஸ்ரீநகர் வந்து சேர்ந்தோம். இடம் கிடைக்காமல் கஷ்டப் பட்டோம். ஒரு கடை மாடியில் தங்கினோம். இருபத்திரண்டாம் தேதி எட்டு மணிக்குப் புறப்பட்டு ரிஷிகேசம் வந்தோம். அழுதளவு சிரித்தோம்.

இருபத்திமூன்றும் தேதி காலை லக்ஷ்மண ஜூலாவில் ஸ்நானம் செய்தோம். மழை விட்டும் தூவானம் விடவில்லை யென்பது போல் படகில் அதிகக் கூட்டம். மறுபடியும் உயிருக்குப் பயந்தோம். அந்த ஆபத்திலிருந்து ஒரு வழியாக மீண்டு வந்தோம். அங்கே கீதாபவனம் என்ற கோவில் இருக்கிறது. அதில் கீதை சுலோகங்கள் முழுதும் சித்திரித்திருக்கிறார்கள். பார்க்க அழகாய் இருக்கிறது. அன்று பிற்பகல் இரண்டு மணிக்கு ஹரித்வார் வந்து சேர்ந்தோம்.

இருபத்து நாலாம் தேதி ஹரித்வாரிலிருந்து புறப்பட்டு இரவு ஒன்பது மணிக்குத் தில்லி வந்து சேர்ந்தோம். எங்கள் பிரயாணச் செலவு சாப்பாடு எல்லாம் கூட்டுறவு முறையில் வைத்துக் கொண்டதால் மிகவும் சுலபமாக இருந்தது.

பத்ரிபோகும் பாதையில் நாங்கள் கண்ட வனப்பும், இயற்கைக் காட்சிகளும் எங்கள் மனத்திரையில் அழியாத சித்திரங்களாக இருந்து கொண்டே இருக்கும்.

தலைநகரில் ஆஸ்திக வெள்ளம்

நான்தான் கப்புடு. வெகு நாட்களுக்குப் பின் புது தில்லியிலிருந்து எழுதுகிறேன். இங்கே ஆஸ்திக வெள்ளத்தின் பெருக்கைப் பார்க்கும்போது அகத்தியன் பொதிகை தாண்டி வடக்கு வந்து விட்டான் போல் தோன்றுகிறது. நமது பாரதப் பண்பாட்டில் கடவுள்களெல்லாம் வட நாட்டிலும் ஆஸ்திகப் பிரசாரகர்கள் எல்லாம் தென்னாட்டிலும் எப்போதுமே ஜனித்து வந்துள்ளனர்.



இந்தப் படத்தில் கண்டிருக்கும் "பண்டித ரத்ன உபன்யாஸ ரத்ன ரகோத்தமாசாரியார்" புது தில்லியையே ஒரு குலுக்குக் குலுக்கி விட்டார். பிரசங்கமாரி தான்; கடல்மடை திறந்த பிரமைதான். ஒரு மாத காலமாக இங்கே மஹாபாரதம், இராமாயணம் முதலிய புராணங்களைப் புதிய கருத்துக்களுடனும், சோபையுடனும் திரளான ஜனங்களுக்குச் சரளமாய் எடுத்துச் சொல்லி வருகிறார். கரோல் பாக், மாதவ சங்கம், வினயக மந்திரம் முதலிய இடங்களில் நடந்த இவர் பிரவசனத்துக்கு உள்நாட்டு உபமந்திரி தத்தார், விஜயாலி ஸ்ரீ கிருஷ்ணன் முதலானோர் விஜயம் செய்து ஸ்ரீ ரகோத்தமாசாரியாரைப் பெரிதும் பாராட்டினார்கள்.




1936 “திருடன், திருடன்” என்று ஒரே கூக்குரல். ராஜாராமன் உடனே தனது புதிய ஹெர்குலிஸ் ஸைக்கிளில் ஏறி திருடனைத் துரத்துகிறான். பாவம்! அந்த நம்பகமான ஹெர்குலிஸ் ஸைக்கிளின் முன் திருடனின் சாமர்த்தியம் எப்படி பலிக்கும்.

ஹெர்குலிஸ் ஓர் ஸைக்கிள் மட்டும் அல்ல, வாழ்நாள் முழுதும் உழைக்கும் ஓர் நற்துணை

இந்தியாவில் தயாரிப்பவர்கள்

டி. ஐ. ஸைக்கிள்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், சென்னை.

TIC-31A



1957 மீண்டும், ரகுராமன் தன் அன்புடையவர்களைப் போற்றப்படுகிறான்— இப்பொழுது டாக்டரை தக்க சமயத்தில் அழைத்துவந்து தன் பக்கத்து வீட்டுக் குழந்தையைக் காப்பாற்றியதால். தனது பழைய ஹெர்குலிஸ் சைக்கிளின் நீடித்த சேவையைப்பற்றி ரகுராமன் பெருமிதம் அடைகிறான்.

ஹெர்குலிஸ் சைக்கிள் வைத்திருப்பவரைக் கேளுங்கள். வாழ்நாள் முழுதும் உழைப்பதற்கென்று அமைக்கப்பட்ட உன்னத சைக்கிள் அது என்று கூறுவர். சுமார் 50 வருஷங்களாக உயர்தர சைக்கிள்களைத் தயாரித்துவரும் அனுபவ மிகுந்தவர்களால், இப்பொழுது இந்த நுட்ப வேலைப்பாடமைந்த ஹெர்குலிஸ் சைக்கிள் டி. ஐ. சைக்கிள்ஸாரின் நவீன தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகிறது. அதன் உயர்தர அமைப்பையும், அதிகப் பிரயாசையில்லாமல் ஓடும் தன்மையையும் கண்டு நீங்கள் ஆச்சரியமடைவீர்கள். சைக்கிள்களில் மிகச்சிறந்தது ஹெர்குலிஸ். ஆயினும் மிதமான விலையில் கிடைக்கிறது.

உங்கள் சைக்கிள் ஒரு சிறந்த மூலதனம்—

ஹெர்குலிஸ் உங்கள் பணத்திற்கு சிறந்த பெறுமானம்.



விதியின்

விதி என்னை மீண்டும் இரண்டாம் முறை மணமகனாக்கிச் சிரித்தது!

மல்லிகைப் பூவின் மணம் கம்மென்று வீசி மணவறை முழுவதும் வியாபித்திருந்தது. ஆனால் அந்த மணம் என் மனத்தைக் குதூகலிக்கச் செய்யவில்லை.

கெட்டி மேளம் கொட்டியது. எல்லோரும் மலர்களை வாரித் தூவினார்கள். இயந்திரம் போல் பத்மாவின் கழுத்தில் மூன்று முடிச்சுகளைப் போட்டேன்.

மாங்கல்ய தாரணம் ஆனவுடனேயே மணப் பந்தலில் தங்கள் பொறுப்பு முக்காலும் கழிந்ததுபோலக் கூட்டம் கலைந்தது.

எனக்கும் அந்தச் சிறையிலிருந்து கொஞ்ச நேரம் விடுதலை கிடைத்தது. ஒருவருக்கும் தெரியாமல் மாடியில் எனக்குக் கொடுக்கப் பட்டிருந்த அறைக்குச் சென்றேன்.

ஹோமப்புகை கண்களைக் கலங்கச் செய்து தலையை வலித்தது. என் அருமை சீதாவின் நினைவோ என் மனத்தையெல்லாம் வலிக்கச் செய்து நிம்மதி இல்லாமல் செய்தது. அந்த நிமிஷத்தில் எனக்கு வேண்டியிருந்ததெல்லாம் தனிமையும் ஓய்வும்தான். உட்காரவும் பாழும் மனம் இருப்புக் கொள்ளவில்லை. பெட்டியைத் திறந்து என் சீதாவின் படத்தை எடுத்து மார்புறத் தழுவி மீண்டும் கண்களை மூடினேன். கட்டிலில் தொப்பென்று படுத்தேன்.

படத்தை மீண்டும் ஒருதரம் பார்த்தேன். "ஐயோ, சீதா! உன்னோடு இரண்டு வருஷங்கள் வாழ்க்கை நடத்தி விட்டு உன்னைப் பறி கொடுத்து முழுசாக ஒரு வருஷம் ஆக வில்லை. அதற்குள் மீண்டும் புது மாப்பிள்ளை யாகி விட்டேனே! சீதா! இந்தப் பாவிக்கு மன்னிப்பு உண்டா!" மனத்தின் பாரம் குறையும் வரை வாய் விட்டுக் கதறினேன்.

அறையின் கதவு தட்டும் சத்தம் கேட்டு, படத்தை ஜாக்கிரதையாகப் பெட்டியில் வைத்துப் பூட்டி விட்டு, கண்களை நன்றாக அழுத சுவடு தெரியாமல் துடைத்துக் கொண்டு கதவைத் திறந்தேன்.

என் மாமனார், மைத்துனன் இன்னும் சிலர் பத்மா உள்பட நின்று கொண்டிருந்தார்கள். மாலையும் கழுத்துமாக மணக்கோலத்திலேயே



விளையாட்டு

ராமப்பிரியா

பொம்மை மாதிரி குனிந்த தலை நிமிராமல் பத்மா ஒருபுறமாக நின்று கொண்டிருந்தாள்.

"மாப்பிள்ளை! இலை போட்டாகி விட்டது. பத்மாவும் நீங்களுமாகப் பலகாரம் சாப்பிட வேண்டும். வருகிறீர்களா?" என்று வினயத் துடன் அழைத்தார் மாமனார்.

"அந்த சாஸ்திரம் எல்லாம் ஒன்றும் வேண்டாம்! பத்மாவைச் சாப்பிடச் சொல்லுங்கள். எனக்குத் தலையை ரொம்ப வலிக்கிறது. சற்று நேரம் கழித்து ஆகாரத்தை இங்கேயே அனுப்பி விடுங்கள் போதும்!" என்றேன்.

"பத்மாவை விட்டுக் கூப்பிடச் சொல்லட்டுமா?" என்றான் மைத்துனன் குறும்பாக. எல்லாரும் சிரித்தார்கள். அதை ரசிக்க என் மனத்தில் தெம்பு இல்லை.

பத்மாவோடு பலகாரம் சாப்பிட மறுத்து விட்டேன். என் சீதாவுடன் எச்சிலை மாற்றிக் குறும்புடன் விளையாடிச் சாப்பிட்ட பிறகு இன்னொரு பெண்ணுடன் மீண்டும் அந்த விளையாட்டா? ஊஹூம்! என் மனம் அதைக் கட்டோடு மறுத்தது.

மூன்று வருஷங்களுக்குமுன் இதே குதூகல நன்னாள். இருபத்திரண்டு வயதுக் காளையாக நிமிர்ந்து நின்றேன், கட்டுப்படுத்த முடியாத எண்ணங்கள் உதிரும் பருவம்.

மணவறையில் எனக்கு மாலையிட வந்து நின்றாள் சீதா. மங்கள நாணை அவள் கழுத்தில் கட்டி என்னுடைய உரிமையாக்கிக் கொண்டதில் எத்தனை மகிழ்ச்சியா யிருந்தது?

சீதா என்னுடன் வாழ்ந்த அந்த இரண்டு வருஷங்களில் ஆயுள் முழுதும் எனக்குச் செய்ய வேண்டிய பணிகளைச் செய்துவிடுவது என்று என்னை இன்ப வாரிதியில் அமிழ்த்து விட்டு மறைந்தாள்.


அவள் மறைவுக்கும் நானே காரணமாக இருந்திருப்பேனோ! ஐயோ! இதை நினைக்கவே முடியவில்லையே!

கலியாணமாகி இரண்டு வருஷங்களாகி யும் தனக்குக் குழந்தை பிறக்கவில்லையே என்று ஏங்க ஆரம்பித்தாள். மேலும் அடிக் கடி வயிற்றுவலியால் சிரமப்பட்டாள்.

"என்ன சீதா! நீ என்ன பாட்டியாகி விட்டாயா? கொஞ்ச நாட்கள்தான் குழந்தை குட்டி என்ற பிடுங்கல் இல்லாமல் ஜாலியாக இருப்போமே!" என்று கேலி செய்வதுபோல் சொல்லி அவளைத் தேற்றுவேன்.

அவளுக்கு இருந்த ஏக்கத்தைத் தணிப்பதற் காகப் பிரபல டாக்டரிடம் சீதாவை அழைத்துக் கொண்டு போனேன்.

அந்த டாக்டர் என் சீதாவைச் சோதித்துப் பார்த்து விட்டு என்னிடம் தனியாகப் பேசி



சூலங்குடி ஸ்ரீ ஜி. விசுவநாதன் அவர்களின் குமாரத்தி சௌ. சாரதாவுக்கும், புதுதில்லி மத்திய சர்க்கார் காரியாலய அதிகாரியும், சென்னை அட்வகேட் ஸ்ரீ டி. ஆர். சுந்தரம் அவர்களின் குமாரனுமான சிரஞ்சீவி டி. எஸ். ஸ்ரீனிவாசனுக்கும் ஜூலை மாதம் மயிலை, வெங்கடேச அக்ரகாரத்தில் திருமணம் சிறப்பாக நடந்தேறியது. வாழ்க மணமக்கள்!

போன்ற விஷயத்தைச் சொன்னார். என் சீதாவுக்கு வயிற்றில் ஒரு கட்டி இருக்கிறதாம். அதனால் அவளுக்குக் குழந்தையே பிறக்காதாம். அந்தக் கட்டியை ஆப்பரேஷன் செய்து எடுக்காவிட்டால் உயிருக்கே கூடிய சீக்கிரம் ஆபத்து நேரலாம் என்று பளிச்சென்று சொன்னார்.

உலகமே சுழல்வது போல் தோன்றியது. சீதாவிடம் அவர் சொன்னதையே அடியோடு மறைத்துவிட்டேன். ஒரு ஆப்பரேஷன் செய்து கொண்டால் குழந்தை பிறக்கும் என்று டாக்டர் சொன்னதாகப் பச்சைப் பொய் ஒன்றைக் கூசாமல் சொன்னேன்.

அவள் சந்தோஷமாக ஆப்பரேஷன் செய்து கொள்ளச் சம்மதித்தாள். "உங்களைப்போல் ஒரு பிரதிபிம்பம் கிடைக்க வேண்டுமானால் கொஞ்சம் கஷ்டப்பட்டுத்தான் ஆகவேண்டும்!" என்று தைரியமாகச் சொன்னாள்.

ஆப்பரேஷன் வெற்றிகரமாக நடந்தேறியது. நான்காம் நாள் திடீரென்று ஜுன்னி கண்டது. உயிர் பிரியும் தருணம். பேச முடியவில்லை. திக்கித் திணறி, "உங்களை விட்டுப் பிரிய மனமே வரவில்லை. நீங்கள் கட்டாயம் இன்னொரு கலியாணம் செய்து கொள்ள வேண்டும். அவள் வயிற்றில் நான் மீண்டும் பிறந்து உங்களிடமே வந்துவிடுவேன்!" என்று சொல்லி உயிரை விட்டாள் பத்தினித்தங்கம் சீதா.

நான் கதறினேன். முட்டிக் கொண்டேன். நானே அவளுக்கு எமனாக இருந்தேனே என்று நெஞ்சில் ஈரம் உலரும் வரையில் அழுது தீர்த்தேன். பயன் ஒன்றுமில்லை.

இருபத்தைந்து வயது கூடப் பூர்த்தியாகாமல் இருந்த என்னைப் பெண்ணைப் பெற்றவர்கள் விட்டுவைக்க மாட்டேனென்றார்கள். என் வயதான தாயார் வேறு மறு மணத்தைப் பற்றி ஓயாமல் நச்சரிக்கலானாள்.

"நீ வீடும் விளக்குமாக இருந்தால்தான் சீதாவின் ஆத்மா சாந்தியடையும். அவள் தங்கமான பெண். நீ நன்றாக இருக்க வேண்டுமென்பதுதானே அவளுடைய லட்சியம்?" என்று என் தாயார் பலவாறாகப் போதித்து என் மனத்தைக் கலையச்செய்தாள்.

பத்மாவைப் பார்த்தவுடன் அவளை வேண்டாமென்று நிராகரிக்க மனசு வரவில்லை. அரை மனத்துடன் கலியாணத்துக்குச் சம்மதித்தேன். ஆனால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் என்னுடைய நெஞ்சு பட்டபாடு பகவானுக்குத்தான் தெரியும்.

மாலையில் நலங்கு இட வேண்டுமென்று பெண்கள் எல்லாருமாக முறையிட்டார்கள். கண்டிப்புடன் மறுத்து விட்டேன்.

பத்மா நாணிக்கொண்டு ஒரு கையில் பால் டம்ளரும் இன்னொரு கையில் பழத் துண்டங்கள் உள்ள தட்டுமாக நான் அமர்ந்திருந்த கட்டிலுக் கருகில் வந்து நின்று கொண்டிருந்தாள்.

"பத்மா!" என்று கூப்பிட்டேன். என் குரலில் காதலின் சக்தியோ, அன்பின் அடையாளமோ இல்லாத வறட்டுத்தனத்தை அந்தப் பெண்ணும் அறிந்திருப்பாள்.

கலவரத்துடன் என்னைப் பார்த்தாள்.

"நான் ஏற்கனவே கலியாணம் ஆனவன் என்பது உனக்குத் தெரியுமல்லவா?"

தெரியும் என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினாள்.

"சீதா என் முதல் மனைவி. என் லட்சிய மனைவியாக, என் உற்ற தோழியாக இருந்து அவள் இருந்த சொற்ப நாட்களைச் சுவர்க்க போக மாக்கி விட்டுப் போய்விட்டாள். அவளுடைய பிரிவின் துக்கம் எனக்கு இன்னும் ஆறவில்லை. இப்போதைக்கு உன்னை அவள் ஸ்தானத்தில் வைத்துப் பார்க்க முடியவில்லை. என் மனம் மரத்துக் கிடக்கிறது. அன்பையும் காதலையும் என்னிடமிருந்து எதிர்பார்க்காதே!" என்று சொன்னேன்.

பத்மா அப்படியே திக்பிரமை யடைந்து நின்று விட்டாள். அவள் கையிலிருந்த பால் டம்ளரும் பழங்களும் சிதறின. அவளுடைய அகன்ற பெரிய விழிகள் நீரைக் கக்கின.

"பத்மா! எனக்கு அழுதாலே பிடிக்காது. சீதா ஒருநாள் முகம் கனிந்துக் கண்ணீர் விட்டு நான் பார்த்ததில்லை. முதலில் பார்க்கும் பொழுதே அழுகிறாயே? நான் கீழே போகிறேன்!" என்று படபடப்புடன் சொன்னேன்.

பத்மாவின் கரங்கள் என்னைத் தடுத்தன. கீழே விழுந்து என்னை நமஸ்கரித்தாள். "நீங்கள் கீழே போகவேண்டாம். உங்கள் மனசுப்படி நான் நடந்து கொள்கிறேன். சீதா அக்கா தெய்வமாக இருந்து எனக்குத் துணை செய்வாள் என்று நினைக்கிறேன். என்னை மன்னித்து விடுங்கள்!" என்று துக்கம் நெஞ்சை யடைக்கக் கூறினாள்.

என் மனம் இளகியது. பேசாது கட்டிலில் படுத்துக் கொண்டேன்.

பத்மா என் வாழ்க்கைத் துணைவியாக வந்து ஒரு வருஷம் ஆகிறது. தானும் சீதாவுக்குச் சற்றும் சளைத்தவளல்ல என்று போட்டியிடுவதுபோல் இருந்தது என்னிடம் அவள் காட்டிய அன்பும் மரியாதையும்.

இதுவரையில் அவளை என் மனைவியின் ஸ்தானத்தில் நிறுத்தவில்லை.



பத்மா எனக்கு வேண்டிய சிசுருஷை யெல்லாம் செய்வாள். படுக்கப்போகும் வரை என் தேவையைக் கவனிப்பாள். சீதா என் உயிர் நாடி என்று அறிந்தபின் அவளுடைய படத்தைத் துடைத்து மலர்மாலை அணிவித்து வைப்பாள். நான் பத்மாவுடன் சிரித்துப் பேசுவதோ அவளை அழைத்துக் கொண்டு உல்லாசமாக வெளியே போவதோ ஒன்றும் கிடையாது.

பத்மாவின் தந்தை அவளைப் பார்க்க வந்திருந்தார். "பத்மா ரொம்ப இளைத்துப் போயிருக்கிறாள். அவளை ஒரு மாதம் என்னுடன் வைத்திருந்து அனுப்பலாம் என்று நினைக்கிறேன்!" என்று என்னிடம் கேட்டார்.

"தாராளமாக அழைத்துப் போங்களேன்!" என்றேன். பத்மா எனக்கும் அவள் தந்தைக்கும் உணவு பரிமாறிக் கொண்டிருந்தாள். பாவம்! இளைத்துத்தான் போயிருந்தாள். என்னைக் கலியாணம் செய்துகொண்டு என்ன சுகம் அடைந்திருக்கிறாள்?

பத்மா ஊருக்குப்போய் ஒரு மாதம் ஆகிவிட்டது. வீடு சூன்யமாக ஆகிவிட்டது. பத்மா என்னையும் அறியாமல் என் இதயத்தில் ஒரு ஸ்தானத்தை ஏற்படுத்திக் கொண்டுவிட்டாள் என்பதை அப்பொழுதுதான் அறிந்தேன்.

பத்மாவிடமிருந்து கடிதம் வரவே இல்லை. நானும் போடவில்லை. அவள் இல்லாமல் அந்த வீட்டில் என்னால் இருக்கவும் முடியவில்லை. வரச்சொல்லி எழுதலாமா என்று பன்முறை யோசித்தேன். அதிகமான அன்பை அறியாமல் செலுத்தக் கூடாது என்று மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டேன்.

அன்று ஏனோ மனம் சஞ்சலப் பட்டது. ஏதோ ஏக்கம் என்னை வாட்டியது. சீதாவின் படத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன். "ஐயோ, சீதா! என்னைச் சித்திரவதை செய்கிறாயே! பத்மாவை உன் ஸ்தானத்தில் வைத்து உனக்குத் துரோகம் செய்யக் கூடாதென்று வைராக்கியம் வைத்திருக்கிறேன். பத்மா என்னிடம் நடந்து கொள்வதைப் பார்த்தால் என் மனம் நெகிழ்ந்துவிடும் போலிருக்கிறதே! என்னையும் உன்னுடன் அழைத்துக் கொண்டு விடேன்!" என்று அவள் படத்தினருகில் நெஞ்சின் பாரம் குறையுமளவும் முறையிட்டேன். விளக்கணைத்துவிட்டுப்படுக்கையில் படுத்துக் கொண்டேன்.

அறை முழுவதும் கம்மென்று வாசனை வீசியது. மெட்டி சத்தம் இனிமையாகக் கேட்டது. கை வளைகள் ஒன்றோடொன்று கலகல வென்று கலக்கும் ஓசை இன்ப லாகிரியை உண்டாக்கியது. நெற்றியில் மெல்லிய கை தடவுதல் மனத்துக்கு இதமாயிருந்தது. "யாரது? சீதாவா? சீதா என்னை விட்டுப் போய் விட்டாயென்று நினைத்தேனே? போகவில்லையா? என்னிடம் வந்து விட்டாயா? இனி என்னை விட்டுப் போக மாட்டாயல்லவா?" சீதாவின் கையை இறுகப் பிடித்து அணைத்துக் கொண்டேன்.

"நீங்கள் ரொம்பப் பொல்லாதவர்!" என்று சிணுங்கினாள் சீதா.

"ஏன் சீதா! நீயா என்னைப் பார்த்து அப்படிச் சொல்லுகிறாய்?" என்றேன்.

"பத்மா எனக்குப் பிரதிநிதியாகத்தானே வந்திருக்கிறாள். அவளுக்குக் கொஞ்சமேனும் சந்தோஷத்தைக் கொடுத்தீர்களா? நாம் எவ்வளவு சந்தோஷமாக இருந்தோம். நம் காதலைப்பற்றி மெரினா கடற்கரையும் சென்னைப் பூங்காவும் காவியம் பாடுமே! இளம் பெண் பத்மாவின் நெஞ்சில் எத்தனை ஆசையிருக்கிறதோ? அதைக் கொஞ்சமேனும் நினைத்துப் பார்த்தீர்களா? இனியாவது பத்மாவைச் சந்தோஷமாக வைத்துக் கொண்டால் தான் எனக்குத் திருப்தி! தெரிந்ததா!"

"நான் இத்தனை நாட்களாகப் பத்மாவிடம் பராமுகமாக இருந்தது தப்புத்தான் சீதா! உனக்குத் திருப்தியளிக்கும் எந்தக் காரியத்தையும் செய்யத் தயங்க மாட்டேனென்று தான் உனக்குத் தெரியுமே! நிச்சயமாகப் பத்மாவை என் கண்ணின் கருமணியாகக் காப்பேன்!" என்று உறுதி தந்தேன்.

மெட்டி சத்தம் மறைந்தது. கைவளைகளின் ஒலியைக் காணோம். அறை முழுவதும் இருள் கவ்வியது. திடுக்கிட்டுக் கண்ணை விழித்தேன். சீதா என்னிடம் பேசியது கனவில் என்பதை அறிந்து கொள்ளச் சற்று நேரம் சென்றது.

மறுநாளே பத்மாவின் ஊருக்குச் சென்றேன். அவளைக் கையோடு அழைத்து வர எண்ணியே விரைந்தேன். அங்கு நான் கண்ட காட்சியை எப்படிச் சொல்வேன்? பத்மா எலும்பும் தோலுமாகப் படுக்கையில் கிடந்தாள். எனக்கு ஏன் தெரிவிக்கவில்லை என்று என் மாமனாரைக் கோபித்துக்கொண்டேன்.

பத்மாவைத் திடீரென்று இதய நோய் தாக்கிப் படுக்கையில் தள்ளி விட்டது என்றும் அவள்தான் எனக்குக் கண்டிப்பாகத் தெரியப் படுத்தக் கூடாது என்று சொல்லி விட்டதாகவும் அறிந்தேன்.

ஒரு வருஷமாக நான் காட்டாத அன்பை யெல்லாம் பத்மாவின்மீது அள்ளிச் சொரிந்தேன். அவள் பக்கத்திலேயே உட்கார்ந்து வேடிக்கை வேடிக்கையாகப் பேசினேன்.

"பத்மா! உனக்குக் கொஞ்சம் குணமானதும் சென்னைக்கு அழைத்துக் கொண்டுபோய் விடுவேன். உன் மதிப்பை அறியாத மூடனாக இருந்து விட்டேன். சீதாதான் கனவின் ரூபமாக என் கண்களைத் திறந்து விட்டாள். இனி உனக்கு ஒரு குறைவுமின்றிக் காப்பேன்" என்று அன்புடன் சொன்னேன்.

"என்னவோ நான் இத்தனைக்கும் அருகதையா என்று தோன்றுகிறது. இந்த சந்தோஷத்தைத் தாங்கவே சக்தியில்லை! என் பல நாளையக் கனவு நினைவாகி விட்டது. நீங்கள் என்னிடம் அன்பு காட்டினீர்கள் என்ற இன்ப நினைவு ஒன்றே போதும்!" என்று மெதுவாகச் சொல்லி வந்தவள் திடீரென்று பேசுவதை நிறுத்தி விட்டாள்.

திடுக்கிட்டு அவளை நோக்கினேன்; கையை இதயத்தில் வைத்து அப்படியே விறைத்துப் போய் விட்டாள். கண்கள் நிலைகுத்தி நின்றன. உடல் துவண்டு போய் விட்டது.

பத்மாவின் பெற்றோர் அவள்மேல் கதறி விழுந்தனர். எனக்கு அழக்கூடச் சக்தியில்லை. விதி என்னைப் பார்த்துச் சிரித்தது!

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10 for the Proprietors Messrs Bharathan Publications Private Limited

Managing Editor: T. Sadasivam.

ஆரோக்கியத்தை விரும்புவோர் எப்பொழுதும் லைப்பாய் சோப் உபயோகித்தே நீராடுவோர்

விளையாட்டுக்கள் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதவை — ஆனால் விளையாடும்போதாகட்டும், வேலை செய்யும்போதாகட்டும் நாம் அழுக்காகி விடுவது சகஜம். நம் ஆரோக்கியத்திற்கு நிரந்தரமாக ஆபத்து விளைவிக்கும் நோய்க் கிருமிகள் அழுக்கில் இருக்கின்றன. அழுக்கிலுள்ள கிருமிகளைக் கழுவிக்களைந்து உங்களைக் காப்பது லைப்பாய் சோப்.

லைப்பாய் சோப் தேய்த்து ஸ்நானம் செய்வதால் ஓர் புதுமலர்ச்சியை உங்களால் உணரமுடியும்; சோர்வு நீங்கும். தினந்தோறும் லைப்பாய் சோப் உபயோகித்து நீராடுங்கள்—அழுக்கிலுள்ள கிருமிகளிடமிருந்து உங்கள் ஆரோக்கியத்தைக் காத்துக்கொள்ளுங்கள்.




L. 265-50 TM

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon


உங்கள் மனதிற்குகந்த பவுடர்
வசீகர நறுமணங் கமழ்வதான...

பியர்ஸ் டால்கம்





கொள்ளை கொள்ளும் நறுமணம், சருமத்தோடு குலவும் இன்பம், பியர்ஸ் மென்மை — இவ்வளவையும் உங்களுக்கு அளித்திடுவது **பியர்ஸ் டால்கம்!** உன்னதமாக நறுமணமூட்டப் பெற்ற இந்தப் பவுடரை உபயோகித்தால் கோடையின் உச்சநிலையிலும் நீங்கள் மாறாத புது மலர்ச்சியுடன் நாள் முழுவதும் மிளிர முடியும். இள மஞ்சள் நிறமும் பச்சை நிறமும் எடுப்பாக அமையப்பெற்ற டின்களில் வரும் **பியர்ஸ் டால்கம்** பவுடரை வாங்குங்கள்.



மேனியின் பராமரிப்புக்கு, கிளிசரின் அடங்கிய **பியர்ஸ் சோப்** உபயோகியுங்கள். தூய்மையே உருவான சிறந்த சோப் பியர்ஸ் தான் என்பது உங்களுக்கே புலப்படும்!

லண்டனிலுள்ள ஏ. & எப். பியர்ஸ் லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரித்தது PSP. 2-50 TM